பக்கங்கள்: 28
விலை: 30

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 25 மார்கழி 05ஆம் நாள் வெள்ளிக்கிழமை 21 டிசெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## பல்கலை மாணவர்களின் பேரணியில் கண்ணீர்ப்புகை

கொழும்பு, டிசெ. 21

பல்கலைக் கழகங்கள் பலவற்றில்நிலவும்பிரச்சினை களுக்குத் தீர்வு >> 06

## அரசியல் வெறுப்பின் உச்சம்

- மீண்டும் காக்க வைத்தார் மைத்திரி
- ஊடகங்களுக்கு மீண்டும் கதவடைப்பு
- பதவியேற்போரைத் தவிர ஏனையோருக்கு அனுமதி மறுப்பு
- அறைக்குள் ஒவ்வொருவராக அழைக்கப்பட்டு பதவிப்பிரமாணம்

கொழும்பு, டிசெ. 21

ரணில்தலைமையிலான அரசின் அமைச்சரவை நியமனம் அரச தலைவர் செயலகத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று இடம்பெற்றது. நீண்ட இழுபறியின் பின்னர் >> 06

# வடக்கு மக்கள் புலிகள் அல்லர்

### அவர்கள் மீதான தெற்கின் பார்வையில் மாற்றம் வேண்டும் என்கிறார் அபேவர்தன

கொழும்பு, டிசெம்பர் 21

தெற்கில் கிளர்ச்சி செய்தவர்கள் மீதான பார்வை மாற்றமடைந்ததைப்போல, வடக்கில் போரில் ஈடுபட்டவர்கள் மீதான பார்வையிலும் மாற்றம் அவசியம். வடக்கு மக்களை இனியும் புலிகளாகப் பார்க்கும் கண்ணோட்டத்தை மாற்றிக் கொள்ளவேண்டும். இவ்வாறு அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்ற பின்னர், அலரிமாளிகையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். >> 06



## நினைத்ததை சாதித்தார் அரச தலைவர் மைத்திரி

- சரத் பொன்சேகாவுக்கு 'வெட்டு'
- சு.கவிலிருந்து தாவியோரும் 'அவுட்'
- சட்டம், ஒழுங்கை தன்வசப்படுத்தினார்

கொழும்பு, டிசெ. 21

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ரணில் தலைமையிலான அமைச்சரவை நியமனத்தில் நினைத்ததை, கூறியதைச் சாதித்துள்ளார். அரச தலைவரின் எண்ணத்துக்கு இம்மியளவும் விட்டுக் கொடுக்கமாட்டோம் என்ற ஐக்கிய தேசியக் கட்சி இறுதி நேரத்தில் மைத்திரியிடம் சரணடைந்தது. >> 06

## சபாநாயகரின் முடிவை யாரும் சவாலுக்குட்படுத்த முடியாதாம்

### இப்போது கூறுகிறார் சுசில் பிரேமஜயந்த

கொழும்பு, டிசெ. 21

எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த ராஜபக்சவை அறிவித்த சபாநாயகரின் முடிவை யாரும் சவாலுக்கு உட்படுத்த முடி >> 06

**ஐ.எஸ்.ஐ.எஸ். முழுமையாக தோற்கடிப்பு?**

விரிவு -பக்.14, 15

### அடுத்த 4 மாதங்களுக்கான

## இடைக்காலக் கணக்கு அறிக்கை நாடாளுமன்றில் இன்று சமர்ப்பிப்பு

### எதிர்க்கட்சித் தலைவர் விவகாரமும் சூடு பிடிக்கும்

கொழும்பு, டிசெ. 21

அடுத்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான இடைக்காலக் கணக்கறிக்கை நிதி அமைச்சர் மங்கள சமரவீர >> 06

## எரிபொருள் விலைச் சூத்திரம் மீண்டும் மாற்றப்படுகிறது

### பதவியேற்றதும் மங்கள அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 21

எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படுத்தும் விலைச் சூத்திரம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். விலைச் சூத்திரம் நாடாளுமன்றத்தில் இன்று சமர்பிக்கப்படும். இவ்வாறு >> 06



## அமைச்சுப் பதவிகளை அதிகரிக்க ஐக்கிய தேசியக் கட்சி வியூகம்!

கொழும்பு, டிசெ. 21

அமைச்சுப் பதவிகளை அதிகரிப்பதற்காக கூட்டு அரசு அமைக்கும் முயற்சிகளில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டுள்ளது. இதற்காக நாடாளுமன்றத்தில் ஓர் ஆசனத்தை மாத்திரம் வைத்துள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் கூட்டு அரசு அமைப்பது தொடர்பாக சட்டத்துறை நிபுணர்களுடன் ஐக்கிய தேசியக் கட்சி ஆலோசனை நடத்தி வருகிறது என்று அந்தக் கட்சியின் அமைச்சர் நவீன் திசநாயக்க தெரிவித்துள்ளார். >> 06

## புத்துயிர்ப்புப் பெறுமா இலங்கைக் கிரிக்கெட்?

>> 06

# வடக்கு அபிவிருத்தி மற்றும் மீள்குடியேற்றம் ரணில் வசம்

### 29 அமைச்சர்கள் நேற்றுப் பதவியேற்பு

யாழ்ப்பாணம், டிசெ. 21

கூட்டு அரசின் காலத்தில் சுவாமிநாதன் வகித்த வடக்கு அபிவிருத்தி, மீள்குடியேற்றம், மறுவாழ்வு, இந்து சமய விவகார அமைச்சுப் பதவி தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும், அமைச்சர் மனோகணேசனும் பகிர்ந்து கொண்டுள்ளனர். வடக்கு அபிவிருத்தி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சுப் பொறுப்புக்கள், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வசம் சென்றுள்ளன. இந்து சமய விவகார அமைச்சு மனோகணேசன் >> 06



### கிளிநொச்சி பன்னங்கண்டிப் பகுதியில்

## 153.8 கிலோ கஞ்சாவுடன் சந்தேகநபர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 21

கிளிநொச்சி பன்னங்கண்டிப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து 153.8 கிலோகிராம் கேரளக் கஞ்சாவுடன் நபரொருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். >> 06



# புதிய அமைச்சரவை நேற்றுப் பதவியேற்பு

**கொழும்பு, டிசெ. 21**

**தலைமைஅமைச்சர்ரணில்விக்கிரமசிங்கதலைமையிலானபுதியஅமைச்சரவைஅரசதலைவர்மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றது. புதிய அமைச்சரவையின் முழு விவரங்கள் இங்கு தரப்படுகின்றன.**



ரணில் விக்கிரமசிங்க - தேசிய கொள்கைகள், பொருளாதார விவகார, மறுவாழ்வு, புனரமைப்பு, வடக்கு அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்.



மங்களசமரவீர - நிதிமற்றும்ஊடகத்துறை அமைச்சர்.



திலக் மாரப்பன - அயலுறவுத்துறை அமைச்சர்



ஹரின் பெர்னான்டோ - தொலைத்தொடர்புகள், டிஜிட்டல் உட்கட்டமைப்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, விளையாட்டுத்துறை அமைச்சர்.



ராஜித சேனாரத்ன - சுகாதார, ஊட்டச்சத்து, மற்றும் சுதேச அபிவிருத்தி அமைச்சர்.



ரவி கருணாநாயக்க - சக்தி, மின் சக்தி மற்றும் வணிக அபிவிருத்தி அமைச்சர்.



ஜோன்அமரதுங்க - சுற்றுலா அபிவிருத்தி, வனவாழ் உயிரினங்கள் மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சர்.



காமினிஜெயவிக்ரமபெரேரா - புத்த சாசன, வயம்ப அபிவிருத்தி அமைச்சர்.



லக்ஸ்மன் கிரியெல்ல - அரச நிறுவனங்கள், கண்டிய பாரம்பரிய, கண்டி அபிவிருத்தி அமைச்சர்



ரவூப் ஹக்கீம் - நகர திட்டமிடல், நீர் விநியோக, உயர்கல்வி அமைச்சர்



வஜிர அபேவர்த்தன - உள்நாட்டு விவகாரமற்றும்மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சர்.



றிசாத்பதியுதீன் - கைத்தொழில்மற்றும்வணிக, மீள்குடியேற்றமற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்.



சம்பிக்க ரணவக்க - பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.



நவீன் திசநாயக்க - பெருந்தோட்ட கைத்தொழில்துறை அமைச்சர்.



பி. ஹரிசன் - விவசாய, கிராமிய பொருளாதார விவகார, கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி மற்றும்கடல்வளங்கள்அபிவிருத்தி அமைச்சர்.



கபீர் ஹாசிம் - நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி, பெற்றோலியவளங்கள் அபிவிருத்தி அமைச்சர்



ரஞ்சித் மத்தும பண்டார - பொது நிர்வாக, மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர்.



கயந்தகருணாதிலக - காணிமற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.



சஜித் பிரேமதாச - வீடமைப்பு, கலாசார அலுவல்கள் அமைச்சர்.



அர்ஜுனரணதுங்க - போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்திப் போக்குவரத்து அமைச்சர்.



பழனி திகாம்பரம் - மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி அமைச்சர்



சந்திராணி பண்டார - மகளிர் மற்றும் சிறுவர்கள் மேம்பாடு மற்றும் வறட்சி வலய அபிவிருத்தி அமைச்சர்



தலதா அத்துகோரள - நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்



அகில விராஜ் காரியவசம் - கல்வி அமைச்சர்



சாகல ரத்நாயக்க - துறைமுக, கடல் நடவடிக்கை மற்றும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அமைச்சர்



மனோ கணேசன் - தேசிய ஒருமைப்பாட்டு, அரசமொழிகள், சமூக முன்னேற்ற, இந்து மத விவகார அமைச்சர்.



தயாகமகே - தொழிலாளர், தொழிற்சங்கஒருங்கிணைப்புமற்றும்சமூக மேம்பாட்டு அமைச்சர்



மலிக் சமரவிக்ரம - அபிவிருத்தி மூலோபாய, அனைத்துலகவணிக, விஞ்ஞான, மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்.



அப்துல் ஹலீம் மொஹமட் ஹாசீம் - அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர்.

## புதிய அமைச்சரவையால் மாற்றங்கள் ஏற்படமாட்டா

### நாடாளுமன்ற உறுப்பினர் செகான் சேமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 21

தலைமைஅமைச்சர்ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அமைச்சரவையால் எவ்விதமானமாற்றங்களையும்இடைப்பட்டகாலத்தில் நாட்டில் மேற்கொள்ள முடியாது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முக்கியமான பொறுப்புக்களை தனக்குக் கீழ் கொண்டுவந்துள்ளமையானது ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாடுகளுக்கு தடையாக அமையும் என நாடாளுமன்ற உறுப்பினர் செகான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டுஅரசில்ஐக்கியதேசியக்கட்சிதனதுவிருப்பத்தின் பெயரில் செயற்பட்டமைக்கு முக்கிய காரணம் நாடாளுமன்றத்தில் பலம் வாய்ந்த எதிர்க்கட்சி செயற்படவில்லைஎன்பதால்தான். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும், மக்கள் விடுதலை முன்னணியும் அரசின் பங்காளிக் கட்சிகளாகச் செயற்பட்டன. ஆனால் நிலமை இன்றுமாற்றமடைந்துவிட்டது. ஆளும்தரப்பினருக்கு இணையாகபலம்வாய்ந்த எதிர்க்கட்சி தோற்றம்பெற்றுள்ளது. அத்துடன் நிறைவேற்று அதிகாரமும் எமது பக்கம் உள்ளமை ஐக்கியதேசியக்கட்சிக்குப்பெரும் அச்சுறுத்ததாலாகக் காணப்படுகின்றது.

தலைமைஅமைச்சர்ரணில்விக்கிரமசிங்கதலைமையிலான அரசு 2015ஆம் ஆண்டு தொடக்கம் நிறைவேற்று அதிகாரத்தைச் செயற்படுத்தி வந்தது. இவர்களது ஆட்சிக் காலத்தில் நாட்டில் எவ்விதமான அபிவிருத்திகளும், மக்களின் வாழ்க்கைத் தரமும் சீரான முறையில் முன்னெடுக்கப்படவில்லை. முறையற்ற பொருளாதார முகாமைத்துவத்தை பின்பற்றியமையின் காரணமாகநடுத்தரமக்களின்வாழ்க்கைச்செலவுகள் தொடர்ந்து உயர்வடைந்தே காணப்பட்டன.

மறுபுறம் உள்நாட்டு உற்பத்திகளை முற்றாக அழித்து பன்னாட்டு உற்பத்திகளை வளப்படுத்துவதே தலைமைஅமைச்சர்ரணிலின்பொருளாதாரக்கொள்கைகளாக காணப்பட்டன. இதனால் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இன்று பல தேசிய உற்பத்திகள் முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளன. நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற பல அரசியல் மற்றும்பொருளாதாரபிரச்சினைகளுக்கு ஐக்கியதேசியக் கட்சியின் முறையற்ற செயற்பாடுகளே காரணம். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த விடயத்தைக்கருத்தில்கொண்டே ஆட்சிமாற்றத்தைஏற்படுத்தி இடைக்கால அரசின் ஊடாக கடந்த காலத் தவறுகளைத்திருத்திக்கொள்ள முயற்சித்தார். ஆனால்அவை முடியாமல்போய்விட்டன. 2020ஆம்ஆண்டுபொதுத் தேர்தல் இடம்பெறும் வரையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகமே செயற்படும். தற்போதைய புதிய அமைச்சரவையின்ஊடாகநாட்டிலஎவ்விதஅபிவிருத்திகளையும் குறிப்பிட்ட காலத்துக்குள் முன்னெடுக்க முடியாது. அமைச்சுபதவிநியமனம்தொடர்பில்ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எதிர்வரும் நாள்களில் பெரிய பிளவுகள் ஏற்படும் இவர்களது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளவே காலம் போதாது. எவ்வாறு இருப்பினும் கடந்த காலத்தைப் போன்று ஐக்கிய தேசிய கட்சியால் தற்போது முழுமையாக அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது. பெரிய எதிர்ப்புக்களே தொடர்ந்து பல்வேறு வழிகளில் காணப்படுகின்றன.

அமைச்சுக்களை ஒதுக்கும் பொழுது அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேனஐக்கியதேசியக்கட்சியினரின் செயற்பாடுகளுக்கு தடை விதிக்கும் அதிகாரங்கள் கொண்ட சட்டவொழுங்கு அமைச்சைத் தன்வசம் வைத்துக் கொண்டமை வரவேற்கத்தக்கது. கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியினர் அரசியல் பழிவாங்கல்களை அதிகார பூர்வமாக மேற்கொண்டனர். அரச தலைவரின் செயற்பாடு அனைவரையும் பாதுகாத்துள்ளது.

மேற்குலகத்தவர்களுக்கும், விடுதலைப் புலிகள் அமைப்பினருக்கும் ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியினர் இனி ஒருபோதும் செயற்பட முடியாது. நாடாளுமன்றத்தில் இனி பலம் மற்றும் பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி செயற்படுவதால் பலரது செயற்பாடுகள் முற்றாக நிராகரிக்கப்படும். தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும், மக்கள் விடுதலை முன்னணியினரும்ஐக்கியதேசியக்கட்சியில்அமைச்சு பதவிகளை பெற்று தொடர்ந்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைப் பாதுகாக்கலாம். எங்களுக்கு ஒரு ஆட்சேபனையும் கிடையாது" - என்றார்.

(ம-61)

# தகரங்களில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வரும் சமையல் எண்ணெய் தொடர்பில் எச்சரிக்கை!

## மக்கள், வர்த்தகர்கள் கவனம் செலுத்தவேண்டுமென்று சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்

தென்மராட்சி, டிசெ. 21

**தகரங்களில் அடைக்கப்பட்டு யாழ்ப்பாண மாவட்டத்துக்குக் கொண்டுவரப்படும் எண்ணெய் வகைகள் அனைத்தும் சுகாதாரப் பரிசோதகர்களின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன. அதற்கான அறிவித்தல் சுகாதாரத் திணைக்களத்தினரால்விடுக்கப்பட்டுள்ளது. தகரங்களில்அடைக்கப்பட்ட இருபரல்களில்வாகனஎண்ணெய்(ஓயில்) கலந்துள்ளமை கண்டறியப்பட்டதையடுத்து இந்த உத்தரவு கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று சுகாதாரத் திணைக்களம் தெரிவித்தது.**

210 லீற்றர் கொள்ளளவுடைய எண்ணெய்த் தகரங்களில்அடைக்கப்பட்டுவரும்தேங்காய் எண்ணெய், மரக்கறிஎண்ணெய், பாம்ஒயில் போன்றன பொதுமக்களின் பாவனைக்கு உகந்தவையா?என்பதை, அவற்றைக்கொள்வனவு செய்யும் வர்த்தகர்கள் பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டும்.

உற்பத்தித் திகதி, பொதி செய்யப்பட்ட திகதி, காலாவதித் திகதி, தொகுதி இலக்கம் போன்றவை அடங்கிய சுட்டுத்துண்டு இல்லாது கொண்டுவரப்படும் எண்ணெய்த் தகரங்களை வர்த்தகர்கள் கொள்வனவு செய்யக்கூடாது. அவற்றை உற்பத்தியாளர்களும் கவனித்தல் வேண்டும். தவறின் அவற்றின் உற்பத்தியாளர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும்எண்ணெய்வகைகள்என்றால் கூடஉற்பத்திசெய்தநாடு, கொள்வனவுசெய்த திகதி, இறக்குமதியாளர்விவரம்போன்றவை தகரத்தில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்றும் சுகாதாரத் திணைக்களம் கண்டிப்பான அறிவித்தலை விடுத்துள்ளது.

**ரூபா 120, 000 தண்டம்**

வவுனியாவிலுள்ள வர்த்தக நிலையத்தில் சுகாதாரப் பகுதியினர் கடந்தவாரம் மேற்கொண்ட பரிசோதனையின்போதுதேங்காய் எண்ணெய் வைக்கப்பட்டிருந்த தகரத்தில் வாகனங்களுக்குப் பயன்படுத்தும் எரிபொருள் எண்ணெய்ப் (ஓயில்) படிவு காணப்பட்டது. அவ்வாறு இரு எண்ணெய்த் தகரங்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றை வைத்திருந்த வர்த்தகருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பொதுமக்கள் உணவுத் தேவைக்குப் பயன்படுத்தும் உணவுப் பொருள்களில் மக்களுக்குப்பாதிப்புஏற்படாத வகையில்அவற்றைப்பார்வையிட்டுக்கொள்வனவு செய்யவேண்டியது வர்த்தகர்களின் பொறுப்பு. வர்த்தகநிலையம்வரைகொண்டு வந்து இறக்குகிறார்கள் என்று கவனிக்காது இருக்கக்கூடாது என்று வர்த்தகர் எச்சரிக்கைசெய்யப்பட்டார். கவனிக்காதுஅவற்றைக்கொள்வனவுசெய்த குற்றத்துக்காக வர்த்தகருக்கு நீதிமன்றுஒருலட்சத்து20ஆயிரம்ரூபா தண்டம்விதித்தது.

இதனையடுத்துயாழ்ப்பாணப்பிராந்தியசுகாதாரமருத்துவஅதிகாரிபணியகத்தினர்நேற்றுமுன்தினம்உரும்பிராயில்நடத்தியதிடீர்பரிசோதனையின்போது சுட்டுத்துண்டு இன்றி விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 26 எண்ணெய்த் தகரங்களைக் கைப்பற்றினர். இந்த வர்த்தகருக்கு எதிராகநீதிமன்றில்வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதுமட்டுமன்றி, நடமாடும் வாகனங்களில் வர்த்தகநிலையங்களுக்குஎண்ணெய்வகைகள் வழங்குவோர் உரிய சுட்டுத்துண்டு இன்றி விற்பனைக்குக் கொண்டு செல்ல வேண்டாமென்றுஅறிவுறுத்தப்படுகின்றனர். அதனைமீறிக் கொண்டு செல்லும் வேளையில் பிடிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர்-என்றுசுகாதாரத்திணைக்களம்மேலும்தெரிவித்துள்ளது. (4.9)



## செம்மலையில் புத்தர் சிலை நிறுவியமை தொடர்பில் விசாரணை நடத்தப் பணிப்பு

### அரச தலைவர் செயலணி ஐ.ஜிக்கு கடிதம்

யாழ்ப்பாணம், டிசெ. 21

முல்லைத்தீவு மாவட்டத்தின் செம்மலை நீராவிப் பிள்ளையார் ஆலயத்தில் பலவந்தமாக நிறுவப்பட்டுள்ள புத்தர் சிலை தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தி அறிக்கை சமர்பிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு, வடகிழக்கு அரச தலைவர் செயலணியால் எழுத்துமூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசதலைவர் செயலணியின் கூட்டம் கடந்த 17ஆம் திகதி இடம்பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர்திருமதிசாந்திசிறீஸ்கந்தராசா, புத்தர் சிலை விவகாரத்தை எழுப்பியிருந்தார்.

2016ஆம் ஆண்டு வரையில் நீராவிப் பிள்ளையார் ஆலயப் பகுதியை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். அந்தப் பகுதியில் புத்தர் சிலை வைக்கப்பட்டது. பிக்கு ஒருவர் அங்கு வழிபாடுகள் நடத்தி வந்தார். இராணுவத்தினர்அங்கிருந்துவெளியேறியபோதும்புத்தர் சிலைஅகற்றப்படவில்லை. நீராவிப்பிள்ளையார்ஆலயத்தில்தற்போதுமிகப்பெரியபுத்தர்சிலைநிறுவப்பட்டுள்ளது. பௌத்தர்களேவசிக்காதபிரதேசத்தில்முன்னெடுக்கப்பட்ட இத்தகைய செயற்பாடுகள் உடனே நிறுத்தப்பட வேண்டும் என்று அரச தலைவர் செயலணிக் கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதுதொடர்பில்முழுமையானவிசாரணைநடத்திஅறிக்கை சமர்பிக்குமாறுஅரசதலைவர்செயலணியால், பொலிஸ்மா அதிபருக்குஎழுத்தில்கடிதம்அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதன்பிரதிகள்வடக்குமாகாணமூத்தபொலிஸ்மாஅதிபர், மாவட்டச் செயலர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். (5.105)

## ஜனவரி 21க்குள் முத்திரைத் தீர்வை செலுத்தத்தவறின் சட்டநடவடிக்கை!

### மாகாண இறைவரித் திணைக்களப் பிரதி ஆணையாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 21

வடக்கு மாகாண நிதி நியதிச் சட்டத்தின் கீழ் முத்திரைக் கட்டணம் அறவிடுவது தொடர்பான ஆவணங்கள், தகவல்களை இதுவரை சமர்ப்பிக்கத் தவறியவர்கள், மேலதிக முத்திரைத் தீர்வையைச் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தும் இதுவரைசெலுத்தத்தவறியவர்களும்எதிர்வரும்ஜனவரி21ஆம் திகதிக்கிடையில் காலஅவகாசம்வழங்கப்படுகின்றது. இந்தத் திகதிக்குள் செலுத்தத் தவறுபவர்களுக்கு எதிராக நிதி நியதிச் சட்டத்தின் கீழ்நீதி மன்றில் குற்றவழக்குத் தொடரப்பட்டுச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு மாகாண இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் கி.யோகேந்திரன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அனுப்பிய செய்திக்குறிப்பில்தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாண இறைவரித் திணைக்களம் 2014 ஆம் ஆண்டில் முதலாம் இலக்க வடக்கு மாகாண நிதி நியதிச் சட்டத்துக்கமைய உருவாக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டு யூலை 8ஆம்திகதிதொடக்கம் செயற்பட்டுவருகின்றது.

இந்தத் திணைக்களத்தின் முதன்மை வரி அறவீடுகளில் உருவாகிய ஆதனக்கைமாற்றத்தின் போதான முத்திரைத் தீர்வை அறவீட்டில் அதிக கவனஞ் செலுத்தப்பட்டுவரும் அதேவேளை, குறைத்துப் பெறுமதியிடப்படுகின்றஉறுதிகள்தொடர்பில்மேலதிகமுத்திரைத் தீர்வை அறவீடும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இவ்வாறுசேகரிக்கப்படும்முத்திரைத் தீர்வை அறவீடுகள் யாவும் அந்தந்தப் பகுதிகளுக்குரிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு (மாநகர சபை, நகர சபைகள், பிரதேச சபைகள்) மீளளிக்கப்பட்டுக் குறித்த பகுதி அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயம்.

ஆதனக்கைமாற்றம்செய்வதற்கு முன்னர்அந்த ஆதனத்துக்காகச் செலுத்தப்பட வேண்டிய முத்திரைக் கட்டணப் பெறுமதி பற்றிய அபிப்பிராயம்ஒன்றுக்காகஎமது அலுவலகத்தில்விண்ணப்பித்து எழுத்திலான அபிப்பிராயம்ஒன்றைப்பெற்று, அதில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு முத்திரைத் தீர்வை செலுத்துவதன் மூலமாக மேற்படி மேலதிக முத்திரைத் தீர்வை அறவீடு தொடர்பில்எழும்சட்டநடவடிக்கைகளிலிருந்துவிலகிக்கொள்ளலாம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)


**BA புதிய பாடத்திட்டம்**

**பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)**

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளது.
- A/L இல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்க தகுதியுடையவர் ஆவர்.
- A/L 2017 பரீட்சை எடுத்தவர்களும், இதற்கு முன்னர் பரீட்சை எடுத்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.
- பதிவு முடிவுத் திகதி 28.12.2018 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
- இக் கற்கை நெறியின் கால எல்லை மூன்று ஆண்டுகளாகும். வருடம் ஒரு பரீட்சை நடைபெறும்.

விவரங்களுக்கு:- S.அருள்நங்கை (நிர்வாகி)

Tel: 021 222 8148
077 314 4762
077 846 9721

**புதிய உயர் கல்வி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

பொலிஸார் சிங்கள மொழியில் எழுதுவதால்

# மொழி உரிமை மீறப்பட்டுள்ளது: தொடர்பான விசாரணை ஜனவரிக்கு

## மனித உரிமைகள் அணைக்குழு நடவடிக்கை

**யாழ்ப்பாணம், டிசெ. 21**

**பொலிஸ் அலுவலர்கள் வீதி விதிமுறை மீறல் பற்றிய தண்டத் பத்திரத்தில் குற்றச்சாட்டுகளைச் சிங்கள மொழியில் எழுதுகின்றனர். வடக்கில் தமிழ் மொழி தெரிந்தவர்களே – சிங்கள மொழி தெரியாதவர்களே அதிகம் உள்ளனர். அவர்களுக்குப் பொலிஸார் சிங்கள மொழியில் எழுதிக் கொடுப்பது புரிவதில்லை. இந்த நிலையில் அவ்வாறு எழுதிய பொலிஸாருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அது பற்றிய விசாரணை நேற்று இடம்பெற்று மேலதிக விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**

வடக்கில் நிர்வாக மொழி தமிழ் மொழியாக இருக்கும்போது தண்டப்பத்திரம் (தடகொல) தமிழில் எழுதப்படாது சிங்கள மொழியில் எழுதப்பட்டுள்ளமை மொழி உரிமை மீறல் என்று முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோப்பாய்ப் பொலிஸாருக்கு எதிரான இந்த முறைப்பாட்டை வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர் சி. தவராசா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் பதிவு செய்திருந்தார்.

ஆணைக்குழுவின் அலுவலகத்தில் பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தலைமையில் அதுகுறித்த விசாரணைகள் நேற்று நடைபெற்றன. கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, முறைப்பாட்டாளரான தவராசா ஆகியோர் அங்கு பிரசன்னமாகி இருந்தனர். சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்ட நிலையில் விசார்ணை எதிர்வரும் ஜனவரி மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் சி. தவராசா ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

"சில தினங்களுக்கு முன்னர் நான் காரில் பயணித்திருந்தேன். திருநெல்வேலியில் கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த போக்குவரத்துப் பொலிஸ் அலுவலர்கள் வழிமறித்தனர். காரின் முன்பக்கக் கண்ணாடியில் வரி அனுமதிப்பத்திரம் காட்சிப்படுத்தவில்லை என்று கூறித் தண்டம் எழுத முற்பட்டனர்.

அதற்கு நான், கண்ணாடியில் ஒட்டிக் காட்சிப்படுத்த வேண்டும் என்று கட்டாயம் இல்லை. நீங்கள் வரி அனுமதிப் பத்திரத்தைக் கேட்டால் அதனை நான் காண்பிக்க முடியும் என்றேன். நான் ஆசனப்பட்டி அணியவில்லை என்று தண்ட்ம் எழுத முற்பட்டனர். அதற்கு அனுமதித்தேன். ஆசனப் பட்டி அணியவில்லை என்பதை அவர்கள் சிங்கள மொழியில் எழுதித்தந்தனர். அத்தோடு "தமது பொறுப்பதிகாரி நாளொன்றுக்குக் குறைந்தது ஐந்து தண்டம் ஆவது எழுத வேண்டும்" என்று எமக்குப் பணித்துள்ளார். அதனாலேயே தண்டம் எழுத வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளோம்" என்று கூறினார்கள்.




எனக்குச் சிங்கள மொழி தெரியாததால் சிங்கள மொழியில் எழுதி இருந்தமையை வாசிக்க முடியவில்லை. அதனால் என் மொழியுரிமை மீறப்பட்டது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தேன். அது பற்றிய விசாரணை நடைபெற்றது. வாகனவரிப்பத்திரம் காட்சிப்படுத்தாமை தண்டப்பணம் செலுத்த வேண்டிய குற்றமில்லை என்பதைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏற்றுக்கொண்டார்.

சிங்கள மொழியில் எழுதக் காரணம் தமிழ் மொழி எழுதத் தெரிந்த பொலிஸ் அலுவலர்கள் இல்லாமையே என்று பொலிஸார் காரணம் தெரிவித்தனர்.

அதற்கு நான் "பொலிஸார் பதவி உயர்வு பெற இரண்டாம் மொழி தெரிந்திருக்க வேண்டும் என்றிருக்கும்போது இரண்டாம் மொழி தெரியவில்லை என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று கூறினேன்.

தமிழ் மொழியில் எழுதிக் கொடுப்பது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூறினார். அதனைத் தொடர்ந்து விசாரணைகள் ஜனவரி மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டன.

(4,37,105)

# வடக்கு நூலகங்களில் 7 பேருக்குத் தரமுயர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 21

வடக்கு மாகாணப் பொது நூலகங்களில் உதவி நூலகர்கள் மற்றும் நூலக உதவியாளர்களாகக் கடமையாற்றியவர்கள் போட்டிப்பரீட்சைத் தெரிவு மூலமாக 7 பேர் அடுத்த தரத்துக்குத் தரமுயர்த்தப்பட்டுள்ளனர் என்று நூலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நூல் நிலையங்களில் உதவி நூலகர்கள் மற்றும் நூலக உதவியாளர்களாகக் கடமையாற்றுபவர்கள் 10 வருடங்களின் பின்னர் தரம் 3 பிரிவுக்குத் தரமுயர்த்தப்படுவார்கள்.

தரமுயர்வுக்கு வெளிவாரியாக ஆள்ச்சேர்ப்புச் செய்யப்படுபவர்கள் க.பொ.த உயர் தரத்தில் மூன்று பாடங்கள் சித்தி, மூன்று வருடங்கள் நூலக டிப்ளோமா கற்கைநெறி நிறைவு, க.பொ.த சாதாரண தரத்தில் தமிழ் மற்றும் கணித பாடங்களில் "சி" சித்தியைப் பெற்றிருக்க வேண்டும். இந்த முறையின் கீழ் வடக்குப் போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

அதில் சித்தியடைந்த 7 பேருக்குத் தற்போது நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (4,7,9)

யாழ்ப்பாணச் சிறையிலிருந்த

# இந்திய மீனவர்கள் எண்மர் எச்சரிக்கப்பட்டு விடுதலை

## இனிமேலும் எல்லை மீறினால் ஒரு வருடச் சிறை என அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தடுப்பிலிருந்த இந்திய மீனவர்கள் 8 பேர் ஊர்காவற்றுறை நீதிமன்றால் நேற்று எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் அவர்கள் தடுப்பில் இருந்தனர்.

இந்தியாவின் பாம்பன் பகுதியைச் சேர்ந்த இவர்கள் கடந்த 14ஆம் திகதி நாட்டுப் படகில் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்திருந்தனர்.

கடல் சீற்றம் காரணமாகவே நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் நுழைந்திருந்தோம் என்றும் கடற்படையினர் தங்களைக் கைது செய்திருந்தனர் என்றும் மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களத்திடம் தங்களைப் பாரப்படுத்தினர் என்றும் மீனவர்கள் தெரிவித்திருந்தனர். அவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று வழக்கை ஆராய்ந்த நீதிவான் ஏ. ஜூட்சன், எட்டு மீனவர்களும் இனிமேல் எல்லை தாண்டி இலங்கைக் கடல் எல்லைக்குள் வரக்கூடாது. மீறி வந்தால் ஓராண்டு கடுங்காவல் தண்டனை வழங்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்து எட்டுப்பேரையும் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கும் வகையில் மீரிகமவுக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.

இவர்களது படகு தொடர்பில் எதிர்வரும் ஜனவரி மாதம் 24ஆம் திகதி விசாரணை இடம்பெறும். அன்றையதினம் படகின் உரிமையாளர் நீதிமன்றில் முற்படவேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார். (4,105,37)

# இந்திய மீனவர்களின் ஆதிக்கம் தொடர்கிறதா?

## குறைவு என்கிறது திணைக்களம்; அதிகம் என்கிறது சமாசம்

யாழ்ப்பாணம், டிசெ. 21

வடக்கு மாகாண மீனவர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய இந்திய மீனவர்களின் ஆதிக்கம் இந்த ஆண்டு வடக்குக் கடற்பரப்பில் மிகமிகக் குறைவடைந்துள்ளது என்று யாழ்ப்பாணக் கடற்றொழில் நீரியல்வளத் துறைத் திணைக்களம் தெரிவிக்கிறது. எனினும், யாழ்ப்பாண மாவட்டக் கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் இதனை மறுக்கிறது. பெருமளவான இந்திய மீனவர்கள் இன்னும் வந்துகொண்டுதான் இருக்கின்றனர் என்று சமாசம் தெரிவிக்கிறது.

இலங்கைக் கடற்பரப்பில் குறிப்பாக வடக்குக் கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் தமிழக மீனவர்கள், தமது இழுவைப் படகுகள் மூலமாக மீன் வளங்களை அள்ளிச் செல்கின்றமை கடந்த ஆண்டுகளில் அதிகரித்திருந்தன. அவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் வரும்போது வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மீனவர்களின் வலைகளை அறுத்துச் செல்லும் சம்பவங்களும் பதிவாகியிருந்தன. மன்னார், பேசாலை, முல்லைத்தீவு, பொக்கணை, மாத்தளன், நெடுந்தீவு, வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, பருத்தித்துறை கடலில் தொழில் புரியும் மீனவர்களுக்கே இதனால் பெரும்பாதிப்பு ஏற்பட்டிருந்தது. 30 தொடக்கம் 40 இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் அழிக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன.

இலங்கைக் கடல் வளத்தைப் பாதுகாத்து, எதிர்காலச் சந்ததிக்கும் அதை விட்டுவைக்க வேண்டுமானால் இந்திய மீனவர்களின் வருகையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்று வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள், சங்கங்கள், சமாசங்கள் போர்க்கொடிதூக்கினர். போராட்டங்களை மேற்கொண்டிருந்தனர். இலங்கைக் கடற்படையினரின் ஆதரவுடனேயே இந்திய மீனவர்கள் வருகின்றனர் என்றும் அவர்களைக் கண்டும் காணாதது மாக கடற்படை விட்டுவிடுகிறது என்றும் கொந்தளித்தனர்.

"இந்திய மீனவர்களின் அத்துமீறல் தினமும் நூற்றுக்கணக்கில் காணப்பட கடற்படையினர் வேடிக்கை பார்க்கின்றனர். எனவே இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கொழும்பு மீன்பிடி அமைச்சருக்கு தெரியப்படுத்தியிருந்தேன் என்று மன்னார் மாவட்டக் கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் யஸ்ரின் சொய்சா கூறியிருந்தார். மீனவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து அரசியல் கட்சிகளும் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தன.

இவ்வாறான நிலையில், இந்த ஆண்டு இந்திய மீனவர்களின் வருகை வடக்குக் கடற்பரப்பில் குறைந்துள்ளது. இந்த ஆண்டு இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 53 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நீரியல்வளத்துறைத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுச் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களின் 13 படகுகளும் கைப்பற்றப்பட்டிருந்தன என்று யாழ்ப்பாணக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம் தெரிவித்தது.

2017ஆம் ஆண்டு 116 படகுகளுடன் 380 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர் என்று நீரியல் வளத்துறைத் திணைக்களம் தெரிவித்ததை யாழ்ப்பாண மாவட்டக் கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் இதனை மறுத்திருந்தது. குறைந்தளவு இந்திய மீனவர்களே பிடிக்கப்பட்டுள்ளனர். பெருமளவான இந்திய மீனவர்கள் வடக்குக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபடுகின்றனர். அவர்களுடைய வருகை குறையவே இல்லை. இதனால் தொடர்ச்சியாக எமது வாழ்வாதாரம் சுரண்டப்படுகிறது" -என்று சமாசத்தின் தலைவர் தெரிவித்தார்.

(4,21)



# இந்தியப் படகுகள் விடுவிக்கப்பட்டன

யாழ்ப்பாணம், டிசெ. 21

இலங்கைக் கடற்படையின் கட்டுப்பாட்டில் இருந்த ஏழு இந்திய படகுகள் கடந்த 18ஆம் திகதி விடுவிக்கப்பட்டன என்று இலங்கை கடற்படை தெரிவித்தது.

இலங்கை கடல் பரப்பில் அத்துமீறி சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டபோது 2015, 2016, 2017ஆம் ஆண்டுகளில் இந்தப் படகுகள் கைப்பற்றப் பட்டிருந்தன. திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணக் கடல் பரப்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்தப் படகுகள், இந்தியாவில் இருந்து வருகைத்தந்த பொறியியலாளர்களால் திருத்தப்பட்டன. அவை கடந்த 18ஆம் திகதி காங்கேசன்துறை கடற்பகுதியில் வைத்து இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டன என்று இலங்கை கடற்படை மேலும் தெரிவித்தது. (ம-7)

வடக்கு உள்ளூராட்சி சபைகளில் இடம்பெற்ற

# நெல்சிப் திட்ட மோசடிகள் குறித்து பொலிஸ் விசாரணை இழுத்தடிப்பு

## பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்

யாழ்ப்பாணம், டிசெ. 21

**வடக்கு மாகாணத்தில் நெல்சிப் திட்டத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பான குற்றச்சாட்டுக் கோவைகள் விசாரணை நிறைவு செய்யப்படாது இழுத்தடிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. வடக்குமாகாணசபைஇதுபற்றியகோவைகளைவிசாரணைசெய்யுமாறுகோரி குற்றப் புலனாய்வுப் பிரிவில் பாரப்படுத்தியிருந்தது.**

வடக்கு மாகாணத்தில் நெல்சிப் திட்டத்தில் வடக்கில் 8 பிரதேச சபைகளில் மோசடிகள் இடம்பெற்றன என்று குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டது. அவைதொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளவேண்டும்என்றவடக்கு மாகாண சபைத் தீர்மானத்தின் பிரகாரம் வடக்கு மாகாண தலைமைச் செயலர் குழு அமைத்து வடக்கின் 34 உள்ளூராட்சி சபைகளிளில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

அதன் பிரகாரம் வடக்கின் 4 உள்ளூராட்சி சபைகளில் ஊழல் அல்லது மோசடி இடம்பெற்றிருப்பது கண்டறியப்பட்டது.

இதுபோன்று திணைக்கள ரீதியிலான ஆரம்பவிசாரணைகள்இடம்பெற்றன. அவ்வாறு இடம்பெற்ற ஆரம்ப விசாரணைகளில் மேலும் 4 சபைகளில் மோசடிகள் இடம்பெற்றன என்று கண்டறியப்பட்டன.

அதன்படி 8 சபைகளான வல்வெட்டித்துறை நகர சபை, பருத்தித்துறை நகர மற்றும் பிரதேச சபைகள், காரைநகர் பிரதேசசபை, பச்சிலைப்பள்ளிபிரதேச சபை, வவுனியா பிரதேச சபை உட்பட 8 சபைகளில் மோசடிகள் கண்டறியப்பட்டன.

அவைதொடர்பில்விசாரிக்குமாறுகூறி கோவைகள் கடந்த வருடம் ஜூன் மாதம்புலனாய்வுப்பிரிவினரிடம்ஒப்படைக்கப்பட்டன.

அவை தொடர்பில் பொலிஸார் விசாரணை செய்து குற்றப் பத்திரங்களைத் தயார் செய்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல்செய்யவேண்டும். இந்தநிலையில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை தவிர்ந்த ஏனைய சபைகள் தொடர்பில் பொலிஸார் ஆரம்ப விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். எனினும் எந்தவொரு சபை தொடர்பிலும் பொலிஸார் எந்தவொரு வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது. இன்றுவரை எவரும் நீதியின் முன்பாக நிறுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(4,105)

## மயானம் விடுவிக்கப்படவில்லை: மக்கள் நீண்டதூரம் அலைச்சல்

பளை, டிசெ. 20

ஒரு கிலோமீற்றர் தூரத்திலுள்ள மயானத்தைப் பொது மக்களின்பாவனைக்குவிடுவிக் காததால் மக்கள் ஐந்து கிலோமீற்றர் தூரத்திலுள்ள சுடலைக்குச் சடலத்தைக் கொண்டு செல்லும் அவல நிலை பச்சிலைப்பள்ளியில் நீடிக்கிறது. இதற்கு விரைவில் தீர்வுகாணுமாறு அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட பளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வேம்பொடுகேணி கிராமஅலுவலர்பிரிவில்குருடியன்காடு இந்து மயானம் உள்ளது. கிராமமக்கள்மீளக் குடியமர்ந்து எட்டு வருடங்களாகியும் அந்த மயானம் பொதுமக்கள்பயன்பாட்டுக்கு விடப்படவில்லை.

மயானத்தைப் பச்சிலைப் பள்ளி மேற்கு, கச்சார்வெளி, வேம்பொடுகேணி, முகமாலை, இத்தாவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச்சேர்ந்த மக்கள் நீண்ட காலமாகப் பயன்படுத்தி வந்தனர். இடப்பெயர்வுக்குப் பின்னர் 2011 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்தபோதிலும், போர் முடிவுக்கு வந்து எட்டு வருடங்களாகியும் அங்கு வெடிபொருள்கள் அகற்றப்படவில்லை என்றுகூறப்பட்டு மயானத்துக்குச் செல்வது தடுக்கப்பட்டுவருகிறது.

மயானம் மற்றும் அங்கு செல்லும் வீதி ஆகிய இடங்களில் வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளனஎன்றும்அந்த இடங்களுக்கு அப்பால்வெடிபொருள்கள்அகற்றப்படவில்லையென்றும் கண்ணிவெடியகற்றும் நிறுவனத்தினர் கூறுகின்றனர்.

பெருமளவு வாகனங்கள் மயானத்தைஅண்டியபகுதியால் சென்று சட்ட்விரோதமாக மணல் ஏற்றுவதும் மரங்கள் தறித்துக் கொண்டு செல்வதும் தொடர்கின்றன. எனவே கிளிநொச்சி மாவட்டச் செலயக அதிகாரிகள் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கைவிடுக்கின்றனர்.

(4,9)

## வர்த்தகர்கள் இரண்டு பேர் எச்சரிக்கப்பட்டு விடுதலை

வலி.தென்மேற்கு, டிசெ. 20

காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தக உரிமையாளர்கள் இருவரை நீதிமன்று கடுமையாக எச்சரித்து விடுதலைசெய்தது.

உணவுப் பாதுகாப்பு வாரத்தைமுன்னிட்டுயாழ்ப்பாணமாநகரபொதுச்சுகாதாரப் பரிசோதகர் முதன்மை வீதியிலுள்ள வர்த்தக நிலையங்களைச் சோதனையிட்டார். இரண்டுவர்த்தகநிலையங்களில் காலாவதியான பொருள்கள் இருந்தமையைக்கண்டுமீட்டார். யாழ்ப்பாண நீதிமன்றில் ஒப்படைத்து இருவருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்தார்.

வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இருவரும் தங்கள் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இருவரையும் கடுமையாக எச்சரித்த நீதிமன்று அவர்களை விடுவித்தது.

(4,115)

## சுகாதார விதி மீறிய இரண்டு பேருக்கு ரூ.81ஆயிரம்தண்டம்

வலி.வடக்கு, டிசெ. 21

சுகாதார விதிமுறைகளுக்குமுரணாகஇயங்கிய தேநீர்க் கடை நடத்துநருக்கும் பிறிதொரு வர்த்தக நிலைய நடத்துநருக்கும் நீதிமன்று 81ஆயிரம்ரூபா தண்டம்விதித்தது.

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்இராஜமேனன் கடந்த வாரம் தெல்லிப்பழைச் சந்தியிலுள்ள வர்த்தக நிலையத்தைச் சோதனைக்குட்படுத்தினார்.

சுகாதார விதிமுறைகளுக்கு முரணான வகையில் காலாவதியான பொருள்கள், சுட்டுத்துண்டில்லாதபொருள்கள், பழுதடைந்த பொருள்கள் என்பன விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன என்று குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிமன்றில்வழக்குத்தொடர்ந்தார்.

சான்றுப் பொருள்களையும்நீதிமன்றில்பாரப்படுத்தினார். வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதுஉரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். 36 ஆயிரம் ரூபாதண்டம்விதிக்கப்பட்டது. இதேவேளை, தெல்லிப்பளைச் சந்தியில் சுகாதாரச்சீர்கேடாக இயங்கிய தேநீர்க்கடை உரிமையாளருக்கு எதிராக உணவு, மருந்துப் பரிசோதகர் மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். நீதிமன்றில் தன்மீதான குற்றத்தைஒப்புக்கொண்டார். அவருக்கு நீதிமன்று 45 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

(4,115)

## வட. மாகாண சபையின் 136 அமர்வுகளுக்கும் 3.5 கோடி ரூபா செலவு

### தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் பேரவைச் செயலகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 21

வடக்கு மாகாண சபையின் மாதாந்த சபை அமர்வுகளுக்கு 3.5 கோடிரூபா செலவுசெய்யப்பட்டுள்ளதாகமாகாண பேரவைச் செயலகம் தெரிவித்துள்ளது. தகவல் அறியும் உரிமை சட்டத்தின்ஊடாகக்கேட்கப்பட்டகேள்விக்கே இவ்வாறு பதில் அளிக்கப்பட்டுள்ளது.

அதில்மேலும்தெரிவிக்கப்பட்டதாவது: வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு நான்கு வருடங்கள் நிறைவுக்கு வந்துள்ளன. சபை ஆரம்பிக்கப்பட்டு இதுவரை 136 அமர்வுகள் நடைபெற்றுள்ளன. ஒவ்வொரு மாதமும் சபை அமர்வு நடைபெறும். இதைவிடச் சிறப்பு அமர்வுகளும் நடைபெற்றுள்ளன. இவற்றில்400க்கும்அதிகமான பிரேரணைகள் நிறைவேற் றப்பட்டுள்ளன. சபை அமர்வு ஒன்றுக்கு 2 லட்சத்து 71ஆயிரத்து 504 ரூபா செலவிடப்பட்டுள்ளது, காலை சிற்றுண்டி 10 ஆயிரத்து 725 ரூபா, மதிய அசைவ உணவு56ஆயிரத்து970ரூபா, 500 மில்லி லீட்டர் போத்தல் தண்ணீர் 3 ஆயிரத்து 909 ரூபா, 18 லீட்டர் தண்ணீர்போத்தல்900ரூபா, உறுப்பினர்களுக்கானகொடுப்பனவுஒருவருக்கு ஆயிரத்து 250 ரூபா வீதம் 38 உறுப்பினர்களுக்கு 47 ஆயிரத்து 50 ரூபா, பிரயாணப் படி 16 உறுப்பினர்களுக்குத்தலா 3 ஆயிரம்வீதம் 48 ஆயிரம் ரூபா, அமர்வு பிரயாணப் படி வெளிமாவட்டங்களின்14உறுப்பினர்களுக்குத் தலா 7 ஆயிரம் ரூபா வீதம் 98 ஆயிரம் ரூபா, அமர்வுக்கான அலுவலர்கொடுப்பனவு 22 அலுவலர்களுக்கும்தலா250ரூபாவீதம்5ஆயிரத்து 500 ரூபா. ஒரு சபை அமர்வுக்கு 2 லட்சத்து 71ஆயிரத்து 504 ரூபா செலவாகியுள்ளது.

சபையின் ஆயுட்காலம் நிறை வடைவதற்குள் 136 அமர்வுகள் நடைபெறவுள்ளன. இவற்றுக்குச்சுமார் மூன்று கோடி 69 லட்சம் ரூபா செலவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(4,7)

## ஓய்வூதியருக்குக் கொடுப்பனவு வழங்கப்படும் தினங்கள் இவை

தென்மராட்சி, டிசெ. 21

அடுத்த வருடத்துக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படும் தினங்கள் பற்றிய விவரம்ஓய்வூதியத்திணைக்களத்தால்அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, ஜனவரி 10, பெப்ருவரி 08, மார்ச் 08, ஏப்ரல் 08, மே 10, ஜூன் 10, ஜூலை 10, ஓகஸ்ட் 09, செப்ரெம்பர் 10, ஒக்ரோபர் 04, நவம்பர் 08, டிசெம்பர் 10 என்று அறிவிக்கப்பட்டுள்ளன.

(4,9)

## வெதுப்பக உரிமையாளர் மீதான வழக்கு ஜனவரிக்கு ஒத்திவைப்பு

சாவகச்சேரி, டிசெ. 21

வெதுப்பக உரிமையாளருக்குஎதிராகஇரண்டுகுற்றச்சாட்டுகள் முன்வைக்க ப்பட்டுத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஜனவரிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனைக்காகக் காட்சிப்படுத்தியிருந்தார், மருத்துவச் சான்றிதழ் இன்றி உணவுப் பொருள்களைக் கையாண்டார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கொடிகாமப் பகுதி வெதுப்பக நிலையஉரிமையாளர்மீதே வழக்குத்தாக்கல்செய்யப்பட்டது. நேற்றுமுன்தினம் நடத்திய பரிசோதனையில் அவர் சிக்கினார்.

நேற்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு ஜனவரி 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அவர் 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது.

(4,9)

## பாம்பு தீண்டி ஒருவர் சாவு

வவுனியா, டிசெ. 21

வவுனியாவில் பாம்பு தீண்டி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிராமானாளங்குளம்பகுதியில் நேற்றுக்காலை சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் தனிமையில் வசித்துவந்துள்ளார். பாம்பு தீண்டியதாக அவர் கூறியவுடன் அயலவர்கள் பூவரசன்குனம் மருத்துவமனையில் அவரைச் சேர்த்தனர். மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மருத்வமனைக்குக் கொண்டு செல்லப்படும்போது இடைவழியில் உயிரிழந்துவிட்டார் என்பது பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த பசுபதி (வயது 65) என்பவரே உயிரிழந்தார். பூவரசன்குளம்பொலிஸார்விசாரணை நடத்தினர். (4,110)

## நினைத்ததை...

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உயர் நீதிமன்றத் தீர்ப்பையடுத்து வேறுவழியில்லாமல் தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்கவை கடந்த 16ஆம் திகதி நியமித்தார். ஆனாலும், ரணில் தலைமையிலான அரசின் அமைச்சரவை பதவியேற்பு இழுத்தடிக்கப்பட்டு நேற்று ஒருவாறு நியமிக்கப்பட்டுள்ளது.

சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழ் இருந்த பொலிஸ் திணைக்களத்தை நவம்பர் மாதம் 9ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரும் அரசிதழ் அறிவித்தலை அரச தலைவர் வெளியிட்டிருந்தார். பொலிஸ் திணைக்களம் மீண்டும் சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டு, அந்த அமைச்சு தமக்கு வழங்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியிருந்தது. அரச தலைவர் அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தார். பொலிஸ் திணைக்களம் தனக்குக் கீழேயே செயற்படவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அமைச்சரவை நேற்று நியமிக்கப்படும்போது, சட்டம் ஒழுங்கு அமைச்சுப் பதவிக்கு யாரும் நியமிக்கப்படவில்லை. அரச தலைவர் அதனை தன்வசமே வைத்துக் கொண்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து தாவி ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து கொண்டவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கமாட்டேன் என்பதில் அரச தலைவர் விடாப்பிடியாக இருந்தார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்திலும், அதனைத் தெரிவித்திருந்தார். ஐக்கிய தேசிய முன்னணி சமர்ப்பித்த அமைச்சரவைப் பட்டியலில், கட்சி தாவிய பௌசி, விஜித் விஜிதமுனி சொய்சா ஆகியோரின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டிருந்த நிலையில் அவற்றை அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேன நிராகரித்துள்ளார். அவர்களது பெயர்கள் நீக்கப்பட்ட பட்டியல் சமர்பிக்கப்பட்ட பின்னரே அமைச்சரவைக்குப் பதவிப்பிரமாணம் செய்து வைக்க அரச தலைவர் மைத்திரிபால இணங்கியுள்ளார்.

சரத் பொன்சேகாவுக்கு அமைச்சுப் பதவி எந்தக் காரணத்தைக் கொண்டும் வழங்கமாட்டேன் என்று அரச தலைவர் பல தடவைகள் தெரிவித்திருந்தார். நேற்றுப் பதவியேற்ற அமைச்சர்களில் சரத் பொன்சேகாவின் பெயர் இடம்பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-5)

## அரசியல்...

இந்த நிகழ்வு நடைபெற்றது.

**காக்க வைத்தார் மைத்திரி**

அமைச்சரவைப் பதவியேற்பு காலை 8.30 மணிக்கு இடம்பெறும் என்று அரச தலைவர் செயலகத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான உறுப்பினர்கள் காலை 8.30 மணிக்கே அரச தலைவர் செயலகத்துக்கு வந்து சேர்ந்தனர். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன காலை 8.45 மணிக்கே அரச தலைவர் செயலகத்தை வந்தடைந்தார். கடந்த 16ஆம் திகதி தலைமை அமைச்சர் நியமனத்தின்போதும் நேரம் தாழ்த்தியே அரச தலைவர் வந்திருந்தார்.

**ஊடகங்களுக்கு கதவடைப்பு**

அமைச்சரவைப் பதவியேற்புத் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்கு ஊடகங்களுக்கு நேற்று அனுமதி மறுக்கப்பட்டது. பதவியேற்புத் தொடர்பான ஒளிப்படங்களை அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பிவைக்கும் என்று ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. தலைமை அமைச்சராகரணில் விக்கிரமசிங்க பதவியேற்கும் நிகழ்விலும், செய்தி சேகரிப்புக்கு ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

"ஊடகங்கள் செய்தி சேகரிப்பதற்குத் தடை விதிப்பவர்தான் ஊடகத்துறை அமைச்சைத் தன்வசம் கேட்கின்றார்" என்று சமூகவலைத் தளங்களில் மைத்திரிக்கு எதிரான கருத்துக்கள் பரவலாகப் பதிவிடப்பட்டிருந்தன.

**அனுமதி மறுப்பு**

அமைச்சரவைப் பதவியேற்புக்கு, பதவியேற்கும் குடும்பங்களின் உறுப்பினர்கள், ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவது வழமை. ஆனால் நேற்றைய தினம் பதவியேற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் அரச தலைவர் செயலகத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். ஏனையோர் வெளியில் தடுத்து வைக்கப்பட்டனர்.

**தனித்தனியே பதவியேற்பு**

அரச தலைவர் செயலகத்தில் உள்ள கேட்போர் கூடத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமர்ந்திருந்தனர். அதன் அருகிலுள்ள அறையில் அரச தலைவர் மைத்திரிபால அமர்ந்திருந்தார். ஒவ்வொருவராகப் பெயர்கூறி அழைக்கப்பட்டு, அமைச்சுப் பதவிகளை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். கடந்த காலங்களில் அமைச்சரவை நியமனம், அரச தலைவர் செயலகத்தில் திறந்த மண்டபத்தில் இடம்பெறும். அனைத்து அமைச்சர்களும் அமர்ந்திருக்க, அரச தலைவர் ஒவ்வொருவராக அழைத்து பதவிப்பிரமாணம் செய்துவைப்பார். நேற்றையதினம் அவ்வாறு இடம்பெறவில்லை. (ம-5)

## பல்கலை...

வழங்குமாறு வலியுறுத்தி அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்ட பேரணியில் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரை என்பன பொலிஸாரால் பயன்படுத்தப்பட்டன.

மருதானையில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேரணி கோட்டை ரயில் நிலைய முன்றலில் சென்றுகொண்டிருக்கும் போதே கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரை என்பன பொலிஸாரால் பயன்படுத்தப்பட்டன என்று கொழும்பு ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. (ம)

## இடைக்கால...

வினால் நாடாளுமன்றத்தில் இன்று சமர்பிக்கப்படவுள்ளது. இதன் மீதான வாக்கெடுப்பும் நடைபெறவுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் யார்? என்ற சர்ச்சைக்கு சபாநாயகர் இன்று முற்றுப் புள்ளிவைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ரணில் தலைமையிலான புதிய அமைச்சரவை நேற்றுப் பதவியேற்றது. உடனடியாக அமைச்சரவைக் கூட்டமும் இடம்பெற்றது. அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாமையால், இடைக்காலக் கணக்கு அறிக்கையை சமர்ப்பிக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இடைக்காலக் கணக்கு அறிக்கைக்காக ஆயிரத்து 765 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகையில் 990 பில்லியன் ரூபா ஜனவரி மாதத்தில் செலுத்த வேண்டிய கடன் தொகைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நாடாளுமன்றம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடுகின்றபோது, நிதி அமைச்சர் மங்கள சமரவீர இடைக்கால கணக்கு அறிக்கையைச் சமர்பிப்பார். இதன் மீதான வாக்கெடுப்பும் நடத்தப்படும். முழுமையான வரவு - செலவுத் திட்டம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் சமர்பிக்கப்படும்.

இதேவேளை நாடாளுமன்றத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய எதிர்க்கட்சித் தலைவர் விவகாரமும் இன்று எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கடந்த செவ்வாய்க் கிழமை, எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த ராஜபக்சவை பிரேரித்திருந்தது. சபாநாயகரும் அதனை ஏற்றுக் கொண்டிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. சபாநாயகர் தனது முடிவை வெள்ளிக்கிழமை (இன்று) அறிவிப்பேன் என்று தெரிவித்திருந்தார். இதற்கிடையில் மகிந்த ராஜபக்சவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பில் விசாரணை நடத்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவைக் கோரும் தீர்மான வரைபு சபாநாயகரிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-5,61)

## 153.8 கிலோ...

கிளிநொச்சி மாவட்ட சிறப்பு அதிரடிப் படைப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த வீட்டை முற்றுகையிட்டுச் சோதனை செய்த பொழுது 29 பொதிகளில் இருந்த 153.8 கிலோகிராம் கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து பத்து லட்சம் ரூபா பணமும் அவர் பாவித்தார் என்று கருதப்படும் உந்துருளியும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர் இன்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படுவார். சான்றுப் பொருள்களும் இன்று மன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-8,6)

## சபாநாயகரின்...

யாது. இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பு சுதந்திர ஊடகக் கேந்திர நிலையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த சுசில் பிரேமஜயந்த,

"மகிந்த ராஜபக்ச சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் இணைந்து கொண்டார் என்றும் அதனால் அவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்க முடியாது என்றும் சிலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். மகிந்த ராஜபக்சவை எதிர்க்கட்சித் தலைவராக சபாநாயகர் கரு ஜயசூரிய ஏற்றுக்கொண்டதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இனவாத ரீதியாக எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்குச் செல்வதால் சுதந்திரக் கட்சியில் பெற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோகாது. இது தொடர்பில் சுதந்திரக் கட்சியின் யாப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக அரச தலைவர் இருப்பதால் அந்தக் கட்சியினருக்கு எதிர்க்கட்சி பதவியை வழங்க முடியாது என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. இலங்கை வரலாற்றில் இந்த விடயம் தொடர்பில் நீண்ட வரலாறுகளும், உதாரணங்களும் உள்ளன" - என்றார்.

ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தின் பின்னர், சபாநாயகர் கரு ஜயசூரிய எடுத்த தீர்மானங்களை கேள்விக்குட்படுத்தி, அவருக்கு எதிராக பல்வேறு போராட்டங்களை சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்னெடுத்திருந்தது. இவ்வாறானதொரு பின்னணியில் எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த ராஜபக்சவை அறிவித்த சபாநாயகரின் முடிவை யாரும் சவாலுக்கு உட்படுத்த முடியாது என்று சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-5,10)

## வடக்கு மக்கள்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"30ஆண்டு காலப் போர் நிறைவடைந்த போதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது தொடர்ந்து பயணிக்கின்றோம். அனைவரையும் இணைத்துக்கொண்டு ஐக்கியமாக பயணிக்க வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது. சில ஊடகங்கள் தமது கடமையை முறையாக நிறைவேற்றுவதில்லை. தற்போது நாட்டில் போர் இல்லை.

இனியும் வடக்கு மக்களைப் புலிகள் எனும் கண்ணோட்டத்தில் பார்ப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். தெற்கிலும் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. ஆயிரக்கணக்கான உயிர்கள் பறிபோயின. ஆனால், நாம் இந்த கிளர்ச்சிக்குக் காரணமானவர்கள், அதனை மேற்கொண்டவர்கள் என அனைவரையும் இன்று மன்னித்து விட்டோம். கொழும்பு, விகாரமகாதேவி பூங்காவில் வைத்தே ஏப்ரல் வீரர்கள் நினைவு கூறப்படுகின்றனர்.

அப்படியிருக்கும்போது, வடக்கை மட்டும் ஏன் நாம் வேறு ஒரு கோணத்தில் பார்க்க வேண்டும்? ஐக்கிய தேசியக் கட்சியானது இந்த நாடு அனைத்து இன மக்களுக்கும் சொந்தமான ஒரு நாடாகும் என்ற நிலைப்பாட்டில் உள்ளது. பேதங்களைப் பாராது ஐக்கியமாகப் பயணிக்க வேண்டும்" - என்றார். (ம-5,10)

## புத்துயிர்ப்பு...

கொழும்பு, டிசெ. 21

புதிய அமைச்சரவை மாற்றம் இலங்கை கிரிக்கெட்டுக்குள் பெரும் மாற்றங்களைக் கொண்டு வருமா? என்பது தொடர்பில் இலங்கை ரசிகர்கள் பலரும் எதிர்பார்த்துக் காத்துள்ளனர். சமூக வலைத்தளங்களிலும் அது தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் கொட்டிக் கிடக்கின்றன.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன - தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டு அரசின் போது சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களான தயாசிறி ஜெயசேகரவும் அவரைத் தொடர்ந்து பைசர் முஸ்தபாவும் விளையாட்டுத்துறை அமைச்சர்களாகச் செயற்பட்டனர். இலங்கைக் கிரிக்கெட் சபையின் தலைவராக சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சுமதிபால நியமிக்கப்பட்டிருந்தார்.

சுமதிபாலவினதும், முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர்களின் வினைத்திறன் தொடர்பிலும் பல்வேறு விமர்சனங்கள் வாரி இறைக்கப்பட்டன. குறிப்பாக இலங்கை அணிக்கு உலகக்கிண்ணத்தை வென்று கொடுத்தவரும் தற்போதை போக்குவரத்து அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க "இலங்கை கிரிக்கெட்டுக்குள் நிலவும் ஊழல் மற்றும் அரசியல் மேலாதிக்கம்" தொடர்பில் தொடர்ச்சியாக விமர்சித்து வந்தார். இந்த நிலையில் தற்போது விளையாட்டுத்துறை அமைச்சு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஹரின் பெர்னான்டோவிடம் தற்போது கைமாறியுள்ளது. இதனால் அவரின் நிர்வாகத்தில் இலங்கைக் கிரிக்கெட் மீண்டும் புத்துயிர் பெறுமா? என்பது தொடர்பில் எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கைக் கிரிக்கெட் சபையின் நிர்வாக பீடங்களிலும் மாற்றங்கள் ஏற்படும் என்றும் கருதப்படுகிறது. (ம)

## அமைச்சு...

19ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவாக அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 30 இற்கு மேற்படலாகாது. கூட்டு அரசு அமைந்தால் அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும். கடந்த காலங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்து கூட்டு அரசு அமைத்திருந்தன. அரசியல் குழப்பங்கள் காரணமாக தற்போது ஐக்கிய தேசிய முன்னணி தனித்து ஆட்சி அமைத்துள்ளது. இதனால் அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 30க்கு மேற்பட முடியாது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து கட்சி தாவி வந்தவர்கள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் அமைச்சுப் பதவியை எதிர்பார்ப்பதால் அமைச்சரவை எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்டிருந்தாலும், சில இடங்களில் தனித்துப் போட்டியிட்டிருந்தது. தனித்துப் போட்டியிட்டதில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற ஆசனம் ஒன்றைக் கைப்பற்றியிருந்தது.

இந்த நிலையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சி கூட்டு அரசு அமைத்தால், அமைச்சுப் பதவியை அதிகரிக்க முடியுமா? என்பது தொடர்பில் அந்தக் கட்சி சட்ட ஆலோசனை நடத்தி வருகின்றது.

"சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்றத்தில் ஓர் ஆசனத்தை வைத்திருக்கின்றது. அந்தக் கட்சியுடன் நாம் கூட்டு அரசு அமைக்க முடியுமா என்பது தொடர்பில் சட்ட நிபுணர்களுடன் ஆராய்ந்து வருகின்றோம்" என்று அமைச்சர் நவீன் திசாநாயக்க கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார். (ம-5,31)

## எரிபொருள்...

நிதி மற்றும் ஊடக அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள மங்கள சமரவீர தெரிவித்தார்.

அரச தலைவர் முன்னிலையில் அமைச்சராகப் பதவிப்பிரமாணம் மேற்கொண்ட மங்கள சமரவீர, நேற்று மாலையே தனது அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்றார். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கூட்டு அரசு எரிபொருள் விலை நிர்ணயம் தொடர்பில் அறிமுகப்படுத்திய எரிபொருள் விலைச் சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டே கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 3ஆம் திகதி வரை இடைக்காலத் தலைமை அமைச்சராகச் செயற்பட்ட மகிந்த தலைமையிலான அமைச்சரவை எரிபொருள் மற்றும் இதர பொருள்களின் விலைகளைக் குறைத்தது. உலக சந்தையிலும் எரிபொருள் விலை குறைக்கப்பட்டிருந்தது. எரிபொருள் விலை தொடர்பில் நாட்டில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்தன. நாளை (இன்று) நாடாளுமன்றில் எரிபொருள் விலைச் சீர்த்திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது" - என்றார்.

கூட்டு அரசின் காலத்தில் எரிபொருள் விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் எரிபொருள்களின் விலை தொடர்ந்து அதிகரிக்கப்பட்டது. மகிந்தவின் இடைக்கால அரசு பதவியேற்ற பின்னர் எரிபொருள் விலைகள் மூன்று தடவைகள் குறைக்கப்பட்டன. (ம-5,10,61)

## வடக்கு...

வசம் சென்றுள்ளது. சுவாமிநாதனுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படவில்லை.

**(முழுமையான அமைச்சு விவரம் - 2ஆம் பக்கம்)**

# இடப்பெயர்வுக்கு முன்னைய நிலைக்கு மயிலிட்டி விரைவில் கட்டியெழுப்பப்படும்

## மாவட்டச் செயலர் வேதநாயகன் உறுதி

யாழ்ப்பாணம், டிசெ. 21

**1990ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னர் இந்த மண்ணில் எவ்வாறு இருந்தீர்களோ அந்த நிலையை நாங்கள் ஏற்படுத்தித் தருவோம். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**



நோர்வே அரசின் அனுசரணையுடன் யு.என்.டி.பி. நிறுவனத்தின் 6 மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்புடன் கட்டப்பட்ட மயிலிட்டி வடக்கு பலநோக்கு மண்டபம் நேற்றுக் காலை 8.30 மணிக்கு மாவட்டச் செயலர் நா. வேதநாயகனால் திறந்து வைக்கப்பட்டது.

மயிலிட்டி வடக்கு கிராமிய அபிவிருத்தி அமைப்பிடம் அதனை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

'வீடுகள் இருந்த அடையாளமே தெரியாதவாறு முற்றிலும் அழிவடைந்த நிலையிலேயே மயிலிட்டி விடுவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கிராமத்தை புதிதாக உருவாக்க வேண்டிய தேவையுள்ளது.

இடப்பெயர்வுக்கு முன்னதாக நீங்கள் எவ்வாறு இருந்தீர்களோ அந்த நிலைக்கு உங்களைக் கொண்டுவருவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வேன்" என்று நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ. சுகிர்தன், வலி. வடக்கு பிரதேசசெயலர் எஸ். சிவசிறி, ஊறணி பங்குத்தந்தை தேவராஜன், யு.என்.டி.பி. நிறுவன பிராந்திய திட்ட இணைப்பாளர் த. தனக்குமார், வெளிக்கள திட்ட அலுவலர் இ. சர்வானந்தா, கடற்றொழில் பரிசோதகர் ஜெயசீலன், மயிலிட்டி வடக்கு கிராம அலுவலர் க. துவாரகன், அபிவிருத்தி அலுவலர் க. வீரசிவ கரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (5)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.21

'உள்ளூராட்சிசபைகளின் பாதீடும் மக்களின் எதிர்பார்ப்பும்' என்ற தலைப்பிலான கலந்துரையாடல் தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும்.

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான பாதீட்டை முன்வைத்தே கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இதன்போது யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு உள்ளூராட்சிசபைகளினைச் சேர்ந்த உறுப்பினர்களும் கலந்துகொள்வர். அரசியல், பொருளாதார, சமூக, விஞ்ஞான, கலை, இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம், டிசெ.21

'நாட்டின் தற்கால அரசியல் நிலைமையும் ஜனநாயகத்துக்கு மக்களின் பங்களிப்பும்' எனும் தலைப்பில் சிறப்புக் கலந்துரையாடல் பாதுகாவலன் மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெறும்.

தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட சர்வ மதப் பேரவையினால் இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


கொழும்பில இருந்து வருகை தரும் வளவாளர்களால் கருத்துரைகள் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள சமூக ஆர்வலர்கள் யாழ்ப்பாண மாவட்ட சர்வமதப் பேரவையின் இணைப்பாளராகிய சிறிவொகாஞ்சனுடன் 0776372914 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம், டிசெ.21

யாழ்ப்பாண பன்னாட்டு மார்க்சியக் குழு நடத்தும் 'முடிவுக்கு வந்த கூட்டாட்சியும் எதிர்கால அரசியலும்' எனும் கருப்பொருளிலான கலந்துரையாடல் இலுப்பையடி டி.எம் தகவல் தொழிநுட்பப் பிரிவு கல்வி நிலையத்தில் நாளைமறுதினம் மாலை 4 மணிக்கு தலைவர் ஏ.சி. ஜோர்ஜ் தலைமையில் இடம்பெறும். (ஐ)



# இரு வீட்டுக்கு அடிக்கல்

கொடிகாமம், டிசெ.21

வறுமை நிலையில் குடிசை வீட்டில் வசித்து வரும் இரு குடும்பங்களுக்கு வீடு அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி ஹெட்டியாராட்சியின் நிதிப் பங்களிப்பில் கொடிகாமம் வடக்கு ஜே/326 கிராம அலுவலர் பிரிவில் இந்த வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன. குடிசை வீட்டில் குழந்தைகளுடன் வசித்துவந்த இவர்கள் அண்மையில் பெய்த மழையின் போது பெரும் பாதிப்புக்கு உள்ளாகினர் இதனையடுத்து இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையினர் நேரடியாக சென்று பார்வையிட்டு உடனடித் தேவையாக கூரை விரிப்புகளை இரு குடும்பத்துக்கும் வழங்கியிருந்தனர்.

இலங்கை முதல் உதவிச்சங்க இந்துசமயத் தொண்டர் சபையினர் இராணுவக் கட்டளைத் தளபதிக்கு விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே இந்த வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன. (ஐ-160,159)

# ஆரம்ப பாடசாலைக்கு மூன்று விருதுகள்

மாகாணமட்ட விருது வழங்கும் நிகழ்வில் தென்மராட்சி வலயத்தில் வகை மூன்று பாடசாலையான சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மூன்றுவிருதுகளைப் பெற்றுக் கொண்டுள்ளது.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை மாகாண மட்ட விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது 2017 ஆம் ஆண்டு சுகாதார மேம்பாட்டு பாடசாலைக்கான தங்கவிருது, 2018 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று 85 வீதத்தைப் பெற்றமைக்கான விருது, 2018 ஆம் ஆண்டு வகை மூன்று பாடசாலைகளுக்கான வெளிவாரி மதிப்பீட்டில் முதன்மை நிலைபெற்றமைக்கான விருது ஆகிய மூன்று விருதுகளைச் சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை பெற்றுக்கொண்டுள்ளது. (ஐ-159)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



கொடிகாமம், டிச.21

எழுவைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலத்தில் கல்வி பயிலும் தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

முதலாவது உபகழகத் தலைவர் லயன் லட்சுமிகாந்தனால் 45 ஆயிரம் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு எழுவைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ஐ-159,106)

★ ★ ★ ★

முல்லைத்தீவு திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் கல்வி கற்கும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் முகமாக கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கற்றல் உபகரணங்கல் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது. உதவும் இதயங்கள் அமைப்பினுடாக ஜேர்மனியில் வசிக்கும் பாஸ்கரன் விஜயராணி குடும்பத்தினர் தங்களுடைய 25 ஆவது திருமண நாள் நினைவாகவே இந்த உதவியை வழங்கியுள்ளனர்.

நிகழ்வில் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர் பிரேமகாந், உதவும் இதயங்களின் செயற்பாட்டாளர் செல்வன் கிசோபன் மற்றும் ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை பாஸ்கரன் விஜயராணி தம்பதியினர் திருமண நாள் நினைவாக மந்துவில் 8 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த செல்வன் சுவேதனுக்கு ஈருருளியும், முல்லைத்தீவு மாங்குளம் நல்லாயன் சிறுவர் இல்ல மாணவர்களுக்கான மதிய நேர உணவும், மூங்கிலாறு தெற்கு உடையார்கட்டைச் சேரந்த தந்தையை இழந்த தே. விதுசனாவுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்கி வைத்தனர். (ஐ-159)

# நிதி அன்பளிப்பு

கொடிகாமம், டிசெ.21

வறுமை நிலையில் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவருக்கு அவரின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது.

ஜேர்மனி ஸ்ருட்கார்ட் உறவுகளுக்குக் கரம் கொடுப்போம் அமைப்பின் உறுப்பினர் பாபுஜிதனம் என்பவரால் இந்த உதவி வழங்கப்பட்டு வருகின்றது.

இரண்டாம் கட்ட கொடுப்பனவை கடந்த திங்கட்கிழமை முல்லை மாவட்ட அமைப்பாளர் தனுசன் நேரடியாகச் சென்று வழங்கினார்

மறவன்புலவு மத்தி சாவகச்சேரியைச் சேர்ந்த தந்தையை இழந்து தாயின் உழைப்பில் கல்வி கற்றுவரும் மாணவனுக்கே இந்த உதவி வழக்கப்பட்டது.

கல்வி கற்கும் காலம் வரை மாதாந்தம் தொடர்ந்து வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது. (ஐ-159)

# அடிக்கல் நடும் நிகழ்வு

வலி. தென்மேற்கு, டிசெ. 21

பண்டத்தரிப்பு கிராம அலுவலகத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு மாதகலிலுள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும்.

நாட்டின் போர்க்காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து மாதகலில் இயங்கிய இந்த அலுவலகம் முற்றாகச் சேதமடைந்ததை அடுத்துப் பல வருடங்களாக மாதகலிலுள்ள வாடகை வீட்டில் இயங்கி வருகிறது.

பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்துக்கான கட்டடத்தை அமைக்க முன்வந்துள்ள தவிசாளர் அ. ஜெபநேசன் தேசிய ஒருங்கிணைப்பு, மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்துசமயவிவகார அமைச்சர் மனோகணேசனை நேரில் சந்தித்து இதற்கான நிதியுதவியைக் கோரியதை அடுத்து அமைச்சர் ஒரு கோடி ரூபாவை வழங்கினார்.

இந்த நிதிமூலம் அலுவலகமும், நூல்நிலையமும் இணைந்த மாடிக்கட்டடம் அமைக்கப்படவுள்ளது. (ஐ-115)

# சிறுவர் மகிழ்களம்

பன்னாட்டு சிறுவர் தினத்தை முன்னிட்டு உதயன் நடத்தும் 'சிறுவர் மகிழ்களம்' சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆசிரியர் செ.பிரதாப் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் இ.சிவமங்கை ,சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன், மதிப்புறு விருந்தினர்களாக முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ஆ.சரோசாதேவி,சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன், சோபிஜன் இன்ஜினியரிங் கொன்ஸ்ரக்சன் நிர்வாகப்பணிப்பாளர் க.குணாளன்,யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியரும்,புலமைச்சுடர்,ஒளியரசி ஆகியவற்றின் இதழாசிரியருமான இ.ஜனதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

# தென்னிலங்கை இளைஞர்களின் நியமனத்துக்கு கண்டனம்

சாவகச்சேரி ,டிசெ.21

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலையற்று தவிக்கும் காலகட்டத்தில் தென்னிலங்கை இளைஞர்களுக்கு இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாண அலுவலகத்துக்கு 46 பேர் மின்மாணி வாசிப்பாளர்களாக நியமனம் வழங்கியுள்ளமை கண்டிக்கத்தக்கது. இவ்வாறு சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழ்ப்பத்தின் பின்னர் மகிந்த தலைமையில் அமைச்சரவை ஒன்று அமைக்கப்பட்டது. அதில் எரிபொருள் மின்சக்தி அமைச்சராக நியமிக்கப்பட்ட சியம்பலாப்பிட்டிய இந்த நியமனங்களை வழங்கியுள்ளார் என்று கூறப்படுகின்றது. கடந்த 50 நாள்களாக நாட்டில் அரசியல் குழப்ப நிலைமை காணப்பட்டது. அந்தக் காலப்பகுதியில் நியமனங்கள் எவையும் வழங்கப்படக் கூடாது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டிருந்தார். அதையும் மீறி பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த 46 பேருக்கு வடக்கு மாகாணத்தில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்த நியமனங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இந்த நியனங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"யாழ்ப்பாண மாவட்டத்தில் இரு மாதங்களுக்கு ஒரு தடவை மின்மாணி வாசிக்கப்படுவதால் மின்பாவனையாளர்கள் அதிக அளவு கட்டணத்தைச் செலுத்த வேண்டியநிலை காணப்படுகிறது.

இது தொடர்பாக இலங்கை மின்சார சபையின் வடமாகாண அலுவலகத்தினால் மேலதிகமாக ஆட்களை நியமித்து மக்களுக்கு எற்படும் துயர்களை நிவர்த்தி செய்யுமாறு பிரதேச பொது அமைப்புக்களால் வடமாகாண மின்பொறியியலாளருக்கு முறையிடப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் படித்த இளைஞர்.யுவதிகள் பலர் வேலையற்ற நிலையில் உள்ளனர். இந்த நியமனங்களை அவர்களுக்கு வழங்கலாம் என்ற யோசனையும் முறைப்பாட்டின் போது முன்வைக்கப்பட்டது

இருப்பினும் மின்மாணி வாசிப்பாளர்கள் நியமிக்கப்படவில்லை. இந் நிலையில் திடீரென தென்பகுதியைச் சேர்ந்த 46 பேர் இப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். எமது மக்களின் கோரிக்கைக்கு இலங்கை மின்சார சபையின் வடமாகாண அலுவலகம் செவிசாயக்கவில்லை என்பது தெளிவாகிறது" என்றார். (ஜ-9)

# கரைச்சிப் பிரதேச சபையில் சட்டத்தை மீறும் செயற்பாடு

## குற்றஞ்சாட்டுகின்றார் உறுப்பினர் மறுக்கின்றார் சபைத் தவிசாளர்

கிளிநொச்சி, டிசெ.21

**கரைச்சிப் பிரதேச சபையில் சட்டத்துக்கு புறம்பான செயற்பாடுகள் நடைபெறுகின்றன. அவற்றைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது என்று சமத்துவம், சமூக நீதிக்கான அமைப்பின் உறுப்பினர் ஐ.மோகன்ராஜ் தெரிவித்தார்.**

குற்றச்சாட்டை முன்வைப்பவர் சபையின் நிதி மற்றும் கொள்கைக் குழுவில் உள்ளார். இவர் இது தொடர்பாக இதுவரை சபையில் எந்தக் குற்றச்சாட்டையும் முன்வைக்கவில்லை. சபை சட்டத்துக்கு முரணாகச் செயற்படுகின்றது என்றால் அதை அவர் சபையில் தெரிவித்திருக்க வேண்டும் என்று பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிதன் தெரிவித்தார்.

"கடந்த சில மாதங்களாகச் சட்டத்துக்கும், சுற்று நிருபங்க ளுக்கும், நடைமுறைகளுக்கும் மாறாகப் பல விடயங்கள் சபையால் மேற்கொள்ளப்படுகின்றன. அதை நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டினோம். அவர்கள் அதைக் கவனத்தில் எடுக்கவில்லை. இப்படியான செயற்பாடுகளைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது" என்று உறுப்பினர் ஐ. மோகன்ராஜ் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்ததாவது:

"இந்தக் குற்றச்சாட்டுக்களைத் தெரிவிப்பவர் சபையில் இது தொடர்பாகத் தெரிவித்திருக்கலாம். அவ்வாறு செய்யாது சபைச் சட்டத்துக்கு முரணாகச் செயற்படுகின்றது என்று தற்போது கூறுகின்றனர். இது தொடர்பாக உரிய திணைக்களங்களில் முறையிடலாம்" - என்றார். (ற-6)

# பார்த்தினியம் ஒழிப்பு

பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கைகள் பிரான்பற்றில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. வலி .தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரவுக்கு உட்பட்ட ஜெ147 பிரான்பற்று கிராமத்தில் அரச நிறுவனங்கள், பொது மக்கள் ஒன்றிணைந்து பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்..

இதன் மூலம் பெரியவளவு முருகமூர்த்தி ஆலய சூழல் , கலைமகள் பாடசாலை , நாவலர் சனசமூக நிலைய பிரதேசம் உட்பட 12 மேற்பட்ட் இடங்களில் பார்த்தீனியம் முற்றாக ஒழிக்கப்பட்டது. (ஜ-50)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.21

அகில இலங்கை சிற்ப கலாபீடத்தின் பொதுக்கூட்டம் அராலி மத்தி சிறிமுருகன் சனசமுக நிலைய மண்டபத்தில் அண்மையில் க.ரவீந்திராசா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

இலங்கையில் உள்ள அனைத்துச் சிற்பக் கலைஞர்களும் இவ்வமைப்பில் அங்கத்துவர்களாக இணைந்து கலைஞர்களின் ஒற்றுமையும்,உயர்வும் இந்து மத சிற்பாஸ்திர விதிகளையும் மேம்படுத்திச் சமூகத்தில் நற்பணிகள் தொடர இணைந்து செயற்படுமாறு கேட்டுகொள்கிறோம் என்று அகில இலங்கை சிற்ப கலாபீடத்தின் செயலாளர் க.ரவீந்திரராசா தெரிவித்துள்ளார். (ஐ)



# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

சாவகச்சேரி டிசெ.21

தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளிகளின் ஆசிரியைகளுக்கான முன்பள்ளிச் சிறார்களின் செயற்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு வரணி கலாசார மத்திய நிலையத்தில் கடந்த செவ்வாய்கிழமை இடம்பெற்றது.

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளை இனங்கண்டு அவர்களுக்கான கல்வி அணுகுமுறை மற்றும் சிறார்களின் உளநலம் போசாக்கு தொடர்பான கருத்துரைகளை யாழ்ப்பாணப் பிராந்திய தொற்று நோயியலாளர் மருத்துவர் பரணிதரன் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ம.பிரபாகரன் ஆகியோர் வழங்கினர். (9)

# மரம் நடுகை



சாவகச்சேரி டிசெ.21

மீசாலை அல்லாரை அபிவிருத்திக் கழகத்தின் பசுமை பேணுவோம் மரம் நடுகைத் திட்டத்தின் கீழ் கடந்த திங்கட்கிழமை மரக்கன்றுகள் நடப்பட்டன.

சாவகச்சேரி மருத்துவமனை தொடக்கம் பெரிய அரசடி வரையான சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்திற்கு, ஏ 9 முதன்மைச் சாலைக்கும் தண்டவாளத்திற்கும் இடைப்பட்ட பகுதிகளிலும் சங்க உறுப்பினர்களால் மரக்கன்றுகள் நடப்பட்டன. (ஜ-9)

# குழாய்கிணறு அமைப்பு

தென்மராட்சி ,டிசெ 21

மட்டுவில் வடக்கு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு புலம்பெயர் நாட்டடைச் சேர்ந்த ஒருவர் குழாய்க் கிணறு அமைத்து வழங்கியுள்ளார்.

மட்டுவில் வடக்கில் ஆரம்ப சுகாதார நில்லயம் அமைப்பதற்கு அங்குள்ள மக்கள் காணியினை வழங்கியதையடுத்து காணியில் சுகாதாரத் திணைக்களத்தினரால் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு கட்டடம் அமைத்து கடந்த வருடம் பொதுமக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையத்திலேயே மாதாந்தக் குழந்தைகள் கர்ப்பிணிகள் சிகிச்சைப் பிரிவு நடத்தப்பட்டு வருகிறது.

சிகிச்சைக் காலத்தில் அங்குவரும் கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மார் குடி தண்ணீருக்குச் சிரமப்பட்டனர். இந் நிலையில் புலம்பெயர் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த அப் பகுதியைச் சேர்ந்த வல்லிபுரம் தங்கராசா என்பவருடன் பொதுமக்கள் கலந்துரையாடியதையடுத்து தனது செலவில், நிலையக் காணிக்குள் தனது பெற்றோரின் நினைவாக குழாய்க்கிணறு அமைத்து வழங்கியுள்ளார்.

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் அதற்கான பிளாஸ்ரிக் தொட்டியை வழங்கியுள்ளனர். இதனையடுத்து கடந்த திங்கட்கிழமை தொடக்கம் கிணறு பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது. (ஜ-9)

# சிறுகதை போட்டி முடிவு

யாழ்ப்பாணம்.டிசெ.21

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் பொதுநூலகம் 2018 அம் ஆண்டுக்கான சிறுகதைப் போட்டியை நடத்தியது.

இந்தப் போட்டியில் முதலாம் இடத்தை முல்லையடி பளையைச் சேர்ந்த செல்வி பா.பாலாஜினியும், இரண்டாம் இடத்தை கிளிநொச்சி அ.த.க பாடசாலைமாணவி மு.கீர்த்திகாவும் ,மூன்றாம் இடம் பேராலை, பளையைச் சேர்ந்த திருமதி சு.ஜிவிதா ஆகியோரும் பெற்றுக் கொண்டனர். (ஜ-115)

# நூலகத்துக்கு விருது

பச்சிளைப்பள்ளி,டிசெ.21

தேசிய வாசிப்பு மாதத்தில் சிறப்பாகச் செயற்பட்டமைக்காக பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் புலோப்பளைப். பொது நூலகத்துக்கு நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையினால் விருது வழங்கப்பட்டுள்ளது.

தேசிய வாசிப்பு மாதத்தின் விழா கடந்த 13 ஆம் திகதி கொழும்பு பத்தரமுல்ல அபேகம 'மஹவலவ்வே' மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் 2017 ஆம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதத்தில்சிறப்பாகச்செயற்பட்டமைக்காக இவ் விருது வழங்கப்பட்டது.

இவ்விருதினைப் புலோப்பளை பொது நூலக நூலகர்செல்விசெ.உமாதேவி, செயலர் திருமதி செ.அனுசியாஆகியோர்இணைந்து பெற்றுக்கொண்டனர் .

இந்த நூலகம் 4 ஆவது தடவையாகவும் இந்த விருதினைப் பெற்றுக் கொண்டுள்ளது. (ஜ-115)

# மெய்கண்டானுக்கு விரைவில் கட்டடம்

வலி.மேற்கு.டிசெ.21

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலத்துக்கு விரைவில் 3 மாடிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

நல்லிணக்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மேற்படி பாடசாலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா.குகதாஸ் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ,பொது மக்கள்,கல்வித்துறைசார் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-50)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு

# நிரந்தர நியமனம் விரைவில் வடக்கு ஆளுநர் அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ. 21

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளின் கீழ் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் அதற்கு அனுமதி வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சித் திணைக்களங்களின் கீழ் உள்ள முன்பள்ளிகளில் நீண்டகாலமாக நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்கு ஆசிரியர்களை நியமிப்பதற்காக 2017ஆம் ஆண்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதன்படி போட்டிப் பரீட்சை மூலமாக 80 புள்ளிகளுக்கு மேல் தேர்வானவர்களுக்கு நேர்முகத் தேர்வுகள் இடம்பெற்றன.

அவ்வாறு இடம்பெற்ற நேர்முகத் தேர்வுகளின் அடிப்படையிலிருந்து செயல்முறை மற்றும் புள்ளிகளின் அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெற்று முன்னிலையில் உள்ளவர்களுக்கு நியமனம் வழங்கும் நோக்கில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு வடக்கு மாகாண ஆளுநரின் அனுமதியைக் கோரியிருந்தது.

அதற்கு ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளார். தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,105)

# மணல் அகழ்வோரை தடுக்கச் சென்றால் ஆயுதங்களை காட்டி அச்சுறுத்துகின்றனர்

## வரணி வடக்கு மக்கள் தெரிவிப்பு

வரணி,டிசெ.21

சட்டவிரோதமணல்அகழ்வினால்பிரதேசத்தின்இயற்கைவளங்கள் அழிவடையும் அபாய நிலை காணப்படுகின்றது.இதனைத் தடுக்கச் செல்லும் எங்களை மணல் கடத்துவோர் ஆயுதங்களைக் காட்டி மிரட்டுவதாகவும்வரணிவடக்குப்பிரதேசமக்கள்தெரிவித்துள்ளனர்.

வரணி வடக்கு கும்பிட்டரன் பிள்ளையார் ஆலயத்துக்கு செல்லும் வீதியில் மாலை நேரங்களில் வயல்களை அண்டிய பகுதிகளில் உள்ள தனியார் காணிகளில் மணழ் அகழ்வு அண்மைக்காலமாக இடம்பெற்றுவருகின்றது.

இவ்வாறு மணல் அகழ்வு ஏற்பட்ட இடங்களில் 5 அடிக்கு குறையாத பள்ளங்கள்காணப்படுகின்றன.இதனால் கால்நடைகள் அந்தக்குழிக்குள் வீழ்ந்து இறக்கின்றனர்.

அத்துடன் இயற்கை வளங்களான பனை. வடலிகள் உள்ளிட்ட மரங்கள் வகைதொகையின்றி அழிக்கப்படுகின்றன.

மணல்அகழ்வுஇடம்பெறுவதுகுறித்து இரவு வேளைகளில் கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவித்தால் மறுநாள்காலையில்வந்துபார்த்துவிட்டுச் செல்கின்றனர்எனவும் மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வறணி வடக்கு கிராம அலுவலர், பிரதேச செயலர், பொலிஸார், பனை அபிவிருத்திச் சபை, மாவட்டசுற்றாடல்அதிகாரசபையாழ்ப்பாணமாவட்டச்செயலகம்போன்றோருக்குப் பலதடவைகள் முறையிட்டும் பயன்கிடைக்கவில்லைஎனவும்அவர்கள்கவலை தெரிவித்தனர். (ஐ-9)

# பொலிஸ் அலுவலருக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம். டிசெ.21

லஞ்சமாக500ரூபாவை வாங்கினார் என்றகுற்றச்சாட்டில்சிங்கள பொலிஸ் அலுவலருக்கு எதிராக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்நகரப்பகுதியில் உள்ள நகைக் கடை உரிமையாளர் ஒருவரினாலேயே இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பொலிஸ் அலுவலர் நகைக் கடைக்குச் சென்று யாழ்ப்பாணப் பிரதிப்பொலிஸ்மாஅதிபர்அலுவலகத்தில் கடமையாற்றுபவர்என்றுகூறியதுடன் கடை உரிமையாளரிடம் நீங்கள் கஞ்சா,குடு போன்றபோதைப்பொருள்களை விற்பனை செய்கிறீர் கள் என எனக்குத் தகவல் கிடைத் துள்ளது.

எனக்குகாசுதரவேண்டும்என்றுகூறி 500 ரூபா பணத்தைப் பெற்றுச்சென்றுள்ளார். இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறுபணத்தைப்பெற்றுச்சென்ற பொலிஸ்அலுவலர்மீதுகடைஉரிமையாளர் செய்த முறைப் பாட்டையடுத்து ஆள் அடையாளம் மற்றும் சம்பவம் தொடர்பாகப்பொலிஸார்மேலதிகவிசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-106)

# ஒளிவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.21

யாழ்ப்பாணம் திருக்குடும்ப சனசமூக நிலையம் நடத்தும் ஒளிவிழாநிகழ்வுநிலையமுன்றிலில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கலாபூசணம் யோசப்பாலா தலைமையில் இடம்பெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக உலகத் தமிழ்பேரவைத் தலைவர் எஸ்.ஜே.இமானுவேல் கலந்து கொள்ளவுள்ளார்.

நத்தார் கலை நிகழ்வுகள், போட்டிகள் என்பன இடம்பெற்று அதில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)



# கிராம எழுச்சி திட்ட ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.21

கிராமத்துக்கு ரூபா பத்து இலட்சம் ஒதுக்கப்பட்டு கிராம எழுச்சி திட்ட ஆரம்ப நிகழ்வு வடமராட்சி கிழக்கு குடத்தனை பகுதியில் நேற்று ஆரம்பமானது

கிராம எழுச்சித் திட்டச் செயலாளர் உ.நிதர்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக கணக்காளர் க.சுதர்சன் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றி அரச தலைவரின் வாசிப்பை வாசித்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இத்திட்டத்தின் ஊடாக வயல் நிலங்களில் பயிர்களை பாதுகாப்பதற்காக வேலி அமைக்கும் பணியே நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிகழ்வில் குடத்தனை கிராம அலுவலகர், சமுத்தி அலுவலகர், அபிவிருத்தி அலுவலர் கமக்கார அமைப்பு எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-160)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

கொடிகாமம்,டிசெ.21

உலகத் தமிழ் மாணவர் ஒன்றியத்தினரால் கோப்பாய் செல்வபுரம் உதயசூரியன் பாலர் பாடசாலை மற்றும் அறநெறி வகுப்பு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. நிகழ்வில் உலகத்தமிழ் மாணவர் ஒன்றியப் பொருளாளர் செல்வன் கிரிசாந்தன் கலந்து கொண்டார். (ஐ-159)



# மூக்குக் கண்ணாடி வழங்கல்



யாழ்ப்பாணம்,டிசெ 21

பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கான இலவச மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வு தொல்புரம் சர்வோதயத்தில் அண்மையில் நடைபெற்றது. தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் அனுசரணையில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்ஜெயந்தன்தலைமையில்இடம்பெற்ற நிகழ்வில் 150 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வலிகாமம் மேற்குப் பிரதேச சபை தவிசாளர், நற்பணி மன்ற நிர்வாகத்தினர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-7)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.21

யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நல்லூர் நாவலர் கலாசாரமண்டபத்தில்நாளைசனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறும்.

இணையத்தின் தலைவர் தே. தேவானந் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி வேல்நம்பியும், சிறப்பு விருந்தினராக எம். செல்வினும்கலந்துகொள்ளவுள்ளனர்.

இணையத்தினால் நடத்தப்பட்ட மனித உரிமைகள் செயலமர்வில் கலந்து கொண்டவர்களுக்கான சாண்றிதழ்களும் இதன் போது வழங்கப்படவுள்ளன. (ஐ-21)

# எரிபொருள் நிரப்பு நிலையம் திறப்பு

மருதங்கேணி,டிசெ.21

இயக்கச்சி சந்திக்கு அருகில் ஏ9 வீதியோரத்தில் புதிதாக எரிபொருள் நிரப்பு நிலையம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

வடமராட்சிக் கிழக்கு உடுத்துறை ,சுண்டிக்குளம் , இயக்கச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் எரிபொருள் நிரப்புவதற்கு என பளை , கிளிநொச்சி, மருதங்கேணி பிரதேச எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கே சென்றுவந்தனர்.

இந்நிலையில் இயக்கச்சி சந்தியில் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளமையினால் பலரின் பிரச்சினைக்கு முடிவு ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர். (ஐ-70)




# உணவக உரிமையாளருக்குப் பிணை

சாவகச்சேரி,டிசெ.21

உணவக உரிமையாளரை 50 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்லுமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாவற்குழிப் பகுதியில் உள்ள உணவகத்தில் சுகாதாரக் குறைபாடுகள் இருப்பதாகத் தெரிவித்து உரிமையாளருக்கு எதிராகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ம.பிரபாகரண் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

உணவகத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும்வரை உணவகத்தை மூடுமாறும் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் இனங்காணப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யப்பட்ட பின்னர் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறும் உத்தரவிட்டார்.

அத்துடன் உணவக உரிமையாளரை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்லவும் நீதிவான் அனுமதி வழங்கினார்.

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் உணவு பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு நாவற்குழிப் பகுதியில் உள்ள உணவகங்கள் மீது சோதனை நடத்தி வருகின்றனர். (ஐ-9)



# பாலமோட்டை சனசமூக நிலையத்துக்கு அடிக்கல்

வவுனியா, டிசெ.21
வவுனியா, பாலமோட்டை சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத்துக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனால் கிராமத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ்குறித்தொதுக்கப்பட்ட 10 லட்சம்ரூபாநிதியில் கட்டடம் அமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில்வடக்குமாகாணமுன்னாள் உறுப்பினர் செ.மயூரன், தமிழீழவிடுதலைஇயக்கத்தின் மாவட்டப்பொறுப்பாளர்குறூஸ், உதவிப் பொறுப்பாளர் ராஜன், பிரதேசசபைஉறுப்பினர்கார்த்தீபன், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மகளிர் அபிவிருத்திச் சங்கத்தினர், கிராம அலுவலர், சனசமூக நிலையத்தினர், பொதுமக்கள்எனப்பலர்கலந்து கொண்டனர். (ற-110,111)



## நோயால் அவதியுற்றவருக்கு தற்காலிக வீடு

வவுனியா, டிசெ.21
வவுனியா, கணேசபுரத்தில் பொருளாதாரத்தில் நலிந்த நோயால்பாதிப்புற்றஒருவ்ருக்கு தற்காலிக வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம்நடைபெற்றது.

அம்மா அறக்கட்டளையின் மனைகளின் வழியில் 'மனித மகத்துவம் காப்போம்' என்ற திட்டத்தின்கீழ்இந்தவீடுஅமைக்கப்பட்டதுஎன்றுதெரிவிக்கப்பட்டது. சிறுநீரக நோயால் அவதியுற்ற, அடிப்படை வசதிகளற்ற வீட்டில் வாழ்ந்த ஒருவருக்கே தற்காலிக வீடு அமைத்துக்கொடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-110)

## காவல் கடமையில் இருந்தவர் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, டிசெ.21
முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமையகத்தில் பாதுகாப்புக் கடமையில் இருந்தவர் நேற்றுக்காலைஉயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டார்.

முல்லைத்தீவு, செல்வபுரத்தைச் சேர்ந்த பெஞ்சமின் சூசைப்பிள்ளை (வயது69) என்பவரே உயிரிழந்த நிலையில் மீட்கப்பட் டுள்ளார்.

இது தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். சடலத்தை முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். உடற்கூற்றுச் சோதனையின் பின்னரே உயிரிழப்புக்கான காரணத்தைத் தெரிவிக்க முடியும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி3)

# உயிரை மாய்ப்பதால் பிரச்சினைகள் தீராது

## மருத்துவ நிபுணர்கள் அறிவுரை

வவுனியா, டிசெ.21
**வவுனியாவில் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அதைக் கட்டுப்படுத்த அனைவரும் வழிமுறைகளை அனைவரும் ஆராய வேண்டும். தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொள்வது பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வாகாது.**



இவ்வாறு துறைசார்ந்த மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்தில் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொள்ளும் சம்பவங்கள் அதிகாரித்துள்ளன. அவற்றைத் தடுத்தல், அறிக்கையிடலில் ஊடகங்களின் பங்கு எனும் தலைப்பில் செயலமர்வு ஒன்று நேற்று நடத்தப்பட்டது.

பிராந்திய சுகாதார மருத்துவ சேவைகள் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா தலைமையில் நடைபெற்ற கருத்தமர்வில் தெற்றா நோய்ப் பிரிவுப் பொறுப்பாளர் மருத்துவ அதிகாரி வி.சுதர்சினி, மனநல மருத்துவ நிபுணர்களான எஸ்.சிவதாஸ், என்.யுராஜ், மனநல மருத்துவர் எஸ்.சுதாகரன் ஆகியோர் கருத்துக்களை வழங்கினர்.

வவுனியாவில் இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் 23 பேர் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர். 302 பேர் தவறான முடிவுகளை எடுக்க முயற்சித்துள்ளனர். ஓகஸ்ட் மாதங்களுக்குப் பின்னரான காலப்பகுதியை உள்ளடக்கிச் சுமார் 30 பேர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர்.

பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் தைரியம் இல்லாததால் தவறான முடிவெடுக்க உந்தப்படுகின்றனர். உயிரை மாய்த்துக் கொள்ளல் ஒருபோதும் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது.

பெரும் பிரச்சினைகளாகத் தென்படுபவற்றை அணுகி எதிர்கொள்ள முற்படும் போது அவை சிறியவையாக மாறும். பிரச்சின்களை எதிர்கொள்ளும் மனத் தைரியத்தை ஏற்படுத்த வேண்டும் என்று செயலமர்வில் சுட்டிக்காட்டப்பட்டது.

தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொள்வதற்கான காரணங்கள், அதைக் கட்டுப்படும் வழிமுறைகள் தொடர்பாகச் செலமர்வில் ஆராயப்பட்டது. இந்தச் செயற்பாடுகளில் ஊடகங்களின் வகிபங்கு தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (ற-110)

## மரை இறைச்சி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஐவர் கைது

முல்லைத்தீவு, டிசெ.21
மரை இறைச்சியை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஐந்து பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உடையார்கட்டு, பாவாடைக் கல்லு ஆற்றுக் காட்டுப் பகுதியில் மரையை வேட்டையாடியுள்ளனர் என்றும், அவர்களிடம் இருந்து 20 கிலோ மரை இறைச்சிகைப்பற்றப்பட்டது என்றும் தெரிவித்த பொலிஸார் கைது செய்யப்பட்டவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் தெரிவித்தனர். (ற-ரி3)

## புலமைப் பரிசில் வழிகாட்டி நூல் கையளிப்பு

முல்லைத்தீவு, டிசெ.21
முள்ளியவளைதமிழ்மகாவித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டி நூல்கள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன..

அடுத்த ஆண்டு பரீட்சைக்குத் தோற்றவுள்ள 24 மாணவர்களுக்கு இந்த நூல்கள் வழங்கப்பட்டன என்றும் பாடசாலை அதிபர், ஆசிரியரின் வேண்டுகோளுக்கு இணங்க, புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் க.திலீபன் நூல்களை வழங்கினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-222)



# நிலையான திட்டங்கள் மூலமே போர் இழப்பிலிருந்து மீளலாம்

## அரசு நடைமுறைப்படுத்த வேண்டுமென கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ.21
"போரால் பாதிக்கப்பட்டவர்களின் எதிர்காலம் தொடர்பாக அரசு எந்த நிரந்தரத் திட்டங்களையும் மேற்கொள்ளவில்லை. ஆடு, மாடுகளையோ கல்வி உபகரணங்களையோ வழங்கி தற்காலிக உதவிகளை வழங்கவே முனைகின்றது. நீண்டகாலம் நிலைக்கக் கூடிய வருமானங்களை உருவாக்கும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்."

இவ்வாறு கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்தார்.

கரைச்சிப் பிரதேச மாற்று வலுவுள்ளோர் சங்கத்தால் மாற்றுவலுவுள்ளோர் பன்னாட்டு நாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் செல்வா நகரில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கிளிநொச்சி மாவட்டத்தில் போரால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். பலர் மாற்று வலுவுள்ளோராக ஆக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் எதிர்காலம் தொடர்பாக நிலையான திட்டம் எதையும் அரசு நடைமுறைப்படுத்தவில்லை. தற்காலிக உதவிகளை வழங்கித் தப்பிக் கொள்ளவே முயற்சிக்கின்றது. போரை அரசே நடத்தியது என்ற வகையில் அவர்களின் எதிர்காலம் தொடர்பான நிலையான திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது.

ஒரு சமூகம் வலுவிழந்து போயுள்ள நிலையில் அதை மீண்டெழச் செய்வதற்காக அரசுக்கு அழுத்தம் கொடுத்து பாதிக்கப்பட்டவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டியது எமது ஒவ்வொருவரின் கடமையாகும்.

போரால் பாதிக்கப்பட்டவர்களின் எதிர்காலத்துக்காக அரசு அதிக நிதியை ஒதுக்கி திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதற்கான அழுத்தங்களை எமது அரசியல் தலைவர்களும், பன்னாட்டுச் சமூகமும் அரசுக்கு வழங்க வேண்டும்" - என்றார்.

நிகழ்வில் மாற்றுவலுவுள்ள மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கரைச்சிப் பிரதேச உதவிச் செயலர் திருமதி தமிழினி சதீஸும், சிறப்பு விருந்தினராக கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளரும் கலந்துகொண்டனர். (ற-6)

## வவு. விபுலானந்தா பழைய மாணவர் சங்கக் கூட்டம்

வவுனியா, டிசெ.21
வவுனியா, விபுலானந்தாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க 2019/2020 ஆம் ஆண்டுக்கானபுதியநிர்வாகத்தெரிவுக்கானபொதுக்கூட்டம்எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் நடைபெறும் என்று சங்கத்தின் செயலாளர் சே.சுரேந்தர் தெரிவித்தார்.

செயற்திறன்மிக்கபழையமாணவர் சங்கத்தைத் தொடர்ந்து முன்னெடுக்கஅனைவரும்தவறாதுகூட்டத்தில்கலந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் அழைப்புவிடுத்துள்ளார். (ற-110)

# கேப்பாபிலவு காணிகளுக்கு எப்போது விடிவு கிடைக்கும்?

## ஏக்கத்துடன் ஓராண்டுக்கு மேலாக வீதியில் காத்திருக்கும் மக்கள்

முல்லைத்தீவு, டிசெ.21

**கடந்த இரு நாள்களாக இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட காணிகளில் கோப்பாபிலவுக் காணிகள் உள்ளடக்கப்படவில்லை. நாம் எமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று ஓராண்டுக்கு மேலாகப் போராடுகின்றோம். எமது காணிகளுக்கு இன்னமும் விடிவு கிடைக்கவில்லை.**

இவ்வாறு விரக்தியுடன் தெரிவித்தனர் தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கேப்பாபிலவு மக்கள்.

"எமது காணிகளை விடுவிப்பது தொடர்பான சாத்தியக் கூறுகள் காணப்படவில்லை. எம்முடன் இது தொடர்பில் எவரும் கதைக்கிறார்கள் இல்லை. போராட்டங்கள் நடந்தியும் அவற்றைக் கண்டுகொள்கின்றார்கள் இல்லை. எமது காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். இல்லை எனில் உயிர் துறக்கும் வரை தொடர் போராட்டத்தை முன்னெடுப்போம்." என்று கேப்பாபிலவு மக்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவம் கையகப்படுத்தியிருந்த மக்களின் காணிகள் சில கடந்த இரு நாள்களில் விடுவிக்கப்பட்டன. 52.14 ஏக்கர் காணிகள் கடந்த செவ்வாய்க்கிழமையும், 5.33 ஏக்கர் காணிகள் கடந்த புதன்கிழமையும் விடுவிக்கப்பட்டன. தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று ஓராண்டுக்கு மேலாகத் தொடர் போர்ராட்டத்தில் கேப்பாப்பிலவு மக்கள் போராடி வரும் நிலையில் அவர்களின் காணிகள் எவையும் விடுவிக்கப்படவில்லை.

இந்த ஆண்டு இறுதிக்குள் வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் வசமுள்ள காணிகளை பாதுகாப்புக்குத் குந்தகம் வராதவாறு விடுவிக்க வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். காணிகளை விடுவிப்பதற்கு இராணுவம் சம்மதமும் தெரிவித்திருந்தது. வடக்கு, கிழக்கில் உள்ள 263 ஏக்கர் காணிகள் டிசெம்பர் மாதத்துக்குள் விடுவிக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தது. அதன் ஒரு கட்டமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சில காணிகள் விடுவிக்கப்பட்டிருந்தன. எனினும் கேப்பாபிலவுக் காணிகள் அதில் உள்ளடக்கப்படவில்லை.

கேப்பாப்பிலவில் பொதுமக்களுக்குச் சொந்தமான 181 ஏக்கர் காணிகளை இன்னமும் இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது. அவற்றை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி கேப்பாப்பிலவு மக்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தமது காணிகளின் விடுவிப்புத் தொடர்பில் கேப்பாப்பிலவு மக்கள் பல தரப்புகளுடன் பேச்சு நடத்தியிருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச தலைவர், கொழும்பு அமைச்சர்கள் எனப் பல தரப்பினருடனும் பேச்சு நடத்தியிருந்தபோதும் இது வரை காணி விடுவிப்புத் தொடர்பில் சாதகமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை. (ந-21)





## கிராம செயலகக் கட்டடம் பண்டியன்குளத்தில் திறப்பு

கொடிகாமம், டிசெ.21

மாந்தை கிழக்குப் பிரதேசச் செயலர் பிரிவுக்குட்பட்ட பாண்டியன்குளம் கிராம அலுவலர் பிரிவுக்கான கிராம செயலகம் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது. பிரதேச செயலர் ரஞ்சனா நவரத்தினம் செயலகத்தைத் திறந்தார்.

இந்தக் கட்டடத்தில் கிராம நிலை அலுவலர்களான கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், விவசாய ஆராய்ச்சி அலுவலர் ஆகியோர் சேவைகளை வழங்கவுள்ளனர்.

பொது நிர்வாக அமைச்சு ஒதுக்கிய 2 மில்லியன் ரூபா நிதியில் கிராம செயலகத்துக்கான கட்டடம் அமைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ந-9)

## ஈச்சளவாக்கைக் கிராமத்தில் நன்னீர் மீன்பிடிக்கு அனுமதி

மன்னார், டிசெ.21

மாந்தைமேற்கு, ஈச்சளவாக்கை கிராம மீனவர்கள் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு நீரியல் வளத் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

ஈச்சளவாக்கைக் கிராமத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் போர் இடம்பெற்றபோது இடம்பெயர்ந்தனர். போர் முடிந்த பின்னர் அவர்கள் கிராமத்தில் மீள்குடிய மர்ந்தனர். நன்னீர் மீன்பிடி தொடர்பில் கிராமத்தில் இரு தரப்பினருக்கு இடையே முரண்பாடு ஏற்பட்டதை அடுத்து கடற்றொழில் திணைக்களம் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுவதற்குத் தடை விதித்திருத்தது.

நன்னீர் மீன்பிடியில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் என்று கோரி மன்னார் சமூகப் பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் மீனவர்கள் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தனர்.

முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, நன்னீர் மீன்பிடியில் ஈடுபட அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. அதன்படி நேற்று நீரியல் வளத் திணைக்களத்தின் ஊடாக நன்னீர் மீன் பிடிக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தால் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான உபகரணத் தொகுதிகளும் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எதிர்வரும் முதலாம் திகதி முதல் அவர்கள் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-56)

## கற்றலுக்கு வசதியாக ஈருருளிகள் கையளிப்பு

முல்லைத்தீவு, டிசெ.21

நெடுங்கேணி, சேனைப்புலவைச் சேர்ந்த மாணவர்கள் மூவருக்கு அண்மையில் ஈருருளிகள் வழங்கப்பட்டுள்ளன. சேனைப்புலவில் இருந்து, நெடுங்கேணி மகா வித்தியாலயத்துக்குச் சென்று கற்கும் மாணவர்களுக்கே அவை வழங்கப்பட்டுள்ளன. நெதர்லாந்து மக்களவையின் நிதி உதவியில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கல்வி மேம்பாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் அவை வழங்கப்பட்டன என்றும், ஒலுமடு, சேனைப்பிலவு வட்டாரச் செயற்பாட்டாளர் திருமதி ர.சிவரஞ்சினி அவற்றைக் கையளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-222)





## முல்லையில் மேற்கொண்ட இஞ்சிச் செய்கை வெற்றி

### முல்லை. பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ.21

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் மேற்கொள்ளப்பட்ட இஞ்சிச் செய்கை வெற்றியளித்துள்ளது என்று முல்லைத்தீவு மாவட்டப் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பூ.உகநாதன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு விவசாயப் போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட போரால் பாதிக்கப்பட்ட புதுக்குடியிருப்புப் பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 52 பெண் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு தலா கால் ஏக்கருக்குத் தேவையான 100 கிலோ கிராம் இஞ்சி, நீர்ப்பாசனத் தொகுதிகள், நீர் இறைக்கும் மின் மோட்டர் என்பன மானிய விலையில் வழங்கப்பட்டு இஞ்சிச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. சிறு ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தால் அவர்களுக்கு இரு நாள்கள் பயிற்சி வகுப்புக்களும் வழங்கப்பட்டிருந்தன. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு, உலக உணவுத் திட்டம் என்பன இவற்றுக்கு நிதியுதவி வழங்கியிருந்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்றுமதிப் பயிர்ச் செய்கை தொடர்பில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற அலுவலருக்குப் பற்றாக்குறை உள்ளபோதும், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் மேற்கொண்ட முயற்சியால் இஞ்சிச் செய்கை வெற்றியளித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந)

## வவு. மருத்துவமனையில் நத்தார் தின ஆராதனை





நத்தார் தினத்தை முன்னிட்டு வவுனியா பொது மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் ஆராதனை நடைபெற்றது. மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் நலம் பெற வேண்டிப் பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆராதனைக் குழுவினர் நோயாளர்களுக்கு சிற்றுண்டிகளும், குழந்தைகளுக்குப் பரிசில்களும் வழங்கினர். 'சுகநல சேவை கிறிஸ்தவ ஐக்கிய' எனும் அமைப்பின் தலைவர் கெ.கென்டி தலைமையில் நடைபெற்ற ஆராதனையில், நாற்சதுர சுவிசேச சபையின் தலைமைப் போதகர் பி.என்.சேகர் மற்றும் ஆராதனைக் குழவினர் கலந்துகொண்டனர். (ந-110)



## ஜயனார் கழக மைதானம் சீரமைத்துக் கையளிப்பு

வவுனியா. டிசெ.21

வவுனியா, தாண்டிக்குளம் ஐயனார் விளையாட்டுக் கழக கரப்பந்தாட்ட மைதானம் சீரமைக்கப்பட்டு, மின்னொளிவசதிகள் ஏற்படுத்தப்பட்டு கழகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மைதான அபிவிருத்திக்காக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்திருந்தார். அந்த நிதியில் சீரமைக்கப்பட்ட கரப்பந்தாட்ட மைதானத்தை வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் சார்பாக, வவுனியா நகர சபை உறுப்பினர் சு.காண்டீபன் கழக நிர்வாகத்தினரிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் திருநாவற்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சந்திரேஸ்வரன் ரவி, ஐயனார் விளையாட்டுக்கழகத்தின் தலைவர் ப.அனோஜன், தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் செயலாளர் கெர்சோன் கரிஸ், திருநாவற்குளம் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர் திருச்செல்வம் புவி உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற110)



## இரவில் வீதிக்கு வரும் யானைகளால் அச்சம்

வவுனியா. டிசெ.21

வவுனியாவில் இருந்து முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் செல்லும் வீதிகளில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் பாதுகாப்பாகப் பயணிப்பதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் வீதியில் நேற்று இரவு யானை ஒன்று நடுவே நின்று வீதியில் பயணிப்போரை அச்சுறுத்தியது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பகுதிகளில் யானைகளின் அட்டகாசம் காணப்படுவதால் இரவு வேளை பயணிப்பதற்கு அச்சமாக உள்ளது என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

அண்மைக் காலமாகவே யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது என்றும், வேறு பகுதிகளில் இருந்து யானைகள் கொண்டுவரப்பட்டு விடப்பட்டிருக்கலாம் என்றும் பிரதேச மக்கள் கூறுகின்றனர். (ற-111)

### சமளங்குளம் கல்லுமலை ஆலயத்தில்

# தொல்பொருள் திணைக்கள சீரமைப்புக்களில் சந்தேகம்

### உறுதிமொழி எழுத்தில் தந்தால் அனுமதிப்போம் என்கிறது நிர்வாகம்

**வவுனியா, டிசெ.21**

**வவுனியா, கல்லுமலை ஆலயத்தைச் சீரமைப்புச் செய்வது தொடர்பாக தொல்பொருள் திணைக்களம் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சில விடயங்களை ஏற்க முடியாது. அது தொடர்பாக ஆராய்ந்து தொல்பொருள் திணைக்களத்துக்கு அறிவிக்கவுள்ளோம். எமது கோரிக்கையின்படி கடிதம் தந்தால் சீரமைப்புக்கு அனுமதிக்கலாம்**

இவ்வாறு ஆலயத்தின் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, சமளங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலயத்தில் உள்ள தொல்பொருள் எச்சங்களைச் சீரமைப்பதற்கு தொல்பொருள் திணைக்களம் நடவடிக்கை எடுத்தது. அதற்குக் கிராம மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். அதை மீறிக் கடந்த 17ஆம் திகதி தொல்பொருள் திணைக்களத்தினர் சீரமைப்புப் பணிகளுக்காகச் சென்றிருந்தனர். அப்போது கிராம மக்களுக்கும், தொல்பொருள் திணைக்களத்தினருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டிருந்தது.

அங்குள்ள செங்கற்கள் கூட மாற்றப்படாது இப்போது இருப்பதைப் போன்று சீரமைக்கப்படும் என்று எழுத்துமூலம் தொல்பொருள் திணைக்களம் உறுதி தந்தால் சீரமைப்புக்கு அனுமதிப்போம் என்று ஆலய நிர்வாகத்தினரும், கிராம மக்களும் தெரிவித்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் அது தொடர்பான கடிதம் ஒன்று தொல்பொருள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது. 'தொல்பொருள் நிலையப் பாதுகாப்புச் சம்பந்தமாக மக்களைத் தெளிவுபடுத்தலும், அதற்கான காரணங்களை வெளிப்படுத்தலும்' என்ற தலைப்பில் தொல்பொருள் திணைக்களத்தின் வன்னி மாவட்ட உதவிப் பணிப்பாளர் பியதிலக பண்டா என்பவரால் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த தொல்பொருள் எச்சங்களைக் கொண்ட பகுதியைப் பாதுகாப்பதற்காக 2018 ஆண்டு திட்ட நடவடிக்கைமூலம் தொல்பொருள் திணைக்களத்தால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1970 ஆம் ஆண்டு முதல் இந்தப் பகுதியில் தொல்பொருள் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



சில வாரங்களுக்கு முன்னர் அந்தப் பகுதியைச் சீரமைக்க முயன்றபோது அங்குள்ள ஆலய நிர்வாகமும், கிராம மக்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர். கடந்த 17ஆம் திகதி அந்த இடத்தைச் சீரமைப்பது தொடர்பாகத் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் மத்தியில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அந்த இடத்தின் பாதுகாப்புத் தொடர்பாக தமக்கு அறியத் தரப்படவில்லை என்று அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பான தகவல்களை வழங்கிய பின்னர் சீரமைப்புப் பணிகளைமேற்கொள்ளுங்கள் என்று கூறியிருந்தனர்.

பாதுகாப்பு (சீரமைப்பு) என்பது மாசடைதல் மற்றும் அழிவடைந்து போகக் கூடிய கலாசார அமைப்பின் ஆயுள்காலத்தை முடியுமான அளவு அதிகரிப்பதற்கான நடவடிக்கையாகும். சமளங்குளத்தில் அமைந்துள்ள தூபி மற்றும் மூலஸ்தானக் கட்டடம் சேதமடைந்துள்ளதால் அது அழிவடைந்துள்ளது. அவற்றின் ஆயுள் காலத்தை அதிகரித்துப் பாதுகாக்கவே இந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

தூபி மற்றும் மூலஸ்தானத்தில் அழிவடைந்துள்ள செங்கற்களை மீண்டும் சீரமைத்தல், சேதமடைந்த சீமெந்து அடைப்புக்களை அகற்றி மீண் டும் புதிய சீமெந்தைப் பூசி அதன் சக்தியை அதிகரித்தல், தூபியின் அமைப்பை முழு மைப்படுத்தல், 3 வரிகள் அல்லது 9 அங்கும் உயர்த்துதல், சந்துகளுக்குப் பழைய முறைப்படி நிறப்பூச்சிடுதல் போன்ற பணிகள் இடம் பெறவுள்ளன என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது. இந்தக் கடிதம் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் காணப்படுகின்றது.

எனினும் சொற்பிரயோகங்களில் ஏதேனும் வேறுபாடுகள் ஏற்படின் சிங்கள மொழியிலான சொற்பிரயோகத்துக்கே முன்னுரிமை அளிக்கப்படும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சில விடயங்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

தூபியை முழுமைப்படுத்தல், 10 அங்குலம் வரை உயர்த்துதல் போன்றவை முறையற்ற செயற்பாடு. அதை ஏற்க முடியாது. கடிதத்தில் சொற்பிரயோகங்களில் வேறுபாடுகள் ஏற்படின் சிங்கள மொழிக்கே முன்னுரிமை வழங்கப்படும் என்று கூறப்படுகின்றது.

சிங்கள மொழியில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது எமக்குத் தெரியாது. அதை உன்னிப்பாக ஆராய்ந்த பின்னரே முடிவெடுக்க முடியும். எமது அதிருப்திகள் தொடர்பாகத் தொல்பொருள் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்துவோம் என்றும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ற-110)

## பொருளாதார வசதி குறைந்த குடும்பங்களுக்கு உலருணவு

கிளிநொச்சி. டிசெ.21

திருகோணமலை, பாலையூற்றில் பொருளாதாரவசதிகுறைந்த குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

புனித லூர்த் அன்னை திருத்தலத்தில், பங்குத் தந்தை என்.நிதிதாஸால் உலருணவுப் பொதிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

நத்தார் தினத்தை முன்னிட்டு நெதர்லாந்தில் வசிக்கும் சுசிலன் என்பவரின் நிதிஉதவியில் அவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-6)

## வாழ்த்துப் பதாகைகளால் நிரம்பும் வவுனியா நகரம்!

வவுனியா. டிசெ.21

அரசியல்வாதிகளுக்கு வாழ்த்துத் தெரிவித்து வவுனியா நகரப் பகுதி எங்கும் பதாகைகள் வைக்கப்பட்டுள்ளன. மணிக்கூட்டுக் கோபுரச் சந்தி, மருத்துவமனை சுற்றுவட்டம் ஆகிய இடங்கள் பதாகைகளால் நிரம்பியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்தும், நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீனுக்கு வாழ்த்துத் தெரிவித்துமே பதாகைகள் வைக்கப்பட்டுள்ளன.

அரசியல் குழப்ப நிலைக்குப் பின்னர் தற்போது ரணில் விக்கிரமசிங்க தலைமையில் புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது.

அதையடுத்தே கட்சி ஆதரவாளர்களால் இந்தப் பதாகைகள் வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-111)



## திருவாசக முற்றோதல்

வவுனியா. டிசெ.21

திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா தாண்டிக்குளம் சிறி முருகன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. கோவிற்குளம் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலய அறங்காவலர் சபை ஏற்பாட்டில் திருவாசக முற்றோதல் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

# இ.போ.சவினரும் தனியாரும் மோதல் தனியார் சாரதி சம்பவத்தில் சாவு

## வெலிமடையில் பதற்றம்; பொலிஸார் குவிப்பு

**பதுளை, டிசெ.21**

**பதுளை- வெலிமடையில்இலங்கைப்போக்குவரத்துச்சபைஊழியர்களுக்கும், தனியார் பஸ் ஊழியர்களுக்கும் இடையே நடந்த மோதலில் தனியார் பஸ் உரிமையாளரும், சாரதியுமான ஒருவர் சாவடைந்தார்.**

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் வெலிமடை பஸ்நிலையத்தில்இடம்பெற்றது. வெலிமடை - குருதலாவையைச் சேர்ந்த காமினி குமார லியனகே (வயது-49) என்பவரே இதன்போது சாவடைந்தார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

வெலிமடை -பொரலந்தவீதிச் சேவையில்ஈடுபடும்இலங்கைப்போக்குவரத்துச் சபையின் பஸ் சாரதி, நடத்துநர் ஆகியோருக்கும், அதேவழித்தடத்தில் போக்குவரத்தில்ஈடுபடும்தனியார்பஸ் சாரதி, நடாத்துநர் ஆகியோருக்கும் இடையே முரண்பாடு தோன்றியது. குறித்த வழித் தடத்துக்குரிய நேர அட்டவணையின்படிஇரண்டுபஸ்சேவைகளும்ஒரேநேரத்தில்ஒழுங்குபடுத்தப்பட்டமையே இந்த முரண்பாட்டுக்குக் காரணம் என்று பொலிஸாரின் முதற்கட்டவிசாரணைகளில்இருந்துதெரிய வந்ததாகப்பொலிஸார்தெரிவித்தனர்.

இந்த இருதரப்பு மோதல் சம்பவத்தில் காயமுற்ற தனியார் பஸ் சாரதி, தியத்தலாவை அரச மருத்துவமனையின் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் சிகிச்சை பயனளிக்காமல் சாவடைந்தார். இதையடுத்து, வெலிமடைப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. வெலிமடை தனியார் பஸ் ஊழியர்கள் நேற்றுப் பணிப் புறக்கணிப்பைமேற்கொண்டனர். குறித்த பகுதியில் பலத்த பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டது. வெலிமடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எய்ச். எம். ஹேரத்தலைமையிலானகுழுவினர், சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்தனர். இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் இருவர் (சாரதி, நடாத்துநர்) பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.






## தொழிலாளர்களின் சம்பள விவகாரம் ஆதரவுப் போராட்டங்கள் தொடர்ந்தன

மலையகத்தொழிலாளர்களின்சம்பளத்தைஅதிகரிக்குமாறு கோரி கொழும்பு - கோட்டை ரயில் நிலையம் முன்பாக இளைஞர்கள்உணவுதவிர்ப்புப்போராட்டத்தில்ஈடுபட்டனர். அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து வெலிமடைப் பகுதிப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நேற்றைய தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

பெருந்தோட்டத்தொழிலாளர்களின்அடிப்படைச்சம்பளத்தை ஆயிரம்ரூபாவாக உயர்த்தக்கோரியும், கூட்டுஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற் சங்கங்களை அதிலிருந்து விலகக் கோரியும்மலையகஇளைஞர்கள்தொடர்உணவுதவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களுக்கு ஆதரவளிக்கும் முகமாக வெலிமடைப் பகுதித் தோட்டத் தொழிலாளர்கள் பணிப்புறக்கணிப்பில்ஈடுபட்டனர். தமது போராட்டத்துக்குக் களங்கத்தைஏற்படுத்தியவெலிமடைப்பகுதித்தோட்டஉதவி நிர்வாகியைக்கண்டிப்பதாகவும், எமக்காகப்போராட்டத்தில் குதித்திருக்கும் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்துமே பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருப்பதாகப் போராட்டத்தில் ஈடுபட்ட அவர்கள் தெரிவித்தனர்.



நன்றி அவந்த ஆட்டிகல

## தந்தையின் நினைவாக வீடு கையளிப்பு

மட்டக்களப்பு-மண்முனை தென் மேற்குப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முனைக்காடு கிராமத்தில் 2இலட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்டவீடொன்று கடந்தசெவ்வாய்க்கிழமையன்று பயனாளரிடம் கையளிக்கப்பட்டது.

முனைக்காடு விவேகானந்த வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரான அமரர் தர்மலிங்கம் மயில்வாகனம் அப்புக்காத்தரின் நூறாவதுபிறந்ததினத்தை முன்னிட்டு, அவருடைய ஞாபகார்த்தமாக, அவரது புத்திரர்களால் அமைக்கப்பட்டவீடொன்றே பயனாளரிடம் கையளிக்கப்பட்டது.

பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டவாறுகுடிசை வீடொன்றுள் வாழ்ந்து வந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பம் ஒன்றுக்குக் குறித்த வீடு வழங்கப்பட்டது.



## இறால் குழிக் கிராமத்தில் பெருமளவில் மணல் கொள்ளை

*போரால் பாதிக்கப்பட்ட மாணவ நிதியத் தலைவர் தெரிவிப்பு*

திருகோணமலை. டிசெ.21

“திருகோணமலை -மூதூரிலுள்ள தமிழ்க் கிராமமான இறால் குழிப் பகுதியில் பெருமளவில் மணல் கொள்ளை நடக்கிறது” என்று தெரிவித்தார் போரால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மாவட்ட மாணவர்களுக்கான நிதியத்தின் தலைவர் கனகசபை தேவகடாட்சம். இறால் குழி மாணவர்களுக்குக் குறித்த நிதியத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கும்நிகழ்வுநேற்றுமுன்தினம்நடந்தது. அதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

“இலங்கையின்மிகப்பெரியமணல்கொள்ளைநடைபெறும் கேந்திர நிலையமாக இறால் குழிக் கிராமம் மாறியுள்ளமை வேதனைக்குரியதாகும். இதை மாற்றுவதற்கு எந்த அரசியல் தலைமைகளும் முன்வருவதற்கு ஆயத்தமில்லை. எமது தாய் நிலமான இதைப் பாதுகாக்க வேண்டின் இங்குள்ள இளைஞர்கள் கல்வியில் உயர வேண்டும். வேறு எவரிலும்தங்கியிருந்துவெற்றிகொள்ளமுடியாது”-என்றார்.

இந்த நிகழ்வில் அந்தக் கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் உட்படப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

## மலேரியாத் தொற்றுடைய ஒருவர் களுத்துறையில் அடையாளப்பட்டார்

களுத்துறை, டிசெ.21

மலேரியா நோய்க்கு ஆளாகியுள்ள ஒருவர் ஊவா மாகாணத்தில் சியாம்பலாண்டுவை அரசமருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவது நேற்றைய தினம் தெரியவந்தது. களுத்துறை - மதுகம சீனித் தொழிற்சாலையில் பணியாற்றி வந்த இவர் இந்தியப் பிரஜை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மலேரியாவால் பீடிக்கப்பட்ட இவருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகச் சியாம்பலாண்டுவை மருத்துவமனை மருத்துவ அதிகாரி எஸ்.ஐ.டி. திசநாயக்க தெரிவித்தார்.

1934ஆம்ஆண்டுகாலப்பகுதியில்இலங்கையில் அறியப்பட்ட மலேரியாவின் தாக்கம்1992ஆம்ஆண்டுவரையிலும் அதிகரித்து இருந்தது.

தொடர்ச்சியாகப் பதவிக்கு வந்த அரசுகளால் முன்னெடுக்கப்பட்ட மலேரியா எதிர்ப்புநடவடிக்கைகள்காரணமாகவும் மலேரியாவைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளாலும் அது கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு மலேரியாவற்ற தேசமாக இலங்கை பேசப்பட்டது.

இருப்பினும் இடையிடையே மலேரியாத் தொற்றுக்கள் நாட்டின் பல பாகங்களிலும் இவ்வாறாக இனம் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

## “கிழக்குக்குத் தனி அமைச்சு இல்லை” - வியாழேந்திரன் விளக்கம்

வடக்கு- கிழக்கு மாகாணங்கள் போரால் பாதிக்கப்பட்டவை. வட மாகாணத்துக்குத் தனியானஅமைச்சுஉள்ளது. கிழக்குமாகாணத்துக்கு அவ்வாறில்லை என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் குற்றம் சுமத்தினார். கிராம சக்தி மக்கள் சங்கத்தின் உட்கட்டமைப்பு வேலைத் திட்ட நிகழ்வு ஒன்று மட்டக்களப்பு - ஏறாவூர் ஐந்தாம் குறிச்சியில் நேற்றுநடைபெற்றது. அதில்உரையாற்றும் போதேஅவர் இவ்வாறுதெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏறாவூர் ஐந்தாம் குறிச்சி மிக முக்கியமானதாகும். இந்தப்பகுதிமக்கள்இடம்பெயர்ந்துதிரும்பிய போது எந்தவோர் அடிப்படை வசதியும் இன்றி இருந்தார்கள். வீடற்ற, மலசல கூடம் அற்ற, வீதிகள் சரியான முறையில் செப்பனிடப்படாத நிலை எனப் பல்வேறு தேவைப்பாடு இங்கு காணப்படுகின்றன. வடக்குக் கிழக்கு மாகாணங்கள் போரால் மிகவும் பாதிக்கப்பட்டவை. வட மாகாணத்துக்கு என்று ஒரு தனியான அமைச்சு உள்ளது. ஆனால், கிழக்கு மாகாணத்துக்கு ஓர் அமைச்சும் இல்லை.



இவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்தே கடந்தநவம்பர்மாதம்அரசதலைவரின் அழைப்பின் பேரில் அமைச்சுப் பெறுப்பைஏற்றேன். ஆனால்ஆட்சிமாற்றம் ஏற்பட்டுவிட்டது” - என்றார்.



## நத்தார்த் தாத்தா வேடம் தரித்து குழந்தைகளை மகிழ்வித்த ஒபாமா


வோஷிங்டன்.டிசெ.21
அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பராக் ஒபாமா நத்தார் தாத்தா வேடம் தரித்துக் குழந்தைகள் மருத்துவமனை ஒன்றுக்குச் சென்று இன்பஅதிர்ச்சிஅளித்தார். அமெரிக்காவின்வோஷிங்டன்மாகாணத் திலுள்ள சிறார்களுக்கான மருத்துவமனை ஒன்றுக்குச் சென்ற அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபமா நத்தார்த் தாத்தாவின் தொப்பி அணிந்துக் கொண்டு அங்கிருந்த குழந்தைகளுக்கு இன்ப அதிர்ச்சி அளித்தார். அத்தோடு குழந்தைகளுக்கு இனிப்பு, ஆடை வழங்கி அவர்களுடன் நடனம் மற்றும் பாட்டுப் பாடி அவர்களுடன் ஒளிப்ப டமும் எடுத்துக் கொண்டார்.
இதுகுறித்து ஒபாமாதனது கீச்சகப்பக்கத்தில்"இந்தநிகழ்வுக்குஏற்பாடு செய்த மருத்துவமனை ஊழியர்கள் அனைவருக்கும் மிக்க நன்றி. அற்புதமானகுழந்தைகள்மற்றும்அவர்கள்குடும்பத்துடன்பேசநேரம் கிடைத்தது. இரண்டு குழந்தைகளின் தந்தையாக இருக்கும் காரணத்தால் அங்கு இருக்கும் சூழலை என்னால் புரிந்துக் கொள்ள முடிகிறது" என்று குறிப்பிட்டுள்ளார். ஒபாமாவின் இந்தச் செயலுக்குச் சமூக வலைதளங்களில் பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

# ஐ.எஸ்.ஐத் தோற்கடித்து விட்ட
# சிரியாவிலிருந்து அகன்றன அமெ

### தோற்கடித்தாகக் கூறுவது பொய் உடனடியாகவே மறுத்தது பிரிட்டன்



**வோஷிங்டன்,டிசெ.21**
**சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வந்த ஐ.எஸ். ஆயுத அமைப்பைத்தோற்கடித்துவிட்டதாகஅமெரிக்கஅதிபர் ட்ரம்ப் அறிவித்தார். அவருடைய அறிவிப்பையடுத்து சிரியாவில்நிலைநிறுத்தியதனதுபடைகளைஅமெரிக்கா திரும்பபெற்றுவருகிறது. ஆனால், ட்ரம்ப்கூறுவதுபோல் சிரியாவில்ஐ.எஸ்அமைப்பினர்தோற்கடிக்கப்படவில்லை என்று பிரிட்டன் தெரிவித்தது.**



வடகிழக்குச் சிரியாவில் இருந்து ஐ.எஸ். ஆயுததாரிகளுடன்போரிடுவ தற்காகச் சிரிய அரசுக்குச் சுமார் 2ஆயிரம் வரையான அமெரிக்கப் படையினர் உதவி செய்தனர். இன் னும்சிலபகுதிகளில்சண்டைநடந்து கொண்டுதான் இருக்கிறது. ஐ.எஸ். அமைப்பினர்மீண்டும்தலையெடுத் துவிடாமல் தடுப்பதற்காக அங்கே மேலும் சிலகாலம் அமெரிக்க படை கள்தங்கியிருக்கும்எனஎதிர்பார்க்கப் பட்டது.
இந்த நிலையில் சிரியாவில் ஐ.எஸ். அமைப்பினர்வீழ்த்தப்பட்டுவிட்டனர் என்றும், சிரியாவில் வெற்றிகளைப் பெற்றுள்ளஅமெரிக்கத்துருப்புகளை நாட்டுக்குமீண்டும்அழைக்கஇதுவே சரியான நேரம் என்றும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்தார். அமெரிக் கத் துருப்புகள் சிரியாவில் இருந்து வெகு விரைவில் வெளியேறும் என்று இந்த ஆண்டின் தொடக்கத்திலே அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறியிருந்தார். தற்போது அவர் இவ் வாறு அறிவித்ததையடுத்து, போர் நடந்து வரும் சிரியாவில் இருந்து தனது படைகளை அமெரிக்கா திரும்ப பெற்றுவருவதாக ட்ரம்ப் நிர்வாகம் தெரிவித்தது. தாங்கள் அடுத்த கட் டத்துக்குநகர்ந்துகொண்டிருப்பதாகஅமெரிக் காவின் பாதுகாப்புத் தலைமையகமான பென்டகன் தெரிவித்தது.
ஐ.எஸ். அமைப்புத்தோற்கடிக்கப்படவில்லை என்று மறுத்தது பிரிட்டன் ஐஎஸ். அமைப்பி னர் தோற்கடிக்கப்பட்டதாக ட்ரம்ப் அறிவித் துள்ள நிலையில், அதைப் பிரிட்டன் உடனடி யாகவே மறுத்தது. வடகிழக்குச் சிரியாவில் நிலைகொண்டுள்ள ஐ.எஸ். அமைப்புடன் போரிடுவதற்குசிரியஅரசுபடைகளுக்குஅமெ ரிக்காதலைமையிலானகூட்டு செய்தது. இந்தக்கூட்டுப்படைய இருக்கிறது. இந்தநிலையில்தா வது போல் சிரியாவில் ஐ.எஸ். தோற்கடிக்கப்படவில்லை எ தெரிவித்துள்ளது.
"சிரியாமற்றும்ஈராக்கில்ஐஎஸ் எதிரான நடவடிக்கையைக் தொடங்கியதில்இருந்துஐ.எஸ்.

## மாணவி சுட்டுக்கொலை நெதர்லாந்தில் சம்பவம்

அம்ஸ்டர்டாம்.டிசெ.21
நெதர்லாந்திலுள்ள பாடசாலை ஒன்றில் 11 வயது மாணவி சுட் டுக்கொல்லப்பட்டார். இந்தச் சம்ப வம் அங்கு அதிர்ச்சியை ஏற்படுத் தியுள்ளது.
இதைத் தொடர்ந்து அங்குள்ள பாடசாலைகளில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதாக அந்த நாட்டு அரசு அறிவித்தது.
நெதர்லாந்தின்ரோட்டர்டம்என்ற இடத்தில் இயங்கிவரும் பாட சாலை ஒன்றிலேயே இந்தச்சம்ப வம் நடந்தது. பாடசாலை முடிவ டைந்து மாணவிகள் அங்குள்ள மோட்டார்வாகனத்தரிப்பிடத்தை அண்மித்தபோது அந்த இடத் துக்கு வந்த 35 வயது மதிக்கத் தக்க ஒருவர் திடீரெனத் துப்பாக் கியை எடுத்து மாணவிகளை நோக்கிச் சுட்டார்.
இதன்போது குறித்த மாணவி சம் பவ இடத்திலேயே சாவடைந்தார். சூடு நடத்தியவரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்தச் சம்பவத் தைத் தொடர்ந்து பள்ளிக்கூடங்க ளில் பாதுகாப்பு விதிமுறைகள் மாற்றப்பட்டிருப்பதாக அரசு அறி வித்தது.

## காந்தியின் 150ஆவது பிறந்தநாளை நினைவுகூர்ந்து ஜேர்மனியில் சிலை



பேர்லின்.டிசெ.21
பிரித்தானியரிடமிருந்து இந்தியாவை விடுவித்துச் சுதந்திரத்தைப் பெற் றுக் கொடுத்தவராகக் கருதப்படுபவர் மகாத்மா காந்தி. அவருடைய 150ஆவது ஆண்டு பிறந்த தின நினைவுகூரல் ஒக்ரோபர் 2 ஆம் திகதி யன்று இந்தியாவிலும் உலகநாடுகள் சிலவற்றிலும் கடைப்பிடிக்கப்பட்டி ருந்தது.
அந்த வகையில் ஜேர்மனியில் ட்ரையர் நகரிலுள்ள ஆங்குஸ்டா விக் டோரியா என்ற பழமையான பாடசாலையில் காந்தியின் மார்பளவான தோற்றத்தைச் சித்திரிக்கும் சிலை திறக்கப்பட்டது.
ஜேர்மனிக்கான இந்தியத் தூதரின் முன்னிலையில், ட்ரையர் மாநகர மேஜர் ஒல்ப்ரம் லேபே இந்தச் சிலையைத் திறந்து வைத்தார். விழாவில் பங்கேற்ற ட்ரையர் மாநகர முன்னாள் மேஜர் கிளாஸ் ஜேன்சன், காந்தி யின் தத்துவங்கள் சிலவற்றை நினைவுகூர்ந்தார்.

## மாடியில் இருந்து பணத்தை வீசியவர் ஹாங்காங்கில் கைது

ஹாங்காங்.டிசெ.21
ஹாங்காங்கில்அடுக்குமாடிக்கட்டடத்தின்உச்சியில் நின்றபடிபணத்தைஅள்ளிவீசியவாங்சிங்கிட்என்ற இளைஞரைப்பொது அமைதிக்குக் குந்தகம் விளை வித்ததாகக் கூறி அந்த நாட்டுப் பொலிஸார் கைது செய்தனர். ஹாங்காங்கைச் சேர்ந்த வாலிபர் வாங் சிங்கிட்(வயது 24). இளம்தொழில்அதிபரான இவர் பல கோடிகளுக்கு சொந்தக்காரர் என்று தெரியவந் துள்ளது.
அடுக்குமாடிக் கட்டடத்தின் உச்சியிலிருந்து பணத் தைத் தூக்கி வீசிஎறிந்ததால், அந்தபகுதியில்பெரிய அளவில் கூட்டம் கூடியது. ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டு பணத்தை சேகரித்த னர். இதனால் அங்கு பரபரப்பான சூழல் ஏற்பட்டது. இதையடுத்தே பொது அமைதிக்குக் குந்தகம் விளை வித்ததாகக் கூறி அவர் கைது செய்யப்பட்டார்.






## நைஜீரியாவின் முன்னா

அபுஜா.டிசெ.21
நைஜீரியா நாட்டின் விமானப்ப டைத் தளபதியாகவும், இராணு வத் தளபதியாகவும் பதவி வகித்தஅலெக்ஸ்படேஹ்இனம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவருடைய பெயர் அலெக்ஸ் படேஹ். பணி யிலிருந்து ஓய்வு பெற்ற இவர்

## பிரான்ஸில் பொலிஸார் புதுவித பே 'நீல அங்கி' அணிந்து மந்தகதியில்

பரீஸ்.டிசெ.21
எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துப்பிரான்ஸின்தலைநகர்பரீஸில் 5 வாரங்களாக பொது மக்கள் 'மஞ்சள் அங் கிப்' பேராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். தற்பொழுது 'நீல அங்கிப் போராட்டம் ஒன் றும் அங்கு உருவெடுத்துள்ளது. பிரான்ஸின் விமான நிலையத்தில் பணியாற்றும் பொலிஸார் நீலஅங்கிகளை அணிந்துகொண்டுஒருவிதவித்தியாசமான போராட்டத்தைமுன்னெடுத்துவருவதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட் டன. பொலிஸார் தமது பணிகளை மிக மெதுவாக, மந்த கதியில் செய்கின்றனர். 'மெதுவாக வேலை செய்வது' என்பது பணி;ப்புறக்கணிப்பின் இன்னுமொரு வடி வம் தான். இந்தப் போராட்டத்தை ஒழுங்கு செய்த பொலிஸாரின் தெ கள்அங்கத்தவர்களைஅ சேவைகளில் மட்டும் ஈடு துள்ளது.
நீண்டகாலமாகப்பொலி படாமல் இருக்கும் அவர் திக கொடுப்பனவை வழ தொழிற்சங்கம் வற்புறு நிமித்தமே இந்தப் போரா கப்படுகின்றது. பரீஸ் விம நடவடிக்கைகள் இதனா பயணச்சீட்டுப்பரிசோதன களின் பொதிகளைப் பரிசே நடவடிக்கைகள் தாமதப் ணிகளைப் பாதித்தன. பேச்சுக்கள் பிரான்ஸின் அமைச்சில் தற்போது இட

# ட்டதாக அறிவித்து மெரிக்கப் படைகள்







ானகூட்டுப்படைஉதவி
டுப்படையில்பிரிட்டனும்
லையில்தான்ட்ரம்ப்கூறு
ல் ஐ.எஸ். அமைப்பினர்
ல்லை எனப் பிரிட்டன்

கில்ஐஎஸ்அமைப்புக்கு
கையைக் கூட்டுப்படை
ந்துஐ.எஸ்.கட்டுப்பாட்டில்

இருந்தபெரும்பாலானபகுதிகளைகூட்டுப்படைகைப்பற்றியதுஉண்மை. ஆனால்இன்னும் நாம்முன்னேறவேண்டிஉள்ளது. அவர்களிடம்(ஐ.எஸ்.)பெரியபிராந்தியம்இல்லாதபோதும், தொடர்ந்து அச்சுறுத்தல் இருக்கும். இதுஅமெரிக்காகூறுவதுபோல்உலகளாவிய கூட்டுப்படைக்கோ அல்லது அதன் நடவடிக்கைகளுக்கோமுற்றுப்புள்ளிவைத்ததற்கான அடையாளம் அல்ல. நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவதற்கு கூட்டுப்படை உறுப்பினர்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும்' எனப்பிரிட்டனின்அரசுசெய்தித்தொடர்பாளர் கூறினார்.

## ன்னாள் இராணுவத் தளபதி சுட்டுக் கொலை

அபுஜா - கெவ்பி நெடுஞ்சாலையில்மகிழுந்துஒன்றில்பயணித்துக்கொண்டிருந்தபோதுஅவருடைய மகிழுந்தை வழிமறித்த அடையாளம்தெரியாதநபர்கள் அவரைத்துப்பாக்கியால்சுட்டுக் கொன்றதாகவும், இந்தத்தாக்குதலில் மேலும் இருவர் சாவடைந்ததாகவும் நைஜீரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இவர் 2012ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் விமானப் படைத்தளபதியாகப்பதவியேற்றவர், பின்னர் முப்படைகளின் தளபதியாக 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பொறுப்பேற்றார். 2015ஆம் ஆண்டு வரை பதவியில் இருந்தவர்.

## பா.ஜ.கா ஆட்சியில் இருந்து அகலும் சிவசேனா காட்டமான விமர்சனம்


மும்பை.டிசெ.21
அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவது என்பது பா.ஜ.க.வின் மற்றொரு வெற்று வார்த்தை, பா.ஜ.க. ஆட்சியில் இருந்து அகலும் பயணம் தொடங்கிவிட்டது என்று சிவசேனா கட்சி கடுமையாக விமர்சித்துள்ளது. பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள சிவசேனா கட்சி தனது அதிகாரபூர்வ நாளேடான சாம்னாவில் தலையங்கத்தில் இவ்வாறாகப் பாஜகவைக் கடுமையாக விமர்சித்துள்ளது.

அயோத்தியில் ராமர் கோயில் கட்டும் வாக்குறுதி என்பது பா.ஜ.க.வின் மற்றொரு வெற்று வார்த்தையாகவே பார்க்கிறோம். சமீபத்தில்சத்தீஸ்கர், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களில் நடந்த தேர்தலில் தோல்வி அடைந்தபோதிலும்கூட, பாஜகஇன்னும்தூக்கத்தில்இருந்துவிழிக்கவில்லை.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர் மோகன்பகவத், பகவத்கீதையில்வார்த்தையைக்கோடிட்டுப்பேசியவார்த்தையில் இருந்து இன்னும் பாடம் கற்கவில்லை பா.ஜ.க, சமீபத்தில் ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பகதவ் பகவத் கீதையைக் கோடிட்டு, அகங்காரம் என்ற வார்த்தையின் பய்ன் குறித்துப்பேசினார்.

'நான்' செய்வதுதான் சிறந்தது, 'நான்' இதைச்செய்தேன் என்று 'நான்' என்ற வார்த்தை குறிக்கிறது. ஆனால், பாஜக சமீபத்தில் அடைந்த தேர்தல் தோல்வியால் எந்த விதமான பாடங்களும் கற்கவில்லை. கும்பகர்ணன் தூக்கத்தில் இருந்து பா.ஜ.க இன்னும் விழிக்கத் தயாராக இல்லை.

நாட்டில் உள்ள பெரும்பான்மை மக்களின் எண்ணம் அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதாகும். அதற்காகத்தான் 2014ஆம் ஆண்டு பாஜகவுக்கு மக்கள் வாக்களித்தனர். ஆனால், பா.ஜ.கவைப்பொறுத்தவரை அயோத்தியில் ராமர் கோயில் என்பது மற்றொரு வெற்றுவாக்குறுதிதான். பாஜகஆட்சியில்இருந்துஅகற்றும்பயணம்தொடங்கிஇருக்கிறது. இவ்வாறு சிவசேனா தெரிவித்துள்ளது.



## நில விரிப்பில் பொற்கோவில் சீக்கியர்கள் பலத்த எதிர்ப்பு

நியூயோர்க்.டிசெ.21
இணையவழியாகப்பொருள்விற்பனையில்ஈடுபடுகின்ற நிறுவனத்தில் கொள்வனவு செய்யப்பட்ட தரை விரிப்பில் சீக்கியர்களின் புனிதத் தலமான பொற்கோவிலின் படம் பதிக்கப்பட்டதைக் கண்டித்து அமெரிக்காவைச் சேர்ந்த சீக்கியர்கள் கூட்டமைப்பு எதிர்ப்புத் தெரிவித்தது.

இணையவிற்பனையில்ஈடுபடுகின்றபிரபலநிறுவனமான அமேசன் மூலம் விற்பனை செய்யப்பட்ட நில விரிப்பு களிலேயேசீக்கியர்களின்புனிதத்தலமானபொற்கோவிலைச் சித்திரிக்கின்ற ஒளிப்படம் இடம் பெற்றிருந்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இதைக் கண்டித்து அமெரிக்காவைச் சேர்ந்த சீக்கியர்கள் கூட்டமைப்புஅமேசான்நிறுவனத்தின்தலைமைச்செயல் அதிகாரிக்குக்கடிதம்அனுப்பியதாகவும், இதுபோன்றஆட்சேபனைக்குரிய பொருள்களை விற்பனை செய்வதற்கு நிரந்தரத் தடைவிதிக்க வேண்டும் எனவும், இனிவரும் காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாது என உறுதி அளிக்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் கோரிக்கைவிடப்பட்டுள்ளதாகவும்இந்தச்சம்பவம்குறித்து மேலும் தெரியவருகிறது.

ஆட்சேபனை தெரிவித்த சில மணி நேரத்தில் குறித்த பொருள்கள் அமேசான் விற்பனைத் தளத்தில் இருந்து நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வட்டியை உயர்த்தியது அமெரிக்க மத்திய வங்கி

வோஷிங்டன்.டிசெ.21
அமெரிக்காவின் மத்திய வங்கி, குறுகியகால வட்டி விகிதத்தை இந்த ஆண்டுக்குள் நான்காவது முறையாக உயர்த்தி உள்ளது. உலக வர்த்தகமானது அமெரிக்க டொலர்மதிப்பில் இயங்கி வரும்நிலையில், அமெரிக்காவின்மத்தியவங்கியானபெடரல்வங்கி;விலைவாசியைச் சீராகப் பராமரித்து டொலரைத் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் முகமாக முன்னெடுக்கின்ற நடவடிக்கை காரணமாக இந்த வருடத்துக்குள் வட்டி வீதத்தை நான்காவது தடவையாகவும் உயர்த்தியிருக்கிறது. நாட்டின் பொருளாதாரம் மற்றும் நிதி நிலைமை மேம்பாடு உள்ளிட்ட அம்சங்கள் குறித்து விவாதிப்பதற்காகப் பெடரல் வங்கியின் நிதிக்கொள்கை ஆய்வுக்குழு கூட்டம் நடைபெறும். இந்த கூட்டத்தில் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக வட்டி விகிதம் நிர்ணயம் உள்ளிட்ட முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டு அறி



விக்கப்படும். அவ்வகையில் நேற்று நடைபெற்ற நிதிக் கொள்கை ஆய்வுக்குழு கூட்டத்தில், குறுகியகால வட்டி விகிதத்தை 0.25 சதவீதம் உயர்த்த முடிவுசெய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி வட்டி விகிதம் 2.25 சதவீதத்தில் இருந்து 2.5 சதவீதமாக உயர்ந்துள்ளது. இதன்மூலம் இந்த ஆண்டில் 4ஆவது முறையாக வட்டி விகிதம் உயர்த்தப்பட்டுள்ளது.

## த போராட்டம் தியில் பணி

ளரின் தொழில் சங்கம் தங்
ர்களைஅத்தியாவசியமான
மட்டும் ஈடு படும்படி அறிவித்

கப்பொலிஸாருக்குவழங்கப்
கும் அவர்களுடைய மேலா
வை வழங்கும்படி இந்தத்
ம் வற்புறுத்துகிறது. இதன்
தப் போராட்டம் முன்னெடுக்
பரீஸ் விமான நிலையத்தின்
ள் இதனால் தாமதமாகின.
பரிசோதனைமற்றும்பயணி
ளைப் பரிசோதிப்பது போன்ற
ள் தாமதப்பட்டுப் அவை பய
தித்தன. இது சம்பந்தமான
ிரான்ஸின் பொருளாதார
போது இடம்பெறுகின்றன.

# நாடுகடத்தப்படுவதைஎதிர்த்துமுறையீடு செய்வதற்கு விஜய் மல்லையா தீர்மானம்

லண்டன்.டிசெ.21
பிரிட்டனில் தஞ்சமடைந்திருக்கின்ற இந்தியத் தொழிலதிபர் விஜய் மல்லையா தன்னை இந்தியாவுக்கு நாடு கடத்துமாறு அளிக்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராகமேல்முறையீடுசெய்வதற்குத் தீர்மானித்துள்ளார்.

இந்திய வங்கிகளில் சுமார் 9ஆயிரம் கோடி ரூபா (இந்திய மதிப்பில்) கடன் பெற்று அவற்றைத்திருப்பிச்செலுத்தாமல் பிரிட்டனில் தஞ்சமடைந்திருக்கின்றவிஜய்மல்லையாவைஇந்தியாவுக்கு நாடு கடத்துவதற்கு லண்டன் நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த நிலையில், தன்னை நாடு கடத்தும்



தீர்ப்புக்கு எதிராக விஜய் மல்லையா மேல்முறையீடுசெய்வார்என அவரது வழக்கறிஞர் தெரிவித்தார். அப்படி செய்யப்படும்மேல்முறையீட்டைநிரா கரிக்கவோ,விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளவோ நீதிமன்றத்துக்கு அதிகாரமுண்டு.

இந்த மேல்முறையீடு வழக்கு நடத்தப்பட்டால் இந்திய அரசைச் சேர்ந்த அதிகாரிகள் எதிரிகளாகச் சேர்க்கப்பட்டுவிசாரணை நடைபெறும்என்பதுகுறிப்பிடத்தக்கது.

**பின்னணி**

இந்திய வங்கிகளில் சுமார் 9ஆயிரம் கோடி ரூபா அளவுக்குக் கடன் பெற்றுள்ளபிரபலஇந்தியத்தொழில்அதிபர் விஜய் மல்லையாவுக்கு எதிராக இந்தியாமுழுவதும்பல்வேறுநீதிமன்றங்களில்வழக்குகள் நடைபெற்று வருகின்றன.

அவரைக் கைது செய்யும் உத்தரவுகளும், கைதாகும் பட்சத்தில் பிணையளிக்காத உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டு உள்ளன. இந்த கடன் மோசடி தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. லண்டனில் தஞ்சம் அடைந்துள்ள விஜய் மல்லையாவை இந்தியாவுக்கு கொண்டு வரும் நடவடிக்கையில் இந்திய அரசு ஈடுபட்டு வருகிறது.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## நிலமையை உணர்ந்து திருந்துவது அவசியம்

அமைச்சரவை நேற்றுப் பதவியேற்றுள்ளது. ஐப்பசி 26ஆம்நாள்கலைக்கப்பட்டதற்குமுன்னர்இருந்த கிட்டதட்ட அதேஅமைச்சரவையே மீண்டும் பதவியேற்றுக்கொண்டுள்ளது.ஐக்கியமக்கள்சுதந்திரமுன்னணியின் ஒரு சில அமைச்சுக்களைத் தவிர்த்து பெரும்பாலும் பழைய அமைச்சர்களே தமது அமைச்சுக்களை மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர். விரும்பியோ விரும்பாமலோ அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன அமைச்சர்கள்எல்லோரதும் நேற்று பதவியேற்பைநிகழ்த்திவைத்தார்.

இந்தஅமைச்சரவையின்முன்னுள்ளகடமைகளும், பணிகளும்ஏராளம். அவற்றைவிரைந்து குறுகியகாலத்துக்குள் நிறைவேற்ற வேண்டியது அமைச்சர்களின் கடமை.

ஐப்பசி26ஆம்நாள்தலைமைஅமைச்சரைப்பதவிநீக்கி, புதிய தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவை மைத்திரி நியமித்தமை அரசமைப்பை மீறுகின்ற நடவடிக்கையாக இருந்தபோதும் கூட்டு அரசின் ஆட்சிப் போக்கை மறுஆய்வு செய்துகொள்வதற்கான வாய்ப்பையும் அது வழங்கியது என்பதை மறுத்துவிட முடியாது.

அந்தக்காலப்பகுதியில்அதிகாரத்தில்இருந்தபோதுதாம் தவறு விட்டிருக்கின்றோம்என்பதைப்பலஅமைச்சர்கள் வெளிப்படையாகவே ஏற்றுக்கொண்டிருந்தார்கள். தலைமைஅமைச்சர்ரணில்விக்கிரமசிங்கஉள்ளிட்டமுக்கிய அமைச்சர்கள் பலரும் இதனை மக்கள் முன் ஏற்றுக்கொண்டிருந்தார்கள். கட்சிகளுக்கு இடையிலும் தலைவர்களுக்கு இடையிலும்காணப்பட்ட முரண்பாடுகளின் கரணமாகத்தான் இத்தகையதொரு நிலமை ஏற்பட்டது என்றும் அவர்கள் காரணம் கூறினார்கள்.

இப்போது ஒட்டு மொத்த அமைச்சரவையும் ஐக்கிய தேசியமக்கள்முன்னணியின்வசமே இருக்கப்போக்கின்றது. எனவே இனியும்குழப்பங்களைஏற்படுத்திக்கொண்டிருக்காமல் இனிவரும்குறுகியகாலத்திலாவது மக்களுக்குச் செய்யவேண்டியவற்றை மிக வேமாகச் செயற்படுத்துவதற்கு பதவியேற்றுள்ள அமைச்சரவை முன்வரவேண்டும்.

மக்கள்எதிர்பார்த்த அபிவிருத்தியைத்தாம் மேற்கொள்ளவில்லை என்பதைத் தாம் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்கள் கூறினார்கள். எனவே எஞ்சிய காலத்திலாவது மக்களுக்குப் பயனுள்ள வகையில் பணியாற்றுவதற்கு அவர்கள்முன்வரவேண்டும். போராலும் பொருளாதார நலிவாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் உடனடி உதவிகளை எதிர்பார்க்கிறார்கள். ஆனால், பதவிக்குவந்த கையுடனேயே மீண்டும் எரிபொருள் சூத்திரம் மீண்டும் நடைமுறைக்குவருகின்றது என்கிற அறிவிப்பே முதலில் வந்துள்ளது. இது ஏமாற்றத்தைக் கொடுகின்றது. இது போன்று அல்லாமல் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றக்கூடிய வகையிலான திட்டங்களைச் செயற்படுத்துவது குறித்து புதிய அமைச்சரவை சிந்திக்க வேண்டும்.

கடந்த மூன்றரை ஆண்டுகளில் தாம் விட்ட தவறுகளை ஐக்கியதேசியமுன்னணிஅமைச்சர்கள்உண்மையிலேயே உணர்ந்திருக்கிறார்கள் என்றால், அத்தகைய தவறுகள் மீண்டும் மீண்டும் நிகழாமல் தடுப்பது பதவியேற்றுள்ள அமைச்சர்களின் கடமை. குறிப்பாகத் தமிழ், முஸ்லிம் , மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் கடந்த மூன்றரை ஆண்டுகளில் விட்ட தவறுகள் மீண்டும் நிகழாமல் பார்த்துக்கொள்வது மிகவும் முக்கியம்.

கடந்த மூன்றரை ஆண்டுகள் ஆட்சிக் காலத்தில் அமைச்சர்கள் இடையே அதிகாரப் பனிப்போரும் தீவிரமாக இடம்பெற்று வந்தது. வடக்கில் உள்ள மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதில் அமைச்சர்கள் இப்படி விட்டுக்கொடுக்காமல் மோதிக்கொண்டதன்காரணமாக அந்த வீடுகளை அமைத்துக் கொடுக்கும் வேலைத் திட்டமே தொடங்கப்படவில்லை என்பது கண்கூடு. எனவே அமைச்சர்கள் தமக்கிடையிலான பிணக்குகளை ஒதுக்கி வைத்துவிட்டு மக்களுக்குப் பயனுள்ள வகையில் செயற்படுவதற்கு முன்வரவேண்டும். ஆற்றுவதற்கான பணி மலைபோல் குவிந்து கிடக்கும் போது ஓய்வு ஒழிச்சல் இன்றி அதனை நிறைவேற்றுவதற்கான காரியங்களில் ஈடுபடவேண்டும்.

# நிறைவேற்று அதிகார முறைமை ஒழிக்கப்படுதல் மிகவும் அவசியம்

## வலியுறுத்துகிறார் எம்.பி.சரவணபவன்

**அரச தலைவர் நிறைவேற்று அதிகார முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்று ஜே.வி.பி. கொண்டு வந்த 20ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் நாடாளு மன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறை ஒழிக்கப்பட வேண்டும் என்ற தனது கருத்தை அழுத்தம் திருத்தமாக முன்வைத்தார். அவரது உரையின் முழு வடிவம் இங்கு தரப்படுகின்றது.**

பெரும் அரசியல் நெருக்கடி ஒன்றின் பின்னர் இந்தச் சபையில் கூடியிருக்கின்றோம். மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்பதைப் போல தலைமை அமைச்சர் யார்? என்கிற சர்ச்சையில் இருந்து இப்போது எதிர்க்கட்சித் தலைவர் யார்? என்கிற சர்ச்சைக்கு நகர்ந்திருக்கின்றோம். நாடாளு மன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சர் பதவிக்கான அடிதடியின்போது, "நான் நிறைவேற்று அதிகார அரசதலைவராக இருந்தவன். எனக்குப்பதவி ஆசை இல்லை" என்று இந்தச்சபையிலேயே கூறியிருந்தார்.



ஆனால், தற்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு அவர் மீண்டும் போட்டிபோடுவதைப் பார்க்கும்போது, பதவி ஆசை யாரைத் தான் விட்டு வைத்தது என்று எண்ணத் தோன்றுகின்றது. இந்த விவாதத்தில் நாம் கலந்து கொள்ள வேண்டிய தேவை அதன்காரணமாகவே ஏற்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு அரசதலைவர் தேர்தலின்போது நிறைவேற்று அரசதலைவர் முறைமையை முற்றாக ஒழிப்பேன் என்று வாக்குறுதி வழங்கிய மைத்திரிபால சிறிசேன, தற்போது அந்த வாக்குறுதியிலிருந்து பின்வாங்கியுள்ளார். அதன் காரணம் கொண்டே அவர் பதவியில் இருக்கும் போதே நிறைவேற்று அதிகாரத்தை முற்றுமுழுதாக ஒழிக்க வேண்டும் என்கிற கோரிக்கையை நாம் வலியுறுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

**மகிந்த ஒரு சர்வாதிகாரி!**

"இன்று இந்த நாட்டை நிர்வகிப்பது அமைச்சரவை அல்ல. நாடாளுமன்றம் அல்ல. மாறாக இந்த நாட்டை ஒரு குடும்பமே ஆட்சி செய்கின்றது. அதனூடாக நாடு உறுதித்தன்மையை இழந்துள்ளது. இந்த நிலை தொடர்ந்தால் நாட்டில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்.எனவே நாட்டின் அரசியல் உறுதிப்பாட்டை வலுப்படுத்தி, நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு சட்டவாட்சியை நாடாளுமன்றத்தின் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும். அரசியல் உறுதிப்பாட்டைக் காண்பதற்கே இன்று இந்த முக்கிய பொறுப்பை ஏற்றுள்ளேன்.

நிறைவேற்று அதிகாரமுடைய அரசதலைவர் முறைமையை நூறு நாள்களுக்குள் நாடாளுமன்றத்தின் ஒத்துழைப்போடு இரத்துச் செய்து, அமைச்சரவை ஊடாக நாடாளுமன்றத்துடன் இணைந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசமைப்பொன்றை உருவாக்குவதே இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தின் முக்கிய இலக்காகும்." என்று தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தார் அப்போதைய அரசதலைவர் மகிந்த ராஜபக்ச.

1978ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த அரசதலைவர் முறைமையால் நாட்டு மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தனர். பின்னர் காட்டுத்தனமான சர்வாதிகாரப் போக்குடைய ஒருவரின் கையில் இந்த அதிகாரங்கள் சென்றதன் விளைவாக இந்த நாடே அவரது குடும்பச் சொத்தாக மாற்றப்பட்டது. ஒருகட்டத்தில் இதன் பாதிப்புக்களை உணர்ந்துகொண்ட இந்த நாட்டின் குடிமக்கள் நிறைவேற்று அரசதலைவர் முறைமையே வேண்டாம் என்ற நிலைப்பாட்டுக்கு வந்தனர். இந்த சந்தர்ப்பத்தில், தான் மைத்திரிபால சிறிசேன, "நிறைவேற்று அதிகாரத்தை 100 நாள்களுக்குள் முற்றாக ஒழிப்பேன்!" என்று கூறினார். அவர் வழங்கிய அந்த வாக்குறுதி மீது நம்பிக்கை கொண்டே மக்கள் அவருக்கு வாக்களித்தார்கள். குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்களும், முற்போக்குச் சிங்கள மக்களும் அவருக்கான ஆதரவை தர முன்வந்தனர் எனலாம்.

**அரச தலைவர் பதவியில் தொடர்ந்தும் நீடிப்பதற்கே மைத்திரி முயற்சிக்கிறார்**

19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக நிறைவேற்று அரச தலைவர் பதவியின் அதிகாரங்கள் வெட்டிக் குறைக்கப்பட்டன. எனினும் அதிகாரங்கள் முற்றாகக் குறைக்கப்படவில்லை என்பது தெளிவாகியுள்ளது. இரண்டாவது தடவையாக நிறைவேற்று அரச தலைவர் பதவியை வகிக்கும் எண்ணம் தமக்கில்லை என்று மைத்திரிபால சிறிசேன கூறியதன் அடிபடையிலும், நிறைவேற்று அதிகார முறைமையை முற்றிலுமாக அழிப்பதற்கு அவர் ஒருபோதும் தடையாக இருக்கமாட்டார் என்கிற நம்பிக்கையிலுமே பெரும்பான்மையான மக்கள் அவருக்கான ஆதரவை வழங்கியிருந்தனர்.வாக்களித்தனர்.

ஆனால் தற்போது, "ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும்" மாற்றுவதற்கான அதிகாரத்தைதத் தவிர ஏனைய அனைத்து அதிகாரங்களையும் தன்னார்வமாக வழங்குகின்ற அரச தலைவர் பதவியில் தொடர்ந்தும் இருப்பதற்கு அவர் முயற்சிப்பதாகவே தெரிகிறது. மீண்டும் அந்தப் பதவியில் அமர்வதற்கும், அதிகாரத்தைக் கையிலெடுத்துக் கோலோச்சுவதற்கும் அவர் தயாராகிவிட்டார் என்கிற விடயம் கவலைக்குரியது.அவர் தற்போது கொண்டுள்ளதான இந்த உள்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான முயற்சியாகவே அண்மைய அரசியல் நெருக்கடிகளை நோக்க வேண்டியுள்ளது. மக்கள மத்தியில் உள்ள கருத்து வெளிப்பாடு இதுவாகவே அமைந்துள்ளது.



இந்த சந்தரப்பத்திலே கடந்த செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உரையாற்றும்போது குறிப்பிட்ட விடயங்களை இங்கு நாம் ஆழமாக எடுத்து நோக்க வேண்டும்.

குறிப்பாக, "இந்த நாட்டினுடைய அரச தலைவராக, கடந்த மூன்றரை வருடங்களுக்கு மேலாக இந்த நாடும் அரசும் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து மகிழ்ச்சியடைகிறேன். 2015 ஜனவரி 8 ஆம் திகதி மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டு இலங்கையின் அரச தலைவராகப் பொறுப்பேற்றபோது, எனது நாட்டில் தற்போது நான் வகிக்கும் பதவிக்காக வழங்கப்பட்டிருந்த எல்லையற்ற நிறைவேற்று அதிகாரங்கள், அதாவது ஓர் அரசனுக்கும் அப்பால் பேரரசனுக்கான அதிகாரங்களுக்குச் சமமாக இருந்த எல்லையற்ற அதிகாரங்களை இந்தக் காலகட்டத்தில், அந்தப் பதவியை ஏற்கின்ற ஓர் அரச தலைவன் என்ற வகையிலும், ஒரு மனிதன் என்ற வகையிலும் முன்னெடுக்க வேண்டிய மிக முக்கியமான வரலாற்றுக் கடமையாக இருந்த, எனக்குக் கிடைத்திருந்த அந்த எல்லையற்ற அதிகாரங்களைக் குறைத்து அவற்றை இலங்கையின் நாடாளுமன்றத்துக்குக் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டேன் என்பதை இங்கே தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்." என்று பன்னாடுகள் சங்கமிக்கின்ற உயரிய சபையில் கருத்துரைத்த விடயங்கள் பொய்யாகிப் போயுள்ளன. தான் குறிப்பிட்டது போன்று செயற்படவில்லை என்பதை அரசியல் சூழ்ச்சியின் வழியே தற்போது உறுதி செய்துள்ளார். தவிர அவர் உயரிய சபையிலே குறிப்பிட்டது போன்று எஞ்சிய அதிகாரங்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அவர் முன்வந்து செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அதுவும் நடக்கவில்லை.

**சொன்னதைச் செய்யாத**
**பதவி மோக ஆசாமியாக மைத்திரி**

இந்த சந்தர்ப்பத்திலே இதற்கு ஒரு வருடம் முன்பாக கடந்த 2017ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் சபையில் ஆற்றிய உரை குறித்தும் இங்கு எடுத்து நோக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அவர் அங்கு குறிப்பிடும் போது, "2015 ஜனவரியில் இலங்கையின் புதிய அரச தலைவராக தெரிவு செய்யப்பட்டிருந்தேன். அவ்வாறு தெரிவு செய்யப்பட முன்னர் எனது அன்புக்குரிய நாட்டு மக்களுக்கு பல வாக்குறுதிகளைக் கொடுத்திருந்தேன். அதில் நான் விசேடமாக குறிப்பிட்ட விடயம், உலகில் எந்தவொரு நாட்டுத் தலைவருக்கும் இல்லாத அதிகாரங்க்ள் இலங்கையின் அரச தலைவருக்கு இருப்பதனால் நான் ஆட்சிக்கு வந்தவுடன் அந்த அதிகாரங்களை விலக்கி நாட்டின் நாடாளுமன்றத்திடம் ஒப்படைப்பதான வாக்குறுதியே அதுவாகும். ஆட்சிக்கு வந்த தலைவர், அரசமைப்புக்கமைய அளவற்ற அதிகாரங்களுடன் ஆட்சியில் இருக்கும்போது அந்த அதிகாரங்களை மீள ஒப்படைத்த அரச தலைவரென்ற ரீதியில் எனது நாட்டுக்கும் பன்னாடுகளுக்கும் அதிகாரத்தை கைவிடுவது தொடர்பான முன்மாதிரியை நான் வழங்கியுள்ளேன். ஆட்சிக்குவரும் தலைவர்கள் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கும், அதிகாரத்தை உரியவாறு பயன்படுத்துவதற்கும், நியாயமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கும் தமது அதிகாரத்தை பயன்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும்.

ஆயினும் கடந்த பல தசாப்தங்களாக உலக வரலாற்றை நோக்கும்போது பல தலைவர்கள் அதிகாரத்திலிருந்து விலகிச் செல்ல விரும்பாமை காரணமாக அந்த நாட்டின் சமாதானம் சீர்குலைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

இந்தநிலையிலே எனது நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி, ஏகாதிபத்திய அரசியலை கொண்டு நடத்திய அரசியல் குழுக்களை அகற்றி, நாட்டில் மக்களின் சுதந்திரத்தையும் ஜனநாயக்தையும் உறுதிப்படுத்தி, ஜனநாயகத்தை பாதுகாத்து அடிப்படை உரிமைகளை மேம்படுத்தி, கடந்த இரண்டரை ஆண்டுகளாக வெற்றிகரமாக பயணித்துள்ளேன் என்பதை இந்த கௌரவம் மிக்க சபையில் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று சுட்டிக்காட்டியி ரு ந்தார்.

இங்கு கவனிக்கப்படவேண்டிய விடயம் யாதெனில், உலக வரலாறுகளின் அடிப்படையில் அங்கு தலைவர்கள் அதிகாரத்திலிருந்து விலகிச் செல்ல விரும்பாமையால் அந்த நாடுகளில் சமாதானம் சீர்குலைந்து போயுள்ளது." என்பது தான். ஏனெனில் தற்போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் அதுவிதமே அதிகாரத்திலிருந்து விலகிச் செல்ல விரும்பமின்றி இருக்கின்றார். இலங்கையின் அரசியல் சூழமைவில் குழப்பங்களை விளைவித்து வருகிறார் என்பது உலகறிந்த உண்மையாகி விட்டதை யாரும் மறுத்துரைக்க முடியாது.

**நிறைவேற்று அதிகார அரசதலைவர் முறைமையை ஒழிக்க நடவடிக்கை வேண்டும்!**

எப்படியிருந்தாலும் நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை ஒழிப்பேன் என்று நாட்டு மக்களுக்குத் தான் வழங்கிய வாக்குறுதியை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நிறைவேற்ற வேண்டும். அதற்கான முயற்சிகள் எதற்கும் அவர் முட்டுக்கட்டை போடக்கூடாது.

இங்கு, நிறைவேற்று அரசதலைவர் முறைமையை ஒழிப்பதென்பது பெரும்பான்மையில் மட்டும் தங்கியிருக்கும் விடயம் என்பதுடன் அது நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை சமநிலைப்படுத்துவதற்கான பொறிமுறையைச் சிதைக்கும் நடவடிக்கை என்கிற கவலையும் கரிசனையும் தமிழ், முஸ்லிம், மலையகச் சமூகங்களுக்கு இருக்கின்றது என்பதை மறுத்துரைக்க முடியாது.

அதேவேளை நாட்டின் அதிகார மையங்களைத் தீர்மானிப்பதில் தமிழ், முஸ்லிம், மலையகச் சமூகங்களின் வகிபாகத்தை அல்லது பலத்தை நிலைநாட்டக்கூடிய வாய்ப்பை நிறைவேற்று அதிகார அரசதலைவர்முறை தருகின்றது என்கிற கருத்தை அண்மையில் இந்த விவகாரம் பேசுபொருளானபோது இந்த அவையில் அமர்ந்திருக்கும் பல கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் சுட்டிக்கட்டியிருந்தார் கள். எனினும் அவர்களின் கருத்தும்கூட நிறைவேற்று அதிகார முறையை முற்றிலும் ஒழிப்பதற்கு எதிரானது இல்லை. தமிழ், முஸ்லிம், மலையகச் சமூகங்களின் உரிமைகள் அரசமைப்பின் ஊடாக முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டு எல்லாச் சமூக மக்களும் இலங்கை நாட்டில் சமத்துவமாக வாழமுடியும் என்கிற சூழல் ஒன்று ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர், நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறை ஒழிக்கப்படுவது ஆபத்தானது என்கிற கரிசனை காரணமாகவே அவர்கள் இந்த எதிர்ப்பை முன்வைத்திருந்தார்கள்.

அது முற்றிலும் உண்மையும்கூட. மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மை உறுப்பினர்களைச் சிங்களவர்களாகக் கொண்ட இந்தச் சபையில் தமிழ், முஸ்லிம், மலையகச் சமூகங்களின் உரிமைகள் முறைப்படி உறுதிப்படுத்தப்படாத நிலையில் நிறைவேற்று அதிகார முறைமையையும் ஒழித்துவிடுவது கரிசனைக்குரிய செயல்தான். மலையத்தில் இருந்து தமிழர்கள் இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்பட்டமைக்கு நாடாளுமன்றத்தில் சிங்களவர்கள் பெரும்பான்மையாக இருப்பதே முக்கிய காரணம் என்பதை மறந்துவிட முடியாது. அதுபோன்ற ஆபத்துக்கள் பற்றிச் சிந்திக்காமல் இருக்குமளவுக்கு இந்தச் சபையில் உள்ள உறுப்பினர்கள் புனிதர்களோ, பகுதறிவாளர்களோ இல்லை என்பதைக் கடந்த சில வாரங்களில் நிரூபித்திருக்கிறார்கள். எனவே, நாடாளுமன்றப் பெரும்பான்மை அதிகாரத்தைச் சமநிலைப்படுத்தி தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கு ஓரளவுக்குப் பாதுகாப்பை வழங்கக்கூடிய சமநிலைத் தன்மையை நிறைவேற்று அரச தலைவர் முறைமை கொண்டிருக்கிறது என்பது உண்மைதான்.

**புதிய அரசமைப்பின் ஊடாகவே**
**தீர்வு சாத்தியம்!**

ஆனால், அரச தலைவராக ஒரு கட்சியைச் சேர்ந்தவர் இருக்கும்போதும், நாடாளுமன்றத்தின் கட்டுப்பாட்டை மற்றொரு கட்சியைச் சேர்ந்தவர்கள் வைத்திருக்கும் போதும் தான் அத்தகையதொரு சமநிலைத் தன்மை இருக்க முடியும்.

இரு அதிகாரங்களுமே ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களிடம் இருக்கும்போது இதே தமிழ், முஸ்லிம், மலையகச் சமூகம் இரு குழல் பீரங்கித் தாக்குதலுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதை மறந்துவிட முடியாது. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் அதுதான் நடந்தது என்பதையும் மறந்துவிட முடியாது. எப்படிப் பார்த்தாலும் நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையால் நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களுக்குமே சிக்கலும் பிரச்சினைகளும் அதிகமாகவே இருக்கின்றன. எனவே அதனை நீக்கிவிட்டு மாற்று வழிகளைச் சிந்திக்க வேண்டியது அவசியம். அதைப் பொறுமையோடும் புதிய அரசமைப்பின் ஊடாகவும் செய்வதுதான் புத்திசாலித்தனமும்கூட. அதைவிடுத்து கடந்த சில மாதங்களாக நடந்த சம்பவங்களின் அடிப்படையில் உணர்ச்சிவசப்பட்டு, பழிவாங்கும் வகையில் அவை நடந்தேறிவிடக்கூடாது.

## ஆசிரியருக்கான கடிதம்

# கேணிக்கு மீண்டும் உயிர் கொடுங்கள்!

வடமாகாணத்தில் அண்ணளவாக 500 கேணிகள் வரை கிராமங்கள் தோறும் அமைந்து அங்குள்ள மக்களுக்கு வாழ்வளித்தன. தவிர உழைத்துக் களைத்த கால்நடைகள் கேணிகளை நாடிச் சென்று தங்கள் தாகத்தை தீர்த்துக்கொண்டன. குறிப்பாக மண்ணும் மனிதனும் பயனுறவேண்டியே நமது முன்னோர்கள் கிராமங்கள் தோறும் கேணிகளைத் தோண்டி சார்பு நிலை வாழ்வைச் சமநிலைப்படுத்தினர் எனலாம். ஆனாலும் இவ்வாறு தூர நோக்கிலே பராமரிக்கப்பட்ட கேணிகள் பலவும் கடந்த காலத்தில் மூடப்பட்டு விட்டன. தற்போது மீதமாக உள்ள கேணிகள் மூடப்பட்டு வருகின்ற துர்ப்பாக்கிய நிலை தொடர்கிறது. இது கவலை தரும் விடயம். அதேநேரத்தில் சில கேணிகள் சீர்செய்யப்பட்டுப் பாவனைக்கு விடப்படாமலும் உள்ளன.

இந்த சந்தர்ப்பத்திலே வரலாற்றுப் பொக்கிசமாகத் திகழ்ந்த அளவெட்டியிலுள்ள கேணிக்கரை என்ற குறிச்சிக்கே காரணமாக விளங்கிய 'கேணி' வரலாற்றின் ஆதாரமாக தனித்துவம் பெறுவதை யாரும் மறுத்துரைத்துவிடமுடியாது.

குறிப்பாக வழுக்கியாறு எப்போது ஆரம்பித்ததோ, மாருதப்புரவீக வல்லியின் வரலாறு எப்போது நிகழ்ந்ததோ, பனாக்கைக்குளம் எப்போது பல் நாக்குடையதாகச் சீலாப்பட்டையால் இறைத்துப் பயன்பட்டதோ அன்றிலிருந்து கேணிக்கரை அளவெட்டியை வளம்படுத்தியது. இத்தகு சிறப்புடைய கேணியை அரச அனுமதி பெறாமல் தாம் எண்ணியபடி மூடிய கைங்கரியத்தை மிகப் பெரிய வராலற்று ஆதாரத்தின் அழிவாகவே பார்க்க வேண்டியுள்ளது. கேணியின் மீளுருவாக்கம், மீள் பயன்பாடு குறித்து உரிய தரப்பினர் கரிசனை கொள்வார்களா? புதைக்கப்பட்ட, புதையுண்ட கேணியை நவீன சாதனங்களின் உதவியோடு மீட்டெடுக்க நடவடிக்கை மேற்கொள்வார்களா?

*கே.எஸ்.சிவஞானராஜா*

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.



# புத்தியே பலம்

ஒரு காட்டில் வயது முதிர்ந்த சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. அதனால் மிருகங்களை வேட்டையாட முடியாதிருந்தது.


எனவே அது பசியால் வாடியது. சிங்கம் ஒருநாள் குகை அருகே வந்தது. குகை வாயிலில் எலும்புத் துண்டுகள் பல இருப்பதைக் கண்டது. பக்கத்தில் மிருகம் ஒன்றின் கால் அடையாளம் இருப்பதையும் கண்டது.

பசியில் இருந்த சிங்கத்துக்கு ஒரு யோசனை தோன்றியது. இந்தக் குகைக்குள் ஏதோ ஒரு மிருகம் வாழ்கின்றது போலுள்ளது. குகைக்குள் இப்போது ஒளிந்து கொண்டிருந்தால் மாலையானதும் இதற்குள் வசிக்கும் மிருகத்தை பிடித்து உண்ணலாம்" என சிங்கம் எண்ணியது.

மாலையானதும் நரி தன் குகைக்குள் வந்தது. குகையின் வாசலில் தன் காலடியைப் பார்க்கிலும் மிகப் பெரிய மிருகம் ஒன்றின் கால் அடித்தடங்களைக் கண்டது.சிறிது நேரம் திகைத்து நின்றது. பின்னர் அமைதியாகச் சிந்தித்தது. "குகையாரே நான் நரி வந்திருக்கிறேன். உள்ளே வரலாமா?" என்று கேட்டது. குகை பேசவில்லை. "குகையாரே நீர் பேசாதிருந்தால் நான் திரும்பிச் சென்றுவிடுவேன்" என்று கூறிக் கொண்டே திரும்பியது.

உள்ளே பதுங்கியிருந்த சிங்கம் பலமாக யோசித்தது. அடடே நான் இருக்கும் குகை பேசும் போலிருக்கிறதே நான் இங்கே இருப்பதால்தான் பேசாதிருக்கிறதோ" என்று எண்ணி "நரியாரே நில்லுங்கள். நீங்கள் தாராளமாக உள்ளே வரலாம்" என்று கூறி தன் குரலை எழுப்பி கர்ஜித்தது. குகையின் உள்ளே சிங்கம் இருப்பதை அறிந்து கொண்ட நரி திரும்பிப் பாராமல் தப்பினேன் பிழைத்தேன் என்று ஓட்டம் பிடித்தது.

## உடல் உறுப்புக்களின் பெயர்களை எழுதுவோம்




தலை, கண், காது, வாய், கழுத்து, மார்பு, வயிறு, கை, விரல், கால், பாதம்

## வர்ணம் தீட்டுவோம்







## மீன்களுக்கு காது உண்டா?

கடல் எப்போதுமே பேரிரைச்சலுடன் இருக்கிறது. கடலுக்குள் உள்ள எரிமலைகள் வெடித்துச் சிதறுகின்றன. கடலுக்குள் நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. அப்போது ஏற்படும் சத்தங்கள் கடலில் வாழும் மீன்களுக்குக் கேட்குமா? 'கேட்கும்' என்றே சொல்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

மீன்களுக்கு வெளிப்படையாகத் தெரியும் அளவுக்குக் காதுகள் இல்லை. ஆனால் மீன்களுக்கு ஒலியை உணரும் அமைப்புகள் உள்ளன. அவை மீனின் தலைப்பகுதிக்குள் சிறு துளைகளோடு உட்புறமாக அமைந்துள்ளன. தண்ணீருக்குள் எழும் ஒலி அதிர்வுகளை, இந்தச் சிறு துளைகளின் வழியாக மீன்களால் உணர முடியும்.

மேலும் மீன்களின் உடலில் கண்ணுக்குத் தெரியாத அளவுக்குச் சிறு சிறு துளைகள் உள்ளன. இவற்றின் வழியாகவும் தண்ணீரில் ஏற்படும் ஒலி அதிர்வுகளை அவை உணரும். குறிப்பாக, வீடுகளில் தொட்டிகளில் வளர்க்கிறோமே தங்க மீன்கள், அவற்றுக்கு இந்த உணரும் ஆற்றல் ரொம்ப அதிகம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். சிறிய நீர் அதிர்வுகளைக்கூட இந்த மீன்கள் உடனே உணர்ந்துவிடும் . இதன் மூலம் எதிரிகள் தண்ணீரில் இருப்பதை அந்த மீன்களால் அறிந்து கொள்ள முடிகிறது. உண்மையில் மீன் தண்ணீருக்குள் இருப்பதை மனிதர்களால் அறிய முடியாது. ஆனால், கரையில் நாம் நடமாடுவதை மீன்கள் உடனே உணர்ந்து அங்கிருந்து தப்பித்துப் போய் விடும்!



## சேகுவேரா



சேகுவேரா என்பவர் அஜென்ரீனாவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒரு புரட்சியாளர். அத்துடன் மருத்துவர் மார்க்சியவாதி. அரசியல்வாதி. கியூபா மற்றும் பல நாடுகளின் புரட்சிகளில் பங்குபெற்ற போராளியும் ஆவார். மிக இளம் வயதிலேயே அரசியல் தொடர்பான பரந்த அறிவைப் பெற்றுக் கொண்டார். அது சோசலிசம் பற்றிய இவரது கருத்துக்களுக்கு வழிகாட்டியது. நண்பர் ஒருவருடன் சேர்ந்து மோட்டார்சைக்கிளில் தென்னமெரிக்கா முழுவதும் பயணம் செய்தார்.

பெரு நாட்டில் அமேசான் ஆற்றங்கரையில் இருந்த தொழுநோயாளர் குடியேற்றம் ஒன்றில் சில வாரங்கள் தொண்டு செய்வது இவரது பயணத்தின் நோக்கமாக இருந்தது. பயணத்தின்போது அவர் எடுத்த குறிப்புக்களைப் பயன்படுத்தி "மோட்டார் ஈருருளிக் குறிப்பு கள்" என்னும் தலைப்பில் நூலொன்றை எழுதினார். இது நியூயோர்க் ரைம்ஸ் இன் அதிக விற்பனை கொண்ட நூலாகவும் பின்னர் 2004இல் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டு விருதுகளைப் பெற்றது.

பரவலான வறுமை, அடக்குமுறை, வாக்குரிமை பறிப்பு என்பவற்றை இலத்தீன், அமெரிக்கா முழுவதும் நேரடியாகக் கண்டதால் மார்க்சிய நூல்களின் செல்வாக்கும் ஒன்றுசேர ஆயுதம் ஏந்திய புரட்சி மூலமே தீர்வு காணமுடியும் என சேகுவேரா நம்பினார். தனது பயணத்தின் முடிவில் இலத்தீன் அமெரிக்காவைத் தனித்தனி நாடுகளாகப் பார்க்காமல் ஒட்டுமொத்தமாக கண்டம் தழுவிய விடுதலைப் போர்முறை தேவைப்படும் ஒரு பகுதியாகப் பார்த்தார். 'எல்லைகளற்ற தென் அமெரிக்கா' என்னும் சேகுவேராவின் கருத்து அவரது பிற்காலப் புரட்சி நடவடிக்கைகளில் தெளிவாக வெளிப்பட்டது. பிடல் காஸ்ரோவின் போராட்ட இயக்கத்தில் இணைந்து கொண்டார். அந்த இயக்கம் 1959ஆம் ஆண்டில் கியூபாவின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது.

அதன் பின்னர் கியூபாவின் மத்திய வங்கியின் தலைவராக 14ஆண்டுகள் பணியாற்றினார். 1964ஆம் ஆண்டு டிசெம்பர் 11ஆம் திகதியன்று கியூபாவின் பிரதிநிதியாக ஐக்கிய நாடுகள் சபையில் 19 ஆவது பொது அமர்வில் உரையாற்றினார்.

பின்னர் கொங்கோ கின்ஸாவா (தற்போது கொங்கோ ஜனநாயகக் குடியரசு) மற்றும் பொலுவியா போன்ற நாடுகளின் சோசலிச போராட்ட வளர்ச்சிக்குக் கைகொடுக்க முன்வந்தார். 1966ஆம் ஆண்டுகளில் கொரில்லாப்போரை வழிநடத்தும்பொருட்டு சட்டவிரோதமாக பொலூவியாவுக்குள் நுழைந்தார். பொலூவியாவின் ஏழ்மையும் அங்கு நிலவிய சமூக மற்றும் பொருளாதார நிலைகளும் எந்தநேரமும் அங்கு புரட்சி வெடிக்கச் சாதகமாக இருந்தது. அங்கு மேற்கொள்ளப்பட்ட அமெரிக்க புலனாய்வுச் சிறப்பு இராணுவ நடவடிக்கை ஒன்றின்போது இவர் கைது செய்யப்பட்டார். பொலூவிய இராணுவத்தால் 1967 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 9ஆம் திகதி சேகுவேரா கொல்லப்பட்டார்.

அத்தாவது சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல் கொல்லப்பட்ட போராளியாவர். இன்றைக்கு உலகிலுள்ள சோசலிச புரட்சி இயக்கங்களால் மிகவும் மரியாதைக்குரிய ஒருவராகக் கொண்டாடப்படுகின்றார்.

## மாகாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ - து)

**Nothern Province M.P.C.S.s' Federation (Ltd)**
**Registered No : N.E.P/02 of 29/05/2006**
**No. 08 Mullai Road, Paranthan 20, December, 2018**

எமது வடமாகாண பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் வெற்றிடமாக உள்ள பொதுமுகாமையாளர் பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| பதவி | - பொதுமுகாமையாளர் |
| சம்பளக்குறி இல. | - 101/6 |
| சம்பள அளவுத்திட்டம் | - 19655 - 255 X 10 - 300 X 10 - 25205 (04/2018 இன்படி) |
| வயதெல்லை | - 18 - 45 வரை (கூட்டுறவுப் பணியாளருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.) |

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் 07ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக்குறைந்தது மூன்று (03) ஆண்டுகால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 08ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது ஆறு (06) ஆண்டுகால அனுபவம்.

**அல்லது**

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டமொன்றுடன் அல்லது அதற்குச் சமமான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்டத்திலானபதவியொன்றில் ஆகக்குறைந்ததுஎட்டு (08) ஆண்டுகால அனுபவம் இதில் உயர்தர முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால கட்டாய அனுபவம்.

**அல்லது**

இ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் 06 வருடகால அனுபவம் இதில் சிரேஷ்ட முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 02 வருடகால அனுபவம் கட்டாயமானதாகும். அல்லது. க. பொ. த. உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியல் ஆகக்குறைந்தது 10 வருடம் சேவையாற்றிய அனுபவம். இதில் உயர்தர முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால கட்டாய அனுபவம்.

- மேற்படி சம்பளத் திட்டத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட விசேடபடி, வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் காலத்திற்குக் காலம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபத்திற்கு அமைய அதிகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
- **விண்ணப்பிக்கும் முறை:**
  தங்களால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தினை பூரணப்படுத்தி சேவைத் தகைமைச் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ், ஏனைய சான்றிதழ் பிரதிகளுடன் **தலைவர், வடமாகாண பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், இல. 08, முல்லை வீதி, பரந்தன்** என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கவும்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.
- பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
- கூட்டுறவுச் சங்கப் பணியாளராயின் சங்கத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

**முடிவுத் திகதி : 2019.10.01**

**தலைவர்**

(C 32309/15/18)

## இருளில் ஓர் ஒளிக்கீற்று

வானொலி நிகழ்ச்சி

தென்றல் FM THENDRAL 104.7 104.9

செங்கோலோச்ச விழையும் பெண்கள் தமது அனுபவங்களை உங்களுடன் பகிர்வதற்கான ஒரு மக்கள் களம்

### கேட்கத் தவறாதீர்கள்!

**தென்றல் அலைவரிசையில் பிரதி சனிக்கிழமை தோறும் காலை 9.30 மணிக்கு**

Spectrum Media




விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் பெருமையுடன் வழங்கும் 'இருளில் ஓர் ஒளிக்கீற்று' வானொலி நிகழ்ச்சி

விளம்பர அனுசரணை

ZOA RELIEF | HOPE | RECOVERY

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 | 21 |
| 12 | 11 |
| 1934 | 2018 |

கடந்த 21.11.2018 புதன்கிழமை இறைபதமெய்திய எமது குடும்பத் தலைவி

### அமரர் தர்மலிங்கம் பாறுபதி



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.12.2018) வெள்ளிக்கிழமை காலை 5 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கெம்மாந்துறை, வல்வெட்டித்துறை.**

(C/8787)(11.17)

**குடும்பத்தினர். 076 684 3011**

## ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

### வலிகாமம் தெற்கு பிரதேசசபை உப அலுவலகம், ஏழாலை.

**வட்டாரம் - 02, அளவாவோடை வீதி, ஆதன இலக்கம் முன்பு பதியப்படவில்லை, கோட்டைக்காடு மல்லாகம்.**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகத்துக்குட்பட்ட கோட்டைக்காடு மல்லாகம் எனும் முகவரியில் வட்டாரம் - 02. அளவாவோடை வீதியில் அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதன வரிப் பதிவேட்டில் முன்பு பதிவு செய்யப்படவில்லை.

வடக்கு மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, வலி.தெற்கு பிரதேச செயலகப் பிரிவு, J/202 கிராம சேவகர் பிரிவு, மல்லாகம் கோவிற்பற்று, ஏழாலை இறை, **"கோட்டைக்காடு"**, நிலப்பரப்பு ஒன்றும் குழி ஒன்று தசம் ஆறு ஏழும் (நிலப்: 01, குழி 01.67) இதற்கு எல்லைகள் கிழக்கு யோசேப் ஜெயராசா பெண் மேரிலூசியாவின் ஆதனம், வடக்கு நகுலேஸ்வரன் பெண் கலைவாணிக்கும் வரதராசா பெண் மாலினிக்கும் உரிய ஆதனங்கள், மேற்கு பாதை, தெற்கு ஸ்ரீவிஜயசங்கரின் ஆதனம் இவ்வெல்லைப்படி இதலடங்கலும் இதற்குரியவைகளும் எனக் குறிப்பிடப்பட்ட ஆதனமானது 6511 ஆம் இலக்க, 2008.07.02 ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிசு நன்னியன் தம்பிமுத்தன் எழுதிய அறுதி உறுதி மூலம் **மார்க்கண்டு தேவதாஸ்க்கும் பெண் இரத்தினமாலாவுக்கும்** ஆகியோருக்கு அறுதியாக வந்தடைந்துள்ளது. உத்தரவு பெற்ற நில அளவையாளர் ம.சிற்றம்பலம் அவர்களின் 2008.05.20 ஆம் திகதிய 2244 ஆம் இலக்க நில அளவை வரைபடத்தில் துண்டு - 01 எனக்குறிப்பிடப்பட்ட இவ்வாதனமானது நிலப்பரப்பு 01 குழி 01.67 அளவுடையதாகக் காணப்படுகின்றது. இவ்வாதனத்தினை பிரதேசசபை ஆதனவரிப் பதிவேடுகளில் **மார்க்கண்டு தேவதாஸ் பெண் இரத்தினமாலா** ஆகியோரின் பெயரில் பெயர்மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த ஆதனமானது மல்லாகம் கோட்டைக்காடு **தேவதாஸ் மகள் நதியா என்பவரால் மார்க்கண்டு தேவதாஸ்க்கும் பெண் இரத்தினமாலாவுக்கும் 6511 ஆம் இலக்க, 2008.07.02 ஆம் திகதி** பிரசித்த நொத்தாரிசு நன்னியன் தம்பிமுத்தன் எழுதிய அறுதி உறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வுறுதியின் தாயுறுதியாகிய **6471ஆம் இலக்க 2008.06.04 ஆம் திகதி** பிரசித்த நொத்தாரிசு நன்னியன் தம்பிமுத்தன் எழுதிய உறுதியானது **மார்க்கண்டு தேவதாஸ் பெண் இரத்தினமாலா** ஆகியோரால் வெளிப்படுத்தப்பட்டு எழுதப்பட்டுள்ளது. இதன்பின் காணும் ஆதனடாப்பில் நன்கு விவரிக்கப்படும் ஆதனம் முதலில் மல்லாகம் கோட்டைக்காட்டைச் சேர்ந்த கந்தன் தம்பன் அல்லது தம்பு என்பவருக்கு அவர் அதனை அறுதி வாங்கிய வகையிற் சொந்தமாயிருந்ததென்றும் ஆனாலும் அது தொடர்பான உறுதிகள் பின்பு எங்கோ தொலைந்துவிட்டன என்றும் அவற்றைத் தேடிக் கண்டுகொள்ளவியலாது போய்விட்டதென்றும் அவற்றின் விவரங்கள் தெரியாததால் யாழ்.காணிப்பதிவகத்திலிருந்தும் அவற்றின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதிகளைப் பெறவியலவில்லையென்றும் அவருக்கும் அவரது மனைவி பொன்னி என்பவருக்கும் பிள்ளைகள் இல்லாததால் அவர் தனது இறுதிக் காலத்தில் குறித்த ஆதனத்தை தனது குறித்த மனைவிக்கு வாய்மூல நன்கொடையாக அளித்திருந்தாரென்றும் அவரது மனைவி குறித்த பொன்னி என்பவர் அதன் பின்பு குறித்த ஆதனத்தை முழுமையாக ஆண்டனுபவித்து வந்த தனது இறுதிக்காலத்தில் தன்னைப் பராமரித்து வந்த எங்களில் 2 ஆம் பேரின் தாயாரான காலஞ்சென்ற அரியகுட்டி பெண் பூமணி என்பவருக்கு அதனை வாய்மூலமாக நன்கொடையாகக் கையளித்திருந்தாரென்றும் குறித்த ஆதனத்தைப் பின்பு ஆண்டனுபவித்து வந்த குறித்த அரியகுட்டி பூமணி அதனைப் பின்பு தனது மகளான எங்களில் **2ம் பேரான மார்க்கண்டு தேவதாஸ் பெண் இரத்தினமாலாவுக்கு வாய்மூல நன்கொடையாக அளித்திருந்தாரென்றும் குறித்த ஆதனம் இப்பொழுது எங்களில் 2ம் பேரின் ஆட்சியிலிருந்து வருகின்றதென்றும்** இந்தவகையில் குறித்த ஆதனம் முன்னோர் வழியாக முப்பத்தைந்து வருடங்களுக்கு மேற்பட்ட எங்களின் 2 ஆம் பேரின் தொடர்ச்சியானதும் தலையீடற்றதுமான ஆட்சியிலிருந்து வருகிறதென்றும் இந்த விவரங்களை வெளிப்படுத்தி உறுதிமுடிக்க வேண்டிய அவசியம் தற்போது எழுந்துள்ளதென்றும் அதனாலேயே இந்த வெளிப்படுத்தல் உறுதியை முடிக்கிறோம் என்றும் இத்தால் வெளிப்படுத்துகிறோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே மேற்குறித்த ஆதனத்தினை தற்போதைய உரிமையாளர் **மார்க்கண்டு தேவதாஸ் பெண் இரத்தினமாலா** என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் **இன்றிலிருந்து 30 நாள்களுக்குள் தகுந்த ஆதாரங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மார்க்கண்டு தேவதாஸ் பெண் இரத்தின மாலா** என்னும் பெயருக்குப் பெயர்மாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர்மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளுக்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை எந்த வகையிலும் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்குபிரதேசசபை, சுன்னாகம்.**

(CS21940)(11.17)

## யாழில் ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்



DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

Experts in English Training
சிறந்த வேலைவாய்ப்பிற்கு...
உள்நாட்டு, வெளிநாட்டு உயர் கல்விக்கு...

**Spoken English**

## ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்

Reading Writing Speaking Listening

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் / சண்டிலிப்பாய் / கிளிநொச்சி |
|---|---|---|---|
| Mon,Wed,Fri 8:00 a.m<br>Mon,Wed,Fri 3:30 p.m<br>Sat, Sun 3.30 p.m. | Tue, Thu 3.30 p.m.<br>Sat, Sun 3:30 p.m. | Tue, Thu 08.30 a.m.<br>Sat,Sun 08.30 a.m. | சுன்னாகம் Sat,Sun 9:30 a.m<br>சண்டிலிப்பாய் Mon,Wed,Fri 1:30 p.m<br>கிளிநொச்சி Sat, Sun 10.30 a.m |

கற்பிக்கப்படும் பாடத்திட்டங்கள் பற்றிய விபரங்கள்

DIPLOMA IN FLUENT ENGLISH

Diploma in Fluent English Part - I — For people who are doubtful about their English and want to speak English fluently

Diploma in Fluent English Part - II — For speakers who want to master diction and style.

- அனுபவம் மிக்க விரிவுரையாளர்களினால் Grammar பற்றிய போதிய விளக்க முறைகள் மாணவர்களுக்கு பூரணமாக வழங்கப்படுகிறது.
- ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் ஆங்கிலம் கதைப்பதற்கான சந்தர்ப்பம் கணினி மூலமான
- Online Listening பயிற்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது .

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**IELTS** •Academic •General

•Unique Test Tips • Latest course Materials

**IELTS Life Skills (A1 , B1)**
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (Reg No. P25/0056)

## DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| No.113, வீதி | M.M.V.வீதி | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | சீரணிச் சந்தி | No.19, A9 வீதி |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021 225 6665 | Tel.: 021-228 5655 |



## 2018 GCE O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்




**Dilploma In IT**
Duration : 6 months

New intake will be on 19.12.2018 / 05.01.2019

கட்டடத் துறையில் நீங்களும் ஒரு தேர்ச்சி பெற்ற நிபுணராக திகழ வேண்டுமா? இன்றே இணைந்து கொள்ளுங்கள்

**Certificate in AutoCAD**
Duration : 4 Months



AUTOCAD 2D & 3D

New intake will be on 05.01.2019

SLIM Sri Lanka Institute of Marketing

**Welcome to The World of Marketing**

**Preliminary Certificate in Marketing**



சந்தைப்படுத்தல் துறையில் பணியாற்றுபவர்கள்,
சந்தைப்படுத்தல் தொடர்பான அறிவினைப் பெற விரும்புவோர்,
க.பொ.த. உயர்தர பெறுபேற்றிற்காக காத்திருப்போருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

New intake will be on 05.01.2019

## IIS CITY CAMPUS

#200, Sivan Pannai Road, Jaffna

TEL :- 021 222 8060 Mobile :- 0777 570 038



## திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

## நத்தார், புதுவருட விசேட தள்ளுபடி



### புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்

| | | |
|---|---|---|
| கொட்டன் டொப் (Top) | - ~~1500~~/= | 1000/= |
| டெனிம் டொப் (Top) | - ~~1500~~/= | 1000/= |
| 2 in 1 சல்வார் துணி | - ~~1500~~/= | 1000/= |
| 3 in 1 சல்வார் துணி | - ~~2000~~/= | 1500/= |
| கொட்டன் சல்வார் | - ~~4000~~/= | 2000/= |
| நெற் சல்வார் பெரியது | - ~~5000~~/= | 2000/= |
| நெற் சல்வார் சிறியது | - ~~3500~~/= | 1000/= |

**10%-50% வரை விலைக்கழிவு**



லெகீன்ஸ் 3 இற்கு 1000/=

15000/= பெறுமதியான பட்டுச் சாறி ஒன்றை கொள்வனவு செய்து 5000/= பெறுமதியான சாறி ஒன்றை இலவசமாக பெற்றிடுங்கள்

கொட்டன் Top, டெனிம் Top, மொடன் Top, சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T-சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புரொக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்



ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**

**காலம்: 14.12.2018 - 31.12.2018 வரை**

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 30 . 01 . 1960



இறைவன் அடியில் 21 . 12 . 2016

## அமரர் கணேசன் சித்திரகலாதேவி

**திதி: அட்டமி தேய்பிறை (29.12.2018)**

யாழ். வேவில் ஒழுங்கை வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் E/G/2 டிமெல் தொடர்மாடி தொகுதி கிராண்பாஸ் வீதி, கொழும்பு 14 மற்றும் 108 5/1, ரசிகா கோர்ட் W.A. சில்வா மாவத்தை கொழும்பு - 06 ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த **கணேசன் சித்திரகலாதேவி** அவர்களுக்கு எங்கள் **கண்ணீர் துளிகளுடன் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**

குன்றினில் ஏற்றி வைத்த தீபமாய்
குடும்பத்தை ஒளிரவைத்த குலவிளக்கே
உன் அன்பு முகம் கண்டு
ஈராண்டுகள் ஆனதே அம்மா!
காணும் இடமெல்லாம் உன் பூத்த முகம்காண
கண்கள் கலங்குகிறது கண்ணீர் சொரிகிறது
உன் குரலோசை கேட்காமல்
உன்னை பெற்றவள் புலம்புகிறாள்
இனிய நினைவலைகளும் இழந்த வலியும்
இறுதி மூச்சுவரை எம் இதயம் துடிக்கும் வரை
சுமப்போம் அம்மா!

தாய், கணவர், பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள்

# காணவில்லை



நாங்கள் வளர்த்த பொம்மேரியன் வெள்ளை நிற நாய் 30.11.2018 இரவு 10.30 மணியளவில் காணவில்லை. இதை கண்டவர்கள், வைத்து இருக்கிறவர்கள் தயவு செய்து இதில் இருக்கும் விலாசம் அல்லது ரெலிபோன் நம்பர்க்கு அறிவுப்பு தரவும். உங்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

**இ.தங்கராசா**
**கேணியடி, கொக்குவில் மேற்கு.**
**077 022 5581**

# மரண அறிவித்தல்



## திருமதி வளர்மதி ஸ்ரீரங்கநாதன் (மதி)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் 309, நாவலர் வீதி, ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வளர்மதி ஸ்ரீரங்கநாதன் நேற்று (20.12.2018) வியாழக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் கமலாதேவி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குருநாதன் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும் ஸ்ரீரங்கநாதனின் அன்பு மனைவியும் பவித்திரா, சமித்திரா, அரவிந்தன் (யாழ். மருத்துவபீடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2018) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**309, நாவலர் வீதி,**
**ஆனைப்பந்தி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: கணவர் ஸ்ரீரங்கநாதன்**
**(அரவிந் ஸ்ரூடியோ)**

(CS 219974/15/18)

அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்
**இன்று முதல்**




| | |
|---|---|
| Majestic Jaffna. 1.45, 7.45 pm [021 222 7712] | Raja 2 Jaffna. 4.30,9.30 pm [021 222 7332] |
| Saru Cinema Point Pedro. 2.30,9.30 pm [021 226 5000] | Shanthi Batticaloa. [065 222 3516] |
| Saraswathy Trinco. 2.30 [026 222 2221] | Nelson Trinco. |




வடக்கு, கிழக்கு

| | |
|---|---|
| | Raja 1 Jaffna. 4.30 pm [021 222 7332] |
| Majestic Jaffna. 10.45, am [021 222 7712] | Chelva Batticaloa. 10.30 am [021 222 7973] |
| Salu Cinema Point Pedro. 2.30,9.30 pm [021 226 5000] | Vasanthi Vavunia. [0772 189 646] |
| Shanthi Batticaloa. One Show [026 2222221] | Nelson Trinco. 10.30 am |




| | |
|---|---|
| Salu Cinema Point Pedro. | Nahams Chunnaham. |

மற்றும் நாடெங்கிலும் உள்ள
ஏனைய திரையரங்குகளிலும்

Distributed by:
Cinema Entertainments (Pvt) Ltd (CEL)

# ஈழத்தின் மூத்த எழுத்தாளர்
# வரதர் வெளியீடு நிறுவன சாதனையாளர்
# "சாகித்திய இரத்தினம்"

## தி.ச.வரதராசன் (வரதர்) அவர்களின்
## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 . 07 . 1924



உதிர்வு 21 . 12 . 2006

பன்னிரண்டு வருடங்களாயிற்று
பருவங்கள் பல தாண்டியாயிற்று
மடியில் விளையாடிய பேர்த்தியும்
மணாளன் கை பற்றியாயிற்று
நிழல் படங்களும்
காணொளிகளும்
நிஜமாகவே நீங்கள்
இல்லையென்றிட



கனத்த மனதோடு வழமை போல கடவுளிடமே கதைத்திடுவோம்.

**யாழ்ப்பாணம்.** **பிள்ளைகள்**



**முன்னேற்றத்திற்கு கைகொடுத்து**
உங்களுடன் முழுநாட்டையும் முன்னேற்ற
பாதைக்கிட்டுச் சென்றிட

கிராமமோ நகரமோ பயிர்நிலமோ
வேலைத்தளமோ
தன்னம்பிக்கையுடன் எழுந்திடும்
உங்களுக்கு பக்கபலம் தந்திடும்

**RDB வங்கி**

இப்போது பலதர சேவைகள் மற்றும் நாடளாவிய
பரந்த கிளைவலையமைப்புடன் உங்களுக்காகவே...

RDB
Empowering Sri Lankans

www.rdb.lk
011 2425262

## Jaffna College Alumni Association Request for Information for the Alumni Database

Jaffna College Alumni Association (JCAA) based at Vaddukoddai is in the process of updating its database. Those who obtained membership in the Association on or before 01-01-2005 are requested to send in the following details to reach the Jaffna College Alumni Association on or before 25-01-2019 by post or email at the postal or email address given below.

Those who submitted their applications to join the JCAA after 01-01-2005are also requested to send in their current contact information, if their current contact details are different from the ones mentioned in their application forms.

1. Full name
2. Permanent address
3. Current contact address in Sri Lanka
4. Year in which the member left Jaffna College
5. Date/Year in which the member obtained membership in the JCAA (if the member can remember)
6. Email address
7. Phone number
8. A stamp-size photograph of the member (optional)

Postal address: Secretary, Jaffna College Alumni Association, Jaffna College, Vaddukoddai

Email address: jcalumniparentbody.vk@gmail.com

Jaffna College Alumni Association requests the alumni and well-wishers of Jaffna College to share this announcement with their friends who studied at Jaffna College.

**Mr. G.Gokilaramanan**
**Secretary/ JCAA**

(CS 21964)(14.17)

## MAJESTIC CINEPLEX



Jaffna Platinum 10.00AM | 4.15PM
Jaffna Silver 10.30PM (Fri/Sat)




Jaffna Platinum 1.00PM | 7.30PM | 10.30PM (Fri/Sat)
Jaffna Silver 4.45PM




Jaffna Silver 1.45PM | 7.45PM




Jaffna Silver 10.45AM




Jaffna Bronze 10.30AM | 1.30PM | 4.30PM 7.30PM | 10.30PM (Fri/Sat)

மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள் 011 5 999 999

CEYLON THEATRES Since 1928 www.ceylontheatres.lk MajesticCineplexSL

## துயர் பகிர்வு

எமது இசையாசிரியர் கழக அங்கத்துவ ஆசிரியையான
திருமதி **வாசஸ்பதி ரவீந்திரன்** அவர்களின் தாயார்
**திருமதி வாலாம்பிகை குமாரசுந்தரம்**
14.12.2018 அன்று இறைபதமடைந்தார். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**யாழ். கல்வி வலய இசையாசிரியர் கழகம்**

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 470
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2018.12.20

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,839,515/-

வெற்றி இலக்கங்கள்: 12 67 73 74 — ஆங்கில எழுத்து: E

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT AK டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1528 — சீட்டிழுப்பு திகதி 20.12.2018

வெற்றி இலக்கங்கள்: 15 38 48 55 — ஆங்கில எழுத்து: E

அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் ரூ 23 ,270 ,120/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

மஞ்சள் நிற டிக்கெட்டுக்கள் 2018.12.24 திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## සංවර්ධන වාසනාව

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▸ 205
சீட்டிழுப்பு திகதி ▸ 20.12.2018 — நீலம்

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| C | 02 19 45 | 01 |

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,000,000 /=

2018.12.22 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

---

சர்வதேச-சிறுவர்-தினத்தை-முன்னிட்டு

**உதயன்**

நடத்தும்

# சிறுவர் மகிழ்களம்



காலம் : நாளை (22.12.2018) சனிக்கிழமை
பிற்பகல் 2.00 மணி
இடம் : சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி.

**தலைமை**
**உயர்திரு. செ. பிரதாப்**
(ஆசிரியர் - சிவப்பிரகாச மகா வித்தியாலயம்)

**முதன்மை அதிதி**
**கௌரவ ஈ. சரவணபவன் (பா.உ.)**
(தலைவர் - உதயன் குழுமம்)

**சிறப்பு அதிதிகள்**
**கௌரவ இ. சிவமங்கை**
(தவிசாளர் - சாவகச்சேரி நகரசபை)

**கௌரவ க. வாமதேவன்**
(தவிசாளர் - சாவகச்சேரி நகரசபை)

**கௌரவ அதிதிகள்**
**உயர்திருமதி அ. சரோசாதேவி**
(உதவிக்கல்வி பணிப்பாளர் - முன்பள்ளி)

**உயர்திரு. செ. பேரின்பநாதன்**
(அதிபர் - சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி)

**உயர்திரு. க. குணாளன்**
(நிர்வாக பணிப்பாளர் - சோபிகன் இன்ஜினியரிங் அன் கொன்ஸ்ரக்சன்)

**உயர்திரு. இ. ஜனதன்**
(ஆசிரியர் - யாழ். மத்திய கல்லூரி, இதழாசிரியர் - ஒளிஅரசி, புலமைச் சுடர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உதயன்

## பணியாளர் தேவை

**Corel Draw**

தெரிந்தவர்கள் தேவை. சம்பளம்
30,000 - 35,000

**மூர்த்தி டிஜிட்டல்**
62/20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
077 224 7428

**நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற நோய்களை முற்றாக குணப்படுத்த**

பிரபல ஹோமியோபதி நிபுணரின் சேவை மக்களுக்காக
யாழ்ப்பாணத்தில் - 22.12.2018 (நாளை)
புரந்தனில் - 29.12.2018
தொடர்பு - 077 444 1082

## விற்பனைக்கு

யாழ். தட்டாதெருச் சந்தியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 077 9597 300
(CS 21945/15/17)

## வாடகைக்கு

திருநெல்வேலியில் கம்பஸ் அருகாமையில் வீடு, அறைகள் வாடகைக்கு உண்டு..
077 586 2975
(CS 21960)(14,17)

BAJAJ RE GENUINE PARTS & SERVICE

## தரணீஸ் மோட்டோர்ஸ் சில்

**நத்தார், புதுவருட மாபெரும் விலைக்கழிவு**

தரணிஸ் மோட்டோர்ஸ்சில் வருட இறுதி இருப்பு நீக்கத்தை தொடர்ந்து நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு தெரிவு செய்யப்பட்ட பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களுக்கு 30% வீதம் விசேட கழிவு வழங்கப்படும் அத்துடன் இச் சலுகை பொருட்கள் கையிருப்பில் உள்ளவரை 31.12.2018 திங்கட்கிழமை மட்டுமே.


தொடர்புகளுக்கு:
021 228 0053,
077 459 2429,
076 280 6665.

இடம்:
தரணீஸ் மோட்டோர்ஸ்
உருத்திரபுரம் வீதி,
கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி.

Discount 30%


## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் மதுரநாயகம் (மதுரம்)



பிறப்பு 22.09.1942 இறப்பு 19.12.2018

பருத்தித்துறையைப் (கூவிலை) பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஆசீர்வாதப்பர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மதுரநாயகம் (மதுரம்) 19.12.2018 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - ஆரோக்கியம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற சுவக்கீன் பொன்னுத்துரை - ஸ்ரீலம்மா தம்பதிகளின் மருமகனும், செபமாலையம்மாவின் அன்புக் கணவரும், ஜோச் ஜெகதீஷா (பிரான்ஸ்), றெவிந்தா (பிரான்ஸ்), இமெல்டா (பிரான்ஸ்), றொசிற்றா, சியாமளா (சுவிஸ்), பப்சலா (பிரான்ஸ்), கசில்டா (யாழ்ப்பாணம்), டொன்சி (பிரான்ஸ்), டிலீனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான இராசையா, திரேசம்மா, அக்னெஸ், மலர், மனோன்மணி, செல்வரட்ணம் மற்றும் பெனடிற் (துரைராசா) ஆகியோரின் சகோதரரும், அதிஸ்ரகுமாரி (பிரான்ஸ்), தவநாயகம் (பிரான்ஸ்), சாள்ஸ் (பிரான்ஸ்), தவராசா (கச்சேரி மினிபஸ் சங்க பொருளாளர்), ஜெகசூரியன் (சுவிஸ்), சேவியர் (பிரான்ஸ்), சுந்தரலிங்கம் (மாநகரசபை சாரதி), நியூட்டன் (பிரான்ஸ்), பில்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், கெவின், மெர்வின், ஜெர்வின், யொனிவ், ஜனிக்சன், யூலியாள் பிறையன், செறாளின், சோந்திரின், சொபியா, எட்றியன் ஜெனிவன், பரூஸ், ஸ்ரெவான், அலின்சா, சலீனா, டிஷானி, செர்லின், நிஜல் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.12.2018) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கரவெட்டியிலுள்ள கீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/21962)(11,17)

**தகவல்: மனைவி, பிள்ளைகள்**

ஜோச் (மகன்) - 0033 6524 67472,
தவராசா (மருமகன்) - 077 911 6155, சுந்தரலிங்கம் - 077 667 9498

## Jaffna College Alumni Association Special General Meeting

A Special General Meeting (SGM) of the Jaffna College Alumni Association (JCAA) will be held on Saturday, 19 January 2019 at 4 p.m. in Ottley Hall, Jaffna College. All members of the Association are invited.

### Amendments to the Constitution

The purpose of the SGM is to discuss and hold a vote on a set of draft amendments to the Constitution circulated at the last meeting of the Executive Committee of the JCAA. Copies of the draft amendments can be obtained from the residence of the Secretary of the JCAA at Iththiyady Kovil Square, Vaddu South-West, Vaddukoddai from the 23rd of December 2018 onwards and the Main Office of Jaffna College from the 7th of January 2019 onwards or by a sending a request to the Secretary of the JCAA at the email address jcalumniparentbody.vk@gmail.com

**Mr. G. Gokilaramanan**
**Secretary/ JCAA**

(CS 21963)(14.17)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா நடராசா



தோற்றம் 26.06.1929 மறைவு 19.12.2018

யாழ்ப்பாணம், காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும் வளுப்போடை, களபூமியை வாழ்விடமாகவும் றொறொன்ரோ, கனடா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா நடராசா கடந்த (19.12.2018) புதன்கிழமை நாச்சிமார் கோவிலடி, 958/ 42, கே. கே. எஸ். வீதியில் உள்ள அவரது வசிப்பிடத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பர் காசிப்பிள்ளை நடராஜா (T. K. N. பிரபல வர்த்தகர்)வின் பாசத்திற்குரிய மனைவியாரும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - செல்லாட்சி பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - தெய்வானைபிள்ளை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற சரஸ்வதி கந்தசாமியின் அன்புக்குரிய சகோதரியும் சிவஞானம் (லண்டன்), சிவபாதசுந்தரம் (யாழ்ப்பாணம் SVM), சிவலோகநாதன் (சுவிஸ்), காலஞ்சென்ற சிவகுருநாதன் மற்றும் சிவகுமாரன் (லண்டன்), கமலாதேவி (கனடா), தர்மகுமாரி (சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்), பிரகலாதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புக்குரிய தாயாரும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி மற்றும் I.T. சம்பந்தன் ஆகியோரின் அன்புக்குரிய சிறிய தாயாரும் யோகராணி, சாவித்திரி தேவி, சாந்தமலர், சங்கீதா, சிறிரங்கநாதன், இராமகிருஷ்ணராஜா (அரசமர கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), உஷா ஆகியோரின் அன்புக்குரிய மாமியாரும் கிருஷாந்தன், செந்தூரன், ஹரிகரன், சுதாகரன், சஜிதா, பவண், ஜெயதர்சன், ஜெனார்த்தனன், ஜெயரூபன், கிருஷ்ணி, திருமகள், கீர்த்தன், தர்ஷா, வரணிதா, உதயபவன், கஜானி, மாதினி, சாயினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் டிவானியின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (23.12.2018) ஞாயிற்றுக்கிழமை 958/ 42, கே. கே. எஸ். வீதியில் உள்ள இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் காரைநகர் தில்லை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: ந.சிவபாதசுந்தரம் (யாழ்ப்பாணம் - 077 605 7153, 075 033 6799)**
**திருமதி T. இராமகிருஷ்ணராஜா (யாழ்ப்பாணம் - 077 364 7436)**
**N. பிரகலாதீஸ்வரன் (கனடா - 416 641 6566)**

(CS 21967/15/17)

## தவறிவிட்டது

நல்லூரைச்சேர்ந்த சுகுமார் குலேந்திரன் ஆகியஎனது 801480560V இலக்கமுடைய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிபத்திரம், புகைப் பரிசோதனை சான்றிதழ் என்பன பரமேஸ்வரா சந்தி விநாயகர் ஆலயத்திற்கும் யாழ். நகரிற்கும் இடையில் 20.12.2018 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். - 077 7191432


# அமைச்சுப் பொறுப்புக்களில் மாற்றங்கள்

கொழும்பு, டிசெ. 21

கூட்டு அரசின் ஆட்சிக் காலத்தில் அமைச்சர்களாகப் பதவிவகித்தவர்களுக்கு வழங்கப்பட்ட அமைச்சுப் பொறுப்புக்கள் சில நேற்று மாற்றி வழங்கப்பட்டுள்ளன. மனோ கணேசனுக்கு இந்து சமய அலுவல்கள் அமைச்சு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வடக்கு அபிவிருத்தி, மீள்குடியேற்ற மற்றும் மறுவாழ்வு அமைச்சு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது. ரவூப் ஹக்கீமுக்கு உயர் கல்வி அமைச்சு புதிதாக வழங்கப்பட்டுள்ளது.

றிசாத் பதியுதீனுக்கு நீண்டகாலம் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தல் அமைச்சு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது. வஜிர அபேவர்த்தனவுக்கு மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு புதிதாக வழங்கப்பட்டுள்ளது. ஹபீர் காசிமுக்கு பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது.

சாகல ரத்நாயவுக்கு துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு புதிதாக வழங்கப்பட்டுள்ளது.

மலிக் சமரவிக்கிரமவுக்கு விஞ்ஞான, தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது. தயாகமகேக்கு சமூக வலுவூட்டல் அமைச்சு புதிதாக வழங்கப்பட்டுள்ளது. ஹரின் பெர்ணான்டோவுக்கு விளையாட்டுத்துறை அமைச்சு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது. பீ.ஹரிசனுக்கு மீன்பிடி மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சு புதிதாக வழங்கப்பட்டுள்ளது. அர்ஜுன ரணதுங்கவுக்கு போக்குவரத்து, சிவில் வானூர்திகள் சேவைகள் அமைச்சு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது.

கூட்டு அரசில் மத்திய வங்கி பிணைமுறி ஊழல் விவகாரத்துடன் ரவி கருணாநாயகவின் அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டிருந்த நிலையில் நீண்ட காலமாக நாடாளுமன்ற உறுப்பினராகவே செயற்பட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்றைய அமைச்சரவை நியமனத்தின்போது மின்சக்தி, சக்தி வலு மற்றும் வர்த்தக அபிவிருத்தி அமைச்சு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. ரவிக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டமைக்கு சமூக ஊடகங்களில் கடும் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.


மைத்திரியின் ஜனநாயக மீறல் செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்த சிவில் அமைப்புக்களும், ரவியின் நியமனத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி கடந்த காலத் தவறுகளிலிருந்து பாடம் கற்கவில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

(ம-5,61)


## பண்டத்தரிப்பு பட்டினசபை உப அலுவலகம்
## பண்டத்தரிப்பு
## ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் :- 04**
**உத்தேச ஆதன இல :- 51/7**
**வீதி :- சென் அன்ரனீஸ் வீதி**
**கிராம சேவையாளர் பிரிவு** :- J/146

வட்டாரம் 04, சென் அன்ரனீஸ் வீதி, உத்தேச ஆதன இல 51/7 இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்கு (தற்போது வலிகாமம் தென் மேற்கு) பகுதி பண்டத்தரிப்பு கோயில் பற்று இறை J/146 கிராம சேவகர் பிரிவில் உள்ள **"கொல்லன் தோட்டம் குறிஞ்சி உடையாள் வளவு"** என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 1½. கொண்ட இவ் ஆதனம் சென் அன்ரனீஸ் வீதியைச் சேர்ந்த இராயப்பு சல்வடோரும் பெண் மரியதிரேசு அவர்களால் அன்ரனி வசந்தன் பெண் அனிற்றா றெஜிதா அவர் களுக்கு சீதன உறுதி மூலம் பிரசித்தி பெற்ற நொத்தாரிஸ் ப.இராசகுரு அவர்கள் முகதாவில் நிறைவேறிய 4913 இலக்க 05.12.2004 திகதிய உறுதி மூலம் தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு. M.செல்வராஜா அவர்களால் வரையப்பட்ட 683 ஆம் இலக்க 2018.01.29 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனம் ஆனது **"கொல்லன் தோட்டம் குறிஞ்சி உடையாள் வளவு"** நிலப்பரப்பு 1½ கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அன்ரனி வசந்தன் பெண் அனிற்றா றெஜிதா என்னும் பெயருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.




**திரு.அ.ஜெபநேசன்**
**தவிசாளர்,**
**வலி.தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.** (CS/21951)(11,17)



## MEGA Sale

Dollars muthi Shop
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(முட்டாஸ் சந்தி அருகில்)
P.No. 077 063 2559

Dollars Electronics
No. K.K.S. Road,
Jaffna.

நத்தார், புத்தாண்டை முன்னிட்டு
அதிரடி விலைக்குறைப்பு 01.01.2019 வரை

கிறிஸ்மஸ் சோடினை பல்ப் — ரைஸ் பல்ப் (80/=)
L.E.D. பல்ப் — Panel பல்ப்

இரண்டாயிரம் ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்பவருக்கு

**முதலாம் பரிசு** Gas Stuf
**இரண்டாம் பரிசு** TableFan
**மூன்றாம் பரிசு** Charger Light

குலுக்கல் 05.01.2019 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.



## கண்ணீர் அஞ்சலி



**(மண்கும்பான்)**
திருமதி **நாகரத்தினம் இரத்தினேஸ்வரி**
**( லண்டன் )**

எமது ஆலயத்தின் 8 ஆம் திருவிழா (மகோற்சவம்) உபயகாரர் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய விநாயகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலனசபை,**
**மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம், மண்கும்பான்.**
(CS/21961)(11)



## சாவகச்சேரி
## கோயிற்குடியிருப்பு சந்தன முதலிச்சிபுலம் ஸ்ரீநடராஜ முருகமூர்த்தி ஆலயத்தின் கூறுவிலை கோரல்

எமது ஆலயத்தின் உள் சுற்று மண்டபத்தின் கூரைகள், மரங்கள், வளைகள், தீராந்திகள், ஓடுகள் என்பன விற்பனைக்கு உண்டு.

கொள்வனவு செய்ய விரும்புவோர் மேற்படி பொருள்களை பார்வையிட்டு தங்கள் கூறுவிலைகளை 28.12.2018 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 5.00 மணிக்கு முன்னதாக சமர்ப்பிக்கவும்.

**077 666 8971, 077 3811697, 077 777 9084**
**ஆலய பரிபாலன சபை,**
**திருப்பணிச் சபை.**
(C#791/15/18)



## மரண அறிவித்தல்



**திருமதி சாரதாம்பாள் சொர்ணலிங்கம்**

கரம்பொன் . ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாரதாம்பாள் சொர்ணலிங்கம் கடந்த (19.12.2018) புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சொர்ணலிங்கத்தின் அன்பு, மனைவியும் பிரதாபனின் (நீதிமன்ற எழுதுவினைஞர் - மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்) அன்புத் தாயாரும் கேசிகாவின் அன்பு மாமியாரும் ஸாருகி, தஸ்வின் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற ருக்மணி, மங்கையற்கரசி, கனகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தவமணி, திருமணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (23.12.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சூராவத்தை சுன்னாகத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டடி வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சூராவத்தை, சுன்னாகம்.**
**077 248 7400, 075 948 7400** (CS 21971/15/18)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



## மரண அறிவித்தல்
## சொக்கலிங்கம் தயாளன்

*(ஜனனி ஸ்ரோர் உரிமையாளர் விசுவமடு)*



காரைநகர், முல்லைப்பிளவைப் பிறப்பிடமாகவும் புன்னைநீராவி விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட ஜனனி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் சொக்கலிங்கம் தயாளன் நேற்று (20.12.2018) காலமானார்.

அன்னார் சத்தியமலரின் அன்புக் கணவரும் ஜனனியின் அன்புத் தந்தையும் நிசாந்தனின் மாமனாரும் அபிசயா, அரிகித் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2018) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது விசுவமடு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விசுவமடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 353 0305,**
**077 9983 786**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# சர்வாதிகாரத்துக்குத் துணைபோன ஊடகங்கள் சரிநிகராகச் செய்திகளை வெளியிடவேண்டும்!

## ஊடகத்துறை அமைச்சர் வலியுறுத்து

"கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி திகதியிலிருந்து சர்வாதிகார ஆட்சிக்குத் துணைபோன ஊடகங்கள் இனிமேல் சரிநிகராக நாட்டு மக்களின் நலன் கருதி நல்லிணக்கத்துக்குக் குந்தகம் விளைவிக்காமல் செய்திகளை வெளியிட வேண்டும்" இவ்வாறு நீதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அரச தலைவர் முன்னிலையில் நேற்று முற்பகல் அமைச்சராகப் பதவியேற்ற மங்கள சமரவீர நேற்றுப் பிற்பகலே உத்தியோகபூர்வ அலுவலகத்தில் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றார். இதன் பின்னர் வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றின் இலங்கை செய்தியாளருக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

"ஊடக சுதந்திரத்தை சில ஊடகங்கள் தவறாகப் பயன்படுத்தியுள்ளன. ஒக்டோபர் 26 அரசியல் சூழ்ச்சிக்கு சில ஊடகங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவை வழங்கியுள்ளன. நாட்டில் மீண்டும் குருதி வெள்ளம் ஏற்படக் கூடிய சம்பவங்களுக்கு ஊடகங்களும் துணைபோயுள்ளன என்பதை நினைக்கும்போது கவலையாக உள்ளது.



நாட்டின் ஜனநாயகத்தின் நான்காவது தூணாக ஊடகம் விளங்குகின்றது என்பதை ஊடக நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகள் உணராமல் நடந்துகொண்டுள்ளார்கள். இனிமேலாவது அவர்கள் திருந்த வேண்டும். எம்மைத் துதி பாடச் சொல்லி அவர்களிடம் நாம் கேட்கவில்லை. நடுநிலையுடன் மட்டும் செயற்பட்டால் போதும். அதேவேளை, ஜனநாயகத்தை விரும்பும் ஊடகவியலாளர்கள் பல இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர். அவர்கள் தங்கள் ஊடகப் பணிகளைத் துணிவுடன் முன்னெடுக்க வேண்டும். அவர்களின் குறைகளை நாம் தீர்த்து வைப்போம்" - என்றார். (ம)



## இன்றைய நாள்

**மேடம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிதமான வளர்ச்சி உண்டாகும். இலாபம் பன்மடங்கு உயரும். நீண்ட காலக் கடனில் ஒருபகுதியைச் செலுத்துவீர்கள்.

**இடபம்:** மனதில் சஞ்சலம் வந்து விலகும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவது நல்லது. இலாபம் ஓரளவுக்கு இருக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.

**மிதுனம்:** தவறைத் திருத்திக் கொள்ள முயல்வீர்கள். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும்.

**கடகம்:** புதிய விடயங்களை அறிவதில் ஆர்வம் உண்டாகும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**சிங்கம்:** சிலர் சுயநலத்துடன் உங்களை அணுகலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**கன்னி:** உங்கள் பேச்சில் வசீகரம் உண்டாகும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். இலாபம் உயரும். பெண்கள் தர்ம சிந்தனையுடன் செயல்படுவர்.

**துலாம்:** பேச்சு, செயலில் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் குறைகளை உடனடியாக சரிசெய்வது நல்லது. இலாபம் ஓரளவுக்கு இருக்கும். வாகனத் தில் மிதவேகம் பின்பற்றவும். சுபவிஷ யத்தில் பொறுமை காக்கவும்.

**விருச்சிகம்:** ஆன்மிக சிந்தனையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி கிடைக்கும். வருமானம் உயரும். குடும்பத் தேவை குறைவின்றி நிறைவேறும்.

**தனுசு:** சவால்களை ஏற்று தடைகளை தகர்த்தெறிய முயல்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் சாதனை படைப்பீர்கள். வருமானம் பன்மடங்கு உயரும்.

**மகரம்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முயல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.


**கும்பம்:** மனதில் அதிருப்தி உருவாகி மறையும். தொழில், வியாபாரத்தில் வருமானம் சீராக இருக்கும். பிறருக்காகப் பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம்.

**மீனம்:** புத்தி சாதுர்யத்தால் முயற்சியில் வெற்றி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி உண்டாகும். நண்பரிடம் கடனாக கொடுத்த பணம் கிடைக்கும்.

# வதந்திகளை பரப்புவதன் மூலம் ஐ.தே.கவை உடைக்க முடியாது!

## பகல் கனவுகளைக் காணவேண்டாம் என்று மகிந்த அணிக்கு ரணில் சுடச்சுடப் பதிலடி

கொழும்பு, டிசெ. 21



"ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. தலைமை அமைச்சர் பதவியை எனது கட்சிக்குள் இருக்கும் எவரும் குழிதோண்டிப் பறிக்க முயலமாட்டார்கள். வீண்வதந்திகளைப் பரப்பி ஐ.தே.கவை உடைக்கலாம் எனக் கனவு காணவேண்டாம் என மகிந்த அணியினரிடம் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்" இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவி, தலைமை அமைச்சர் பதவி என்பவற்றை ரணிலிடம் இருந்து பறிப்பதற்கான சதிமுயற்சிகள் அந்தக் கட்சிக்குள்ளேயே இடம்பெற்று வருகின்றன என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றின் இலங்கை செய்தியாளர் வினவியபோதே ரணில் மேற்கண்டவாறு கூறினார். (ம)

# உந்துருளி மோதியதில் வயோதிபப் பெண் சாவு

யாழ்ப்பாணம், டிசெ. 21

வீதியால் நடந்து சென்ற வயோதிபப் பெண்மீது உந்துருளி மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சொர்ணலிங்கம் சாரதாம்பாள் (வயது-72) என்ற வயோதிபப் பெண்ணே உயிரிழந்தார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது:

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள உறவினரின் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் இரவு குறித்த வயோதிப் பெண் நடந்து சென்றுள்ளார். அவர் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது அந்த வழியாக வந்த உந்துருளி அவரை மோதியுள்ளது. அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்தார் என்று மருத்துவமனையின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (ம-8)

# வவுனியா ஓமந்தையில் ஒருவர் நேற்றுக் கைது!

## போதை கலந்த இனிப்புப் பண்டங்களை வைத்திருந்தார் என்கின்றனர் பொலிஸார்

வவுனியா, டிசெ. 21

வவுனியா ஓமந்தையில் போதைகலந்த இனிப்பு பண்டங்களுடன் நபரொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவித்ததாவது:

இன்று (நேற்று) மாலை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பட்டா வாகனத்தை ஓமந்தை நகர்ப்பகுதியில் வைத்து வழிமறித்த ஓமந்தை பொலிஸார் அதில் சோதனைகளை மேற்கொண்ட போது அதில் சந்தேகத்துக்கு இடமான வகையில் பொருள்கள் இருந்துள்ளன. தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் குறித்த வாகனத்தில் இருந்து 60 பெட்டிகளில் அடைக்கபட்ட போதை கலந்த 7 ஆயிரம் இனிப்புப் பண்டங்கள் மீட்கப்பட்டன. சந்தேகநபர் நாளையதினம் (இன்று) நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் - என்றனர். (ம-110)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் நவிண்டி கலைமதி விளையாட்டுக்கழக வீரர்களுக்கு இடையே நடாத்தப்படும் கலைமதி பிறீமியர் கால்ப்பந்தாட்டத் தொடரின் இரண்டு ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை மாலை நவிண்டி கலைமைதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில், கலைமதி ரெட்றோசஸ் அணியை எதிர்த்து கலைமதி ரைகர்ஸ் அணி மோதவுள்ளது. பி.ப. 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமதி ஈகிள்ஸ் அணியை எதிர்த்து கலைமதி கிறோஸ் அணி மோதவுள்ளது.

★★★★

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி காப்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்ப்பந்தாட்ட கழகங்களுக்கு இடையிலான தொடர் முழங்காவில் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக் கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் செந்தமிழ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

காலை 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். செபஸ்ரியன் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து மெசியா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அன்பு ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

★★★★

யாழ்ப்பாணம் பொலிகை பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் பொலிகை பாரதி பிறீமியர் லீக் கால்ப்பந்தாட்டத்தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் பொலிகை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில், இன்று வெள்ளிக்கிழமை இரவு மின்னொளியில் இடம் பெறவுள்ளன.

இரவு 7 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் பொலிகை பிளக்புல்ஸ் அணியை எதிர்த்து பொலிகை கெல்த் ஸ்ரார் அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பொலிகை அற்றாக் போயிஸ் அணியை எதிர்த்து பொலிகை நேத் யுனைரட் அணி மோதவுள்ளது. (5.23)

★★★★

யாழ்ப்பாணம் அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் உழவர் விழாவை முன்னிட்டு நடத்தும் கால்ப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது. மாலை 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மூளாய் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மகாத்மா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அராலி அண்ணா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

### நவிண்டி கலைமதி பிறீமியர் லீக்

# கலைமதி கிங்ஸ், கலைமதி ஈகிள்ஸ் அணிகள் வெற்றி



கலைமதி ஈகிள்ஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 21

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக வீரர்களுக்கு இடையில் நடாத்தப்படும் கலைமதி பிறீமியர் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நவிண்டில் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் கலைமதி கிங்ஸ் மற்றும் கலைமதி ஈகிள்ஸ் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

கலைமதி கிறோஸ் அணிக்கும் கலைமதி கிங்ஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில், முதல் பாதியில் இரு அணிகளாலும் கோல் எதனையும் போட முடியவில்லை. இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் இரு அணிகளும் கோல் அடிப்பதற்கான முனைப்பில் ஈடுபட்டன. கலைமதி கிங்ஸ் அணி வீரர் சுதன் இரண்டாவது பாதி ஆட்டத்தின் 35ஆவது நிமிடத்தில் முதலாவது கோலைப் பதிவு செய்தார். பதிலுக்கு கோல் அடிப்பதற்கான முயற்சியில் கலைமதி கிறோஸ் அணி தீவிரமாக முயற்சியில் ஈடுபட்டபோதும் அது வெற்றியளிக்கவில்லை. நிர்ணயிக்கப்பட்ட ஆட்ட நேர நிறைவில், கலைமதி கிங்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கலைமதி ரைகர்ஸ் அணியை எதிர்த்து கலைமதி ஈகிள்ஸ் அணி மற்றொரு ஆட்டத்தில் மோதியது.

கலைமதி ஈகிள்ஸ் அணி ஆரம்பம் முதலே ஆக்ரோசமாக விளையாடியது. ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் பானுப்பிரியன் முதலாவது கோலைப் பதிவு செய்தார்.

தொடர்ந்தும் புகுந்து விளையாடிய பானுப்பிரியன் 15 ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலைப்பதிவு செய்தார். முதல் பாதி ஆட்ட நேர நிறைவில் கலைமதி ஈகிள்ஸ் அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது. இரண்டாவது பாதி ஆட்டத்தில் கலைமதி ரைகர்ஸ் அணி பதிலடி கொடுப்பதற்கு முயன்றது. இருப்பினும் கலைமதி ஈகிள்ஸ் ஆட்டத்துக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. இரண்டாவது பாதி ஆட்டத்தின் 33 ஆவது நிமிடத்தில் கலைமதி ஈகிள்ஸ் அணி வீரர் பானுப்பிரியன் மூன்றாவது கோலை தனது அணிக்காகப் பதிவு செய்தார். ஆட்ட நேர நிறைவில் 3:0 என்ற கோல் கணக்கில் கலைமதி ஈகிள்ஸ் அணி வெற்றி பெற்றது. (5.23)



கலைமதி கிங்ஸ்

## சென். அன்ரனிஸ் வி.க. வெற்றி

புதுக்குடியிருப்பு, டிசெ. 21

புதுக்குடியிருப்பு விடியல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் விளை யாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

புதுக்குடியிருப்பு விடியல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில், சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து செல்செற்றி விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் எதனையும் பதிவு செய்யவில்லை. இரண்டாம் பாதி ஆட்டம் விறுவிறுப்பாக ஆரம்பமாகியது. சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் அனோஜன் 10ஆவது நிமிடத்தில் முதலாவது கோலைப் பதிவு செய்தார். அந்த அணியின் மற்றொரு வீரரான டிலக்சன் 15 ஆவது நிமிடத்தில் அடுத்த கோலைப் பதிவு செய்தார். அனோஜன் 20 ஆவது நிமிடத்தில் மீண்டும் ஒரு கோலைப் பதிவு செய்தார். பதிலுக்கு செல்சிற்றி அணி வீரர் சதீஸ் 22 நிமிடத்தில் அந்த சார்பில் முதலாவது கோலைப் பதிவு செய்தார். அதற்குப் பதிலடியாக 25 நிமிடத்திலேயே டிலக்சன் மீண்டும் ஒரு கோலைப் பதிவு செய்ய, ஆட்ட நேரம் முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (5.23)

# சென்.ஜோன்ஸ் அபார வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 21

பாணந்துறை றோயல் கல்லூரி அணியை ஓர் இன்னிங்ஸ் மற்றும் 14 ஓட்டங்களால் வெற்றி கொண்டது யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி.

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச்சங்கம் நடத்தும் 19 வயதுப்பிரிவினருக்கான சிங்கர் கிண்ணத்துக்கான பிரிவு 2 இற்குரிய துடுப்பாட்டத் தொடரின் ஆட்டம் கடந்த திங்கட் கிழமையும் செவ்வாய்க்கிழமையும் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து பாணந்துறை றோயல் கல்லூரி மோதியது.


பாணந்துறை றோயல் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது. 40.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. தனஞ்சய பிரசாந் 47 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தார். சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் பந்து வீச்சில் அபினாஸ் 3 இலக்குகளையும், அபிசேக், நதுஷன் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 48 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது.

நதுஷன் 62 ஓட்டங்களையும், அபினாஸ் 61 ஓட்டங்களையும், வினோசன் 37 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பாணந்துறை றோயல் கல்லூரி அணி சார்பில் சஞ்சேய 4 இலக்குகளை வீழ்த்தினார்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாணந்துறை றோயல் கல்லூரி அணி 42 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 92 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

அந்த அணி சார்பில் அதிகபட்சமாக மதுசங்க 33 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி சார்பில் அபினாஸ் 5 இலக்குகளையும், சரண் 4 இலக்குகளையும் சாய்த்தார்கள். சென். ஜோன்ஸ் கல்லூரி அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 14 ஓட்டங்களால் வெற்றியைப் பெற்றது. (5.23)



சகல துறையிலும் கலக்கிய அபினாஸ்

## ஐ.பி.எல். ஆட்டங்கள் இந்தியாவில்

அடுத்த பருவகாலத்துக்கான ஐ.பி.எல். தொடரின் ஆட்டங்கள் இந்தியாவில் நடத்தப்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்தது.
இந்தியாவில் அடுத்த வருடத்தின் முற்பகுதியில் தேர்தல்கள் நடைபெறவுள்ளதால் ஐ.பி.எல். தொடரின் ஆட்டங்கள் இந்தியாவில் அல்லாமல் ஐக்கிய அரபு இராச்சியத்திலோ அல்லது தென்னாபிரிக்காவிலோ நடத்தப்பட வாய்ப்பு அதிகம் உள்ளது என்று கருதப்படும் நிலையில் இந்தியாவிலேயே தொடர் நடத்தப்பட வாய்ப்புக்கள் உள்ளன என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்தது. (ம)



## ஆஸ்திரேலிய அணியை இந்தியா தோற்கடிக்காது

### பொண்டிங் வெளிப்படை

"ஆஸ்திரேலிய அணியை தோற்கடித்து இந்திய அணி கிண்ணம் வெல்லும் என்று எண்ணவில்லை" என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொண்டிங்.
இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ரி-20 தொடர் 1:1 என்று சமநிலையில் முடிந்ததை அடுத்து டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் இரண்டு ஆட்டங்கள் முடிந்துள்ளன. முதலாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றிருந்த நிலையில் இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெற்று பதிலடி கொடுத்தது ஆஸ்திரேலியா.
மூன்றாவது ஆட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த ஆட்டத்தில் எந்த அணி வெற்றிபெறும் என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. இந்த நிலையில் தொடர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் பொண்டிங்.
"இந்த டெஸ்ட் தொடரில் தொடக்கத்தில் இருந்தே இரு அணிகளையும் கவனித்து வருகிறேன். இந்திய அணியால் இந்த டெஸ்ட் தொடரை நிச்சயமாக வெல்ல முடியாது. ஏனென்றால் இந்தியாவின் துடுப்பாட்ட வரிசை மோசமாகவே இருக்கிறது. பொர்த் டெஸ்டில் இது வெட்டவெளிச்சமாகி விட்டது. தொடக்க வீரர் காயம், புதிய வீரரை அடுத்த டெஸ்டில் களம் இறக்குதல் போன்ற சூழல் இந்திய வீரர்களின் மனநிலையைப் பாதிக்கும். இதனால் மூன்றாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா இலகுவாக வெற்றிபெறும் என்று பொண்டிங் மேலும் தெரிவித்தார்.
இந்தத் தொடரில் இந்தியாவை வீழ்த்த என்ன செய்யவேண்டும் உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகளை பொண்டிங் தொடர்ச்சியாக வழங்கி வருகிறார். முதலாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றதை அடுத்து இரண்டாவது ஆட்டத்துக்கான ஆஸ்திரேலியப் பயிற்சி முகாமில் பொண்டிங் நேரடியாகக் கலந்துகொண்டு பல்வேறு ஆலாசனைகளை வழங்கியிருந்தார். (ம)

## கோக்லியின் நடத்தை மிகவும் மோசமானது!

### ஜோன்சன் சீண்டல்

"ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணியின் தலைவர் கோக்லியின் நடத்தை மிகவும் மோசமான வகையில் இருந்தது" என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் ஜோன்சன் தெரிவித்தார்.
இது தொடர்பில் ஜோன்சன் மேலும் தெரிவித்ததாவது:
"டிம் பெய்னுடன் கடைசியில் ஆட்டம் முடிந்தவுடன் கைகொடுக்கும்போது கண்ணுக்குக்கண் பார்த்து கைகுலுக்கி அருமையான ஆட்டம் என்று கூறவேண்டும். கோலி கைகுலுக்கினார், ஆனால் அவர் கண்களைப் பார்க்கவில்லை, இது அவமரியாதையானது.
இந்தியாவின் 4 வேகப்பந்து வீச்சாளர்கள் வாய்மொழியிலும் பந்து வீச்சிலும் ஆஸ்திரேலியாவின் துடுப்பாட்ட வீரர்களை எதிர்த்து பெரிய சவாலில் இறங்கினர், ரசிகர்கள் மகிழ்ந்தார்கள், இவற்றை நான் மகிழ்ச்சியுடன் ரசித்தேன். இவையெல்லாம் கிரிக்கெட்டிற்கு, டெஸ்ட் கிரிக்கெட்டிற்கு நல்லது. விராட் கோக்லி இதுபோன்ற நடத்தையில் கண்டுகொள்ளப்படுவதில்லை. அவரை பீடத்தில் ஏற்றி வைக்கின்றனர். ஆனால் இந்த டெஸ்ட் அவரை மிகவும் மலிவான ஒரு மனிதராகவே காட்டியது. தொடருக்கு முன்பு தான் மிகவும் மாறிய ஒரு மனிதர் என்றார். ஆனால் அவரிடம் எதுவும் மாறியதாகத் தெரியவில்லை என்பது எனக்கு ஏமாற்றம் அளிக்கிறது.
முதல் இன்னிங்சில் சதம் அடித்தார். மக்கள் அவர் ஆட்டமிழந்து சென்றபோது கரகோசம் எழுப்பி வழியனுப்பினர். ஆனால் அவர் ரசிகர்களையும் மதிக்கவில்லை. அன்று மாலை செய்தியாளர்கள் ஹேண்ட்ஸ்காம்ப் கேட்ச் பற்றி அவரிடம் கேட்கவிருந்தனர். ஆனால் பும்ராவை அனுப்பிவைத்து ஏமாற்றமளித்தார்" - என்றார். (ம)






## மட்ரிட் வெற்றி

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான லாலிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பேலின் ஹற்றிக் கோல்களின் உதவியால் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட் அணி.
ரியல்மட்ரிட்டை எதிர்த்து கஸ்மியோ மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ரியல் மட்ரிட் அணி சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 44ஆவது நிமிடத்தில் மட்ரிட்டின் சார்பில் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் பேல். அவர் 53ஆவது மற்றும் 55ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்துக் கோல்களைப் பதிவுசெய்தார். டோகி 78ஆவது நிமிடத்தில் கஸ்மியோவின் சார்பாகக் கோலைப் பதிவுசெய்தார். முடிவில் மட்ரிட் 3:1 என்ற கோல் கணக்கில் வென்றது. (ம)

## ராகுலை இந்தியாவுக்கு அனுப்புங்கள் சுனில் கவாஸ்கர் ஆவேசக் கருத்து!

ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடருக்கான இறுதி இரண்டு ஆட்டங்களில் லோகேஸ் ராகுலுக்கு அணியில் இடம் கொடுக்கக்கூடாது என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர்.
கடந்த இரண்டு ஆட்டங்களிலும் ராகுல் ஆரம்ப வீரராகக் களமிறக்கப்பட்டார். ஆனால் இந்த இரண்டு ஆட்டங்களிலும் அவர் மோசமான திறனையே வெளிப்படுத்தினார். இதையடுத்தே மூன்றாவது ஆட்டத்துக்கான இந்திய அணியில் ராகுல் வேண்டாம் என்றுள்ளார் கவாஸ்கர்.
"தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரில் இருந்து எமது அணியில் வீரர்கள் தேர்வில் தொடர்ந்து மிகப்பெரிய தவறு நடந்து வருகிறது. இதனால் பாதிப்பு அணிக்குத்தான். வீரர்கள் தெரிவு சரியாக இருந்திருந்தால் பல ஆட்டங்களில் வெற்றிபெற்றிருக்க முடியும். குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றைக் களைந்து, சரியான கலவையில் அணியைத் தெரிவுசெய்தால் ஆஸ்திரேலியாவுக்கான டெஸ்ட் தொடரைக் கைப்பற்ற முடியும்" என்று கவாஸ்கர் மேலும் தெரிவித்தார். (ம)

## பலவீனமான ஆஸ்திரேலியாவை வீழ்த்த முடியாத பட்சத்தில் தலைவர் பதவி எதற்கு, தலைமைப் பயிற்சியாளரும் எதற்கு?

### கோக்லி, ரவிசாஸ்திரியையும் விட்டுவைக்கவில்லை கவாஸ்கர்

பலவீனமான நிலையில் இருக்கும் இந்த ஆஸ்திரேலிய அணியைத் தோற்கடிக்க முடியாதுவிடின் இந்திய அணிக்கு தலைவர் எதற்கு தலைமைப் பயிற்சியாளர் பதவி எதற்கு என்று காட்டமாகத் தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவரும் பிரபல கிரிக்கெட் விமர்சகருமான சுனில் கவாஸ்கர்.
வோர்ணர் மற்றும் சிமித் இல்லாத நிலையில் ஆஸ்திரேலிய அணி மிகவும் பலவீனமானதாக உள்ளது. அந்த அணியின் துடுப்பாட்ட வரிசை தொய்வடைந்துள்ளது. இவ்வாறு பலவீனமடைந்துள்ள ஆஸ்திரேலிய அணியை இந்தியா தோற்கடிக்க அதிக சந்தர்ப்பங்கள் உள்ளன.
இந்தப் பொன்னான வாய்ப்பைத் தவறவிட்டால் இந்திய அணிக்கு தலைவர் இருந்து என்ன பயன். தலைமைப் பயிற்சியாளர் இருந்து என்ன பயன்? என்று கவாஸ்கர் மேலும் தெரிவித்தார்.
தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய குற்றத்துக்காக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் சிமித், முன்னாள் உபதலைவர் வோர்ணர் இருவருக்கும் ஓர் ஆண்டுத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



**வேலையாள்கள் தேவை**

சுன்னாகத்தில்
ஆரம்பிக்கப்படவுள்ள **பழ யூஸ் கடைக்கு** (Fresh Juice)
அனுபவமுள்ள வேலையாள்கள்
தேவைப்படுகிறது.

**077 995 1023/ 077 600 0076**

**காணி விற்பனை**

மருதனார்மடச் சந்திக்கும் உடுவில் மகளிர் கல்லூரிக்கும் இடையில் சந்தியிலிருந்து பிரதான வீதயின் இடப்பக்கமாக 3ஆவது ஒழுங்கையில் (அற்லான்ரா வைத்தியசாலைக்கு நேர் எதிராக) 75m தூரத்தில் 10 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்கு உள்ளது.

**- 021 224 0798, 075 017 1214**


# தீவுகளுக்கு பங்களாதேஷ் பதிலடி

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெற்று முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்விக்குப் பதிலடி கொடுத்தது பங்களரதேஷ் அணி.


**கலை | வர்த்தகம்**
**தொழில் நுட்பம்**
**NEC**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி | மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
ஆரம்பம்: 06.01.2019
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன
**A/L 2021**




மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ரி20 தொடரின் முதலாவது ஆட்டத்தில் தீவுகள் வெற்றிபெற்றிருந்த நிலையில் இரண்டாவது ஆட்டம் நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 4 இலக்குகளை இழந்து 211 ஓட்டங்களை விளாசியது. டாஸ் 60 ஓட்டங்களையும், மகமதுல்லா 43 ஓட்டங்களையும், அணித் தலைவர் சகிப் அல் ஹசன் 42 ஓட்டங்களையும், சர்கார் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கொட்ரெல் 2 இலக்குகளையும், தோமஸ் மற்றும் அலின் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

120 பந்துகளில் 212 ஓட்டங்கள் என்ற இலக்குடன் பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் 175 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 36 ஓட்டங்களால் வெற்றிபெற்றது பங்களாதேஷ். பந்துவீச்சில் சகிப் அல் ஹசன் 5 இலக்குகளைக் கைப்பற்றினார். அவர் ஆட்ட நாயகனாகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

(ம)


வாருங்கள்...
**விடுதலைப் பெருவிழா**
இலவசம்...

கவலை, கண்ணீர்,
தீராத வியாதி,
பிசாசின்பிடி,
பில்லி-சூனியக்கட்டு, பாவங்கள்,
பரம்பரை சாபங்கள்,
அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து

**இயேசு விடுதலை கொடுக்கிறார்!!!**

**இடம்: நாற்சதுர சுவிசேஷ சபை,**
**முத்திரைச் சந்தி, நல்லூர்.**

**22, 23**
**மார்கழி 2018**
**மாலை 4.00**

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை, நல்லூர்.
673, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்.


## மரண அறிவித்தல்



### திருமதி அன்னபூரணா இராசதுரை

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

யாழ். பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னபூரணா இராசதுரை 13.12.2018 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - மரியப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அன்னமுத்து - கணபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசதுரையின் (முன்னாள் பிரதி குடிவரவு, குடியகல்வு அதிகாரி) அன்பு மனைவியும் சுரேசன், சுதாகன், சுகுணன், சுமித்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான பாபறா நேசம்மா, இராசதுரை, பிலோமினா, இராசமுத்து, மேரிதிரேசா, தேவசகாயம், பீற்றர் இம்மானுவேல் மற்றும் மேரி மெற்றில்டா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜலின், ரோஷினி, தாரணி, சுகன்யா ஆகியோரின் அருமை மாமியாரும் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், மெக்டலின், சூசைப்பிள்ளை, அருளப்பா, பேணடேற் யோகேஸ்வரி, பெனடிக்ற், சின்னதுரை, செல்வரட்ணம், அன்னம்மா, சுப்பிரமணியம் மற்றும் டறோசியா, அன்னலட்சுமி, சரஸ்வதி, குமாரவேலு, மகேஸ்வரி, குணமணி, நாகேஸ்வரி, தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், டானியேல், பியங்கா, அமெண்டா, ஓவியா, விவேகன், அற்புதா, அஞ்சலி, அமலி, கீதன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனை 22.12.2018 சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் புனித அந்தோனியர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 21927) (14,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

**சுமித்திரன் - 077 4737269/ பண்டத்தரிப்பு - +94212051949**

## மரண அறிவித்தல்



### திருமதி பரமேஸ்வரி பத்மநாதன்

யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு விநாயகர் வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி பத்மநாதன் 15.12.2018 (சனிக்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை பத்மநாதனின் துணைவியாரும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி இளையதம்பி தம்பதியரின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி பொன்னுத்துரை தம்பதியரின் அன்பு மருமகளும், நர்மதா, இந்திரகுமார், நிரஞ்சனா, இந்திரராஜ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகுமார், சுவேந்தினி, சாந்தரூபன், ரோகினி ஆகியோரின் அன்புமிகு மாமியும், கோமளாதேவி (இளைப்பாறிய பிரதி அதிபர்), விமலாதேவி, பவானி, கமலாதேவி, Dr.ஸ்ரீதரன், ஸ்ரீரஞ்சன் (ஆசிரியர்), ஸ்ரீவாசன், கலாவல்லி, இளம்பூரணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (சட்டத்தரணி), லோகேந்திரன், கணேசு, சிவகுமாரன், ஜெனனி, லலிதாகுமாரி, ஆனந்தரகுபதி, ஸ்ரீஸ்கந்தராஜா, ரமணி ஆகியோரின் மைத்துனியும், சின்னராசா, சறோஜினிதேவி ஆகியோரின் மைத்துனியும், சிவிதா, தக்ஷிதா, சாதனா, கஜானன், செவ்வேள், ஆதிரை, விஸ்வா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22.12.2018 சனிக்கிழமை பி.ப 5.00-8.00 வரை OM Funeral Care at 445, KENTON ROAD, KENTON, HARROW, HAB OXY யில் பார்வைக்கு வைக்கப்பட்டு, 23.12.2018 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2.00 - 4.00 HENTON CREMATORIUM, HOLDERS HILL ROAD, LONDON, NW 7 1NB யில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: ப.இந்திரகுமார் (மகன்)**

**0044 74 29 180 867**


**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**
* அலுவலக உதவியாளர் (OES)
* திறந்த பல்கலைக்கழக சட்டமாணி போட்டிப் பரீட்சை

| பிரதிசனி | பிரதி ஞாயிறு |
| --- | --- |
| 9.00 - 2.00 pm | 9.00 - 1.00 pm |

விரிவுரையாளர்கள்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்
மற்றும் துறைசார் விரிவுரையாளர்

**நாவலர்**
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ் நகர்
T.P. 077 469 6695


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.